சீரணி

(கிராம நலம்)

கதிர் 15] சனவரி 1970 [நெல் 4



பொங்கல் இதழ்

தமிழ்நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத் திங்கள் வெளியீடு



பொங்குக
பொங்கல்!

மூக்கனியின் சாறெுப்ப
இனித்திடும் மூன்று நாட்கள்!

முதல் நாள்: பயிர் வளர ஒளிதந்த
பகலவனுக்குப் பொங்கல்!

இரண்டாம் நாள்: உழவுக்கு உறு
துணையாயிருந்த மாடுகளைச்
சிறப்பிக்க மாட்டுப் பொங்கல்!

மூன்றும் நாள்: உழவன் தன்
உழைப்புக் கூட்டாளிகளான
மாடுகளுடன் மகிழ்ந்து விளை
யாடும் மஞ்சி விரட்டு!

இங்ஙனம் இயற்கையோடு
இயைந்து உழைப்பின் பெருமையை
உலகுக்கு உணர்த்திடும் உழவர்
திருநாளே பொங்கற் பெருநாள்!

'சிரணி' பொங்கல் இதழைச்
சிறப்பிக்கக் கவிதைகள், கட்டுரைகள்
தந்தோருக்கு உளமார்ந்த நன்றி!

'நல்லன யாவும் பொங்குக!'
என உலகோடு
சேர்த்து உவப்போடு
வாழ்த்துவோமாக!

— ஆசிரியர்

சீரணி வாழ்த்துகிறது !

தங்கமழை ஒளித்தூறல்
தணல்பரி தி கீழ்வாசல்
பொங்கல்தை வந்ததென்ற
புதுச்செய்தி தந்துவந்தான்!

மகரந்தத்தேன் கிண்ணமலர்
வருந்தைக்கு வாசமிடப்
புகுதென்றல் பனிக்குளிர்ச்சி
பூசிமனம் மகிழ்வேற்கும்!

இந்நாள்—
சேரணிகள் பலவற்றுல்
தீந்தமிழும் தாயகமும்
பாரினிலே முதன்மையுறப்
பாடுபடும் பங்கறிவீர்!

எதுசெய்வோம் நாட்டுக்கே
எனுந்துடிப்புப் பொங்கட்டும்!
எதுநாட்டால் எனக்குவரும்
எனுமாசை மங்கட்டும்!


ஓரணியில் திரண்டுவந்தே
உழைப்புநலன் பொங்கலிடச்
சீரணிதான் அழைத்தும்மை
திருநாள்வாழ்த் தளிக்கிறது!

— கவிஞர் ஈரோடு தமிழன்பன்





ஏழையின் சிரிப்பிலே இறைவன்



பெருமைக்குரிய குருநானக்கின் ஐநூறும் ஆண்டுவிழாவில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்குத் திருக்குறள் என்ற அறநூலைத் தந்தவர் திருவள்ளுவர். அவருடைய இரண்டாயிரம் ஆண்டுவிழாக் கொண்டாடப்படும் இந்த ஆண்டில் குருநானக்கின் ஐநூறும் ஆண்டுவிழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



பஞ்சாபுக்கும் தமிழ்நாட்டுக்கும் எத்தனையோ ஒற்றுமைகள் இருக்கின்றன.

எனக்கும் உங்கள் முதலமைச்சர் குர்நாம்சிங்கிற்கும் ஏற்பட்டுள்ள ஒற்றுமையை மட்டும் நான் குறிப்பிடவில்லை. ஜாதி, மத, மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் என்ற கருத்தைத் தமிழ்நாட்டில் வள்ளுவர்

கலைஞர் மு. கருணாநிதி



'குருநானக்' பள்ளியில்
சேர்க்கப்படுதல்

வழி நின்று அறிஞர் பெருமக்கள் கூறி வருகிறார்கள்.

பஞ்சாபிலும் குருநானக் வழி நின்று அதே கருத்தை முழங்கி வருகிறார்கள்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் முதல் கட்டமாகத் தமிழ்நாட்டில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். பஞ்சாப் வீரன் பகவத்சிங்கும் தூக்குக் கயிறை முத்தமிட்டான். எங்கள் தமிழ் நாட்டில் வெள்ளையர்களின் கொலை வெறிக்கு ஆளான, ஊமைத்துரை - பெரியமருது - சின்ன மருது - ஆகியோரையும், சுகதேவ், ராஜகுரு ஆகியோரையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். உடலெல்லாம் புல்லரிக்கிறது. அந்த வீரர்கள் இரத்தம் சிந்திய மண்ணே வணங்குகிறேன்.

எங்கள் மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்ற பெயர் வைக்கவேண்டுமென்று உண்ணாவிரதம் இருந்தார் சங்கரலிங்கம். உண்ணாவிரதத் திலேயே அவர் இறந்து போனார். இப்போது அல்ல; பத்து வருடங்களுக்கு முன்பு!

இங்கேயும் உண்ணாவிரதம் இருந்த பெருமான் என்ற பெரியவர் உயிர் துறந்தார்.

பிரச்னையில் நான் நுழைய விரும்பவில்லை. அந்த வீரர் பிறந்த இந்த மண்ணை நான் மண்டியிட்டுத் தொழுகிறேன்.

ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த குருநானக் தன்னுடைய கொள்கைகளை நிறைவேற்றுவதில் எவ்வளவோ சிரமங்களைச் சந்தித்தார். சிறைச்சாலையில் கூட அடைக்கப்பட்டார். அதுவும் அவருக்கு வசதியாகப் போயிற்று. அங்குள்ள கைதிகளுக்குத் தன் கொள்கைகளைப் பரப்பினார். இலட்சிய வாதிகளுக்குச் சிறைச்சாலையை விட விருப்பமான இடம் வேறு எதுவுமில்லை. சில நேரங்களில் முதல் மந்திரிப் பதவியைவிட நான் முன்பு அடிக்கடி போய்வந்த சிறைச் சாலையே எனக்கு மேலாகத் தெரிகிறது.

குருநானக் சிறையையும் சிந்தனைச் சோலையாக மாற்றினார். அப்படிப்பட்ட ஆற்றல் அவர் இளம் வயதிலேயே பெற்றிருந்தார். சூரியன் உதிக்கும்போதே இருளை விரட்டிக் கொண்டுதான் உதிக்கிறது. அதுபோல, குருநானக் சிறு வயதில் வளரும்போதே மூட நம்பிக்கை இருளை விரட்டிக்கொண்டு வளர்ந்தார்.



இளைஞர் நானக்கிற்குப் பூணூல் போடுவதற்கு அவருடைய வீட்டார் எல்லா ஏற்பாடுகளும் செய்தனர். அதை அவர் மறுத்தார்.

அன்பையும், மனிதாபிமானத்தையும், அறிவையும் நூலாகத் திரித்து அணிந்து கொள்ளுங்கள். அந்தப் பூணூல்தான் புனிதமானது. இது தேவையில்லை. இப்படி விளக்கம் சொன்னார்.

ஒருமுறை, அவர் கூடப்பு மிகுதியால் கடவுள் சந்நிதானத்திற்கு

நேராகக் காலே நீட்டிக் கொண்டு தூங்கிவிட்டார். அதுகண்டு மதவாதிகள் திடுக்கிட்டனர். அவரை எழுப்



பிக் கண்டித்தனர். கடவுள் எங்கே இல்லையோ அந்தப் பக்கமாக என் காலேத் திருப்பிவிடுங்கள் என்று அவர் தெரிவித்தார். கண்டித்தவர்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

இந்து, முசுலீம் ஆகிய இருமதங்களே இணைத்து ஒரு புதுமதம் உருவாக்கினர்.

எங்கள் தமிழ் நாட்டில் சேலம் என்ற ஒரு மாவட்டம் இருக்கிறது. அங்கே இரண்டு மாஞ்செடிகளே ஒன்றுக இணைத்து வளர்ப்பார்கள். அதில் கிடைக்கும் பழத்திற்கு 'ஒட்டு மாம்பழம்' என்று பெயர். மிகுந்த சுவையாக இருக்கும் அந்தப்பழம். அந்தப் பழம் போன்றதுதான் சீக்கிய மதமும்.

பெரியவர்களுக்கு விழா எடுப்பது மட்டும் போதாது. குருநானக் பெயரில் தமிழ் நாட்டில் ஒரு கல்லூரி அமைக்கிற முயற்சிக்குத் தமிழக அரசு ஆக்கமளிக்க முன்வந்துள்ளது.

தமிழ் நாட்டில் நடைபெறும் நானக் விழாக்களில் நாங்கள் மகிழ்வுடன் கலந்து கொண்டிருக்கிறோம்.

விழா-மகிழ்ச்சி - கொண்டாட்டம்-இவைகளோடு நின்று விடாமல் பெரியவர்கள் வகுத்த நெறியில் நின்று நாமும் வாழவேண்டும். சமுதாயத்தையும் வாழ வைக்க வேண்டும்.

நாட்டில் எத்தனேயோ மதவாதிகள் தோன்றினர்கள். ஆனல் இன்னும் பேதங்கள் மறையவில்லே.

எத்தனேயோ சீர்திருத்தவாதிகள் தோன்றினர்கள். இன்னும் சாதிச் சிக்கல் தீரவில்லே.

எத்தனேயோ பகுத்தறிவு வாதிகள் தோன்றினர்கள். இன்னும் மூட நம்பிக்கை ஒழியவில்லே.

இதற்கெல்லாம் காரணம் என்ன? அதை நாம் ஆராயவேண்டும். நல்ல மருந்து இருந்தும் நோய் தீரவில்லே என்ருல் என்ன காரணம்?

டாக்டர் கொடுத்த மருந்தை நோயாளி சாப்பிடவே இல்லே என்ருல் நோய் தீராது!

பெரியவர்கள் வகுத்த கொள்கைகள் புத்தகங்களில் இருந்தால் மட்டும் போதாது! அவைகளேப் படிக்கவேண்டும். படித்தபடி நடக்க வேண்டும். மற்றவர்களுக்குப் பரப்ப வேண்டும்.

சூரியன் ஒளியைத் தருகிறன். அதில் விதைப்பவர்கள் விதைத்துக் கொள்ளவேண்டும். வானம், மழையைத் தருகிறது. அதை வயலுக்குப் பயன் படுத்திக் கொள்கிறவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒளியோ, மழையோ, மனிதனின் கையைப் பிடித்து இழுத்து, ''ஏ, சோம்பேறி! என்னேப் பயன்படுத்திக் கொள்'' என்று கெஞ்சுவதில்லே. அதைப் போலவே பெரியவர்கள் ஒளி வழங்கினர்கள். கருத்து மழை பொழிந்தார்கள். அதனேப் பயன் படுத்திக்கொள்ள நாம் தவறிவிட்டோம். அது நம் குற்றமே தவிர அவர்கள் குற்றமல்ல.

அன்பையும் மனிதாபிமானத்தையும் கொன்று தின்கிறவன் ஆண்டவனே ஏப்பம்போல் வெளியே விட்டு விடுகிறன்.

அன்பையும் மனிதாபிமானத்தையும் அள்ளி வழங்குகிறவன் ஆண்டவனேத் தனக்குள் அடக்கி வைத்துக் கொள்கிறன். அவனே, ஆண்டவன் ஆகிவிடுகிறன்.

இப்படிச் சுலபமாக ஆண்டவனுக வழி இருக்கும்போது அதைப் புறக்கணித்துவிட்டு மனிதர்கள் ஆண்டவனே எங்கேயோ தேடி அலேகிறர்கள்.

ஏழையின் சிரிப்பில் —
குழந்தையின் மழலேயில் —
பாட்டாளியின் வியர்வையில் —

பெண்ணின் கற்பில் —
ஆடவனின் பண்பில் —
விவேகியின் விழியில் —
விஞ்ஞானியின் அறிவில் —

ஆண்டவன் இருக்கிறான். அதை விட்டுவிட்டுக் குருட்டு மனிதன் இருட்டு அறையில் கறுப்புப் பூனையைத் தேடுவதுபோல் சிலர் கடவுளைத் தேடி அலைகிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் கடவுளின் உண்மை விளக்கத்தை அளித்தவர் தான் குருநானக்.

சமூகத்தொண்டு காலத்திற்குக் காலம் மாறுகிறது. காட்டுமிராண்டிகளாக இருந்த மக்களுக்கு நாகரீகம் போதிக்கச் சிலர்தேவைப்பட்டதுஒரு காலம். நாகரீகம் பெற்றவர்கள் தங்களுக்குள் ஆயிரம் பேதங்களை வளர்த்துக் கொண்டனர். அதைச் சீர்படுத்தச் சிலர் தேவைப்பட்டது ஒரு காலம். சீர்திருத்தவாதிகள் சிலர் பலராக வளர்ந்தனர். அந்தப் பலருக்குள் மோதுதல் ஏற்பட்டு அதைத் தீர்த்து வைக்கச் சமரச வாதிகள் தேவைப்பட்டது ஒரு காலம்.

பச்சை மாமிசம் சாப்பிட்ட மனிதன், சமைத்துச் சாப்பிடப் பழக்கப் படுத்தப்பட்டான். சமைத்துச் சாப்பிடும்போது அவனைப் பசிப்பிணியிலிருந்து மீட்பது மற்றொரு வேலையாகி விட்டது.

குழந்தைகளைத் தெய்வம் போல் போற்றுவதும் கொண்டாடுவதும் ஒரு பக்கம்!

அதிகக் குழந்தைகள் பெருதே என்று கட்டுப்பாடுப் பிரச்சாரம் செய்வது மற்றொரு பக்கம்!

நாட்டைக் காக்க வீறு கொண்டெழுங்கள் என்று போர் முரசு கொட்டுவது ஒரு பக்கம்!

உலகின் அமைதிப் புரு பறக்க விடுவோம் என்று சபதம் செய்வது மற்றொரு பக்கம்!

இத்தகைய மாறுபட்ட சூழ்நிலைகளுக்கிடையேதான் மக்கள் பணியாற்ற மனிதகுல மாணிக்கங்கள் பிறக்கிறார்கள்.

அந்தப் புத்தொளிதான் 1469-ஆம் ஆண்டு மிகுந்த எழிலுடன் கிளம்பியது.



எல்லா மதங்களும் ஒன்றே!
எல்லா மனிதர்களும் ஒன்றே!
உண்மை எல்லாவற்றுக்கும்
மேலானது. ஆனால் அதற்கும்
மேலானது ஒன்றுண்டு. அதுதான்
உண்மையின் வழிவாழ்வது.

இதைத்தான் குருநானக் போதித்தார்.

ஒரே கடவுள்;
சமயச் சடங்குகள் வீணானவை;
சாதி சமய வேறுபாடு கூடாது;

இந்தக் கொள்கைகளை அவர் முழங்கினர்.

ஐநூறு ஆண்டுகள்... உருண்டு ஓடிவிட்டன. ஆறுகள் திசை மாறி ஓடுகின்றன. அருவிகள் தடம் மாறிவிட்டன. மலைகள் இருந்த இடம் பள்ளத்தாக்குகளாக மாறிவிட்டது. கடல் அலைகள் சில நகரங்களை அழித்துவிட்டன. காடுகள் மணல் வெளிகளாகிவிட்டன. மணல் வெளிகள் நந்தவனங்களாகி விட்டன. சந்திரனைத் தன்னிடம் அழைத்த மனிதன், அது வராத காரணத்தால் அதனிடமே சென்றுவிட்டான். ஐநூறு ஆண்டுகளில் இயற்கையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டாலும் குருநானக் போன்ற பெரியவர்களின் கீர்த்தியிலோ, பெயரிலோ எந்தமாறுதலும் இல்லை. அப்படியே நிலைத்துவிட்டார்கள்.

குருநானக்கின் பெயர் சொல்லிப் பறவைகள் பாடுகின்றன.

அந்தப் பாட்டைக் கேட்டு, மேகங்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன.

நானக்கின் கீதம் காற்றிலே மிதக் கிறது.

அந்தக் காற்று தமிழ் நாட்டைத் தழுவுகிறது.

அந்தத் தழுவலிலே நான் என்னை மறக்கிறேன்.

பஞ்சாப் மக்களே! உங்களோடு ஒன்றி விடுகிறேன்.

உங்கள் எதிரே நிற்கிறேன்.

என்னை உங்கள் முன்நிற்க வைத்த பஞ்சாப் முதல்வருக்கு என் நன்றி.

வாழ்க குருநானக் புகழ்!

அனைவர்க்கும் வணக்கம்.

[சண்டிகாரில் குருநானக் அவர் களின் 500ஆவது ஆண்டு பிறந்தின விழாவில் தமிழக முதல்வர் ஆற்றிய உரை. 27-11-69.]

விமானம்மூலம் மருந்து தெளித்தல்

நன்செய் நிலப் பயிர்களைப் பூச்சி, பூஞ்சாள நோய் தாக்குவதால், ஏராளமான பயிர்கள் நாசமடைந்து,



அறுவடை குறைந்து, நாட்டிலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட ஏது வாகிறது. இந்நோய், பயிர்களைத் தாக்காவண்ணம் பாதுகாக்க, குறைந்த செலவில், அரசாங்கம் மருந்தைத் தெளிக்க ஏற்பாடு செய் துள்ளது.

கோவை மாவட்டம், ஈரோடு விவசாயக் கோட்டத்திலுள்ள காளிங்கராயன் பாசனப் பகுதிகளி லுள்ள சுமார் 6000 ஏகரா நன்செய்ப் பயிர்களுக்கும், தாராபுரம் வட்டம் பழைய அமராவதி பாசனப் பகுதி களில் உள்ள சுமார் 5200 ஏகரா நன்செய்ப் பயிர்களுக்கும் கடந்த மாதம் (நவம்பர்) 26ஆம் தேதி முதல் 30ஆம் தேதிக்குள் ஈரோடு கோட்ட மாவட்ட விவசாய அலு வலரின் நேர்ப் பார்வையின்கீழ், 'ஹெலிகாப்டர்' மூலம் பூச்சி - பூஞ்சாளக் கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டன. ஹெலிகாப்டர் மூலம் மருந்து பரவலாகவும், சீராக வும் தெளிக்கப்படுகிறது.

ஓர் ஏகராவிற்கு ஆகும் செலவு சுமார் ரூ. 11 அல்லது ரூ. 11·50 தான். வேறு முறைகளில் மருந்து தெளிக்கப்பட்டால் இன்னும் கூடுத லான செலவாவதுடன், மருந்தைச் சீராகத் தெளிக்கவும் முடியாது.

விவசாயிகள், விவசாய அலுவலர் களை நாடி, நன்மை பெறுவதுடன் வீணாச்செலவையும் பெருக்க, அரசின் இம் முயற்சிக்கு நாடெங்கிலும் நல்லா தரவு தருவது, விவசாயத்தில் ஏற்பட் டுள்ள 'புரட்சி' ஆகும்.



படங்கள்: மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் அவர்கள் ஹெலிகாப்டரில் இருந்து மருந்து தெளித்தலைப் பார்வையிடல்.

தகவல்:

திரு. சி.என். பாலகிருட்டிணன்.

கவியரங்கம்

பொங்குலோ பொங்கல்!



தலைவர்:
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

பங்கு பெறுவோர்:

புலவர் புலமைப்பித்தன்
கவிஞர் ஆனந்தம்
கவிஞர் பொன்னடியான்
கவிஞர் சாமி பழனியப்பன்
புலவர் தமிழ்ப்பித்தன்

தலைமைக் கவிதை :



பாவலர் மா. முத்துசாமி, பி.ஏ., பி.டி.
உள்ளாட்சித்துறை அமைச்சர்

செய்ய தமிழ்நாட்டீர்!
'சேரணி'யின் வாசகர்காள்!
தையின் முதல்நாளில்
தமிழர் திருநாளில்
வரிவடிவக் கவியரங்கம்
வழங்கும் கவிக்குலத்தீர்!
அரங்கம் அமைத்திட்ட
'சேரணி'யீர்! அனைவருக்கும்
அன்னைத் தமிழ்மொழியை
அன்புடனே நான்வணங்கிச்
சொன்னேன் நல்வாழ்த்து!
இன்னும் சிலசொல்வேன்:

* * * *

வையத் திருள்கிழித்து
வாட்டும் பனிபோக்கி
உய்யும் உயிரினத்திற்
கொளியூட்டி வாழ்வூட்டும்
செழும்பரிதி தீப்பந்தாய்
எழுந்தான் தொடுவானில்!
உழுதுண்டு இவ்வுலகை
உய்வித் தருளுகிற
ஏர்வேந்தர் தாம்பெற்ற
இரும்பயனைப் பகிர்ந்தளித்துப்
பார்முழுதும் மகிழ்பொங்கத்
தாமகிழும் திருநாளே

தையின் முதல்நாளாம்!
தமிழர் திருநாளாம்!
நெய்ப்பொங்கல் உண்ணும்
நிகரில் திருநாளாம்!
சீரார் செழுந்தமிழர்
புத்தாண்டுப் பெருநாளாம்!
'வாராது போல்வந்த
மாமணியை'ப் போற்றிடுவோம்!
ஊரில் வளம்பொங்க
உள்ளத்தே களிபொங்கச்
சீரகம்போல் புத்தரிசிப்
பால்பொங்க இல்லமெலாம்
பொங்கலோ பொங்கலெனப்
பூரிப்பால் விண்ணதிரச்
சங்குக் கழுத்தழகுத்
தையலர்கள் வாழ்த்திடுவர்!
கதிரொளியால் வையகத்தைக்
காக்கும் செழும்பரிதி
தனைவாழ்த்தி ஏருழவர்
தங்கள் நலம்வாழ்த்தி
நனியின்பத் தமிழ்வாழ்த்தித்
துறைதோறும் நந்தமிழின்
இன்ப மணங்கமழ
எண்ணிநிதம் தொண்டுசெயும்
நல்லரசின் சீர்த்திக்குப்
பல்லாண்டு நாம்பாடி
வெல்லக் கவிப்பொங்கல்
விருந்துண்போம்! அன்புடனே
கன்னித் தமிழ்பாடும்
கவிஞர், ஐவரிங்கே
இன்பத் தமிழ்க்கவிதை
இசைக்க இசைந்துள்ளார்;
நற்றமிழக் கவிச்செல்வர்
தம்மைமனக் கண்முன்னே
கற்பனையால் கண்டே
கவிதைகளே நாம்சுவைப்போம்.

* * * *

அறிமுகம் :

செந்தமிழப் பித்தோடு
தேன்கவிதை செய்பீத்தும்
எந்நாளும் கொண்டு
இனியதமிழ்த் தொண்டுசெயும்
கவிபுலமைப் பித்தனிங்கு
கற்கண்டுத் தமிழாலே
புவிமகிழத் தமிழ்ப்பொங்கல்
படைக்கின்றார்! நாம்உண்போம்!





வானரும்பு முத்துக்கள் மழையாய் மண்ணில்
வாய்ப்பதனல் நெல்முத்து விளையும்; துள்ளு
மானனைய விழிமாதர் முத்தம் கேட்டு
வங்கத்து முத்திறைப்பார் நெய்தல் நாட்டார்!
கானரும்பு முல்லைப்பூ முத்து நல்ல
கார்காலம் பார்த்திருந்து மலரும்! அண்ணு
தேனிரும்புச் சேலத்தில் ஆழ்ந்தெ டுத்த
திருமுத்து நீஎன்றே வணங்கு கின்றேன்!

கடற்பொங்கல் பௌர்ணமியில்!; இன்பப் பொங்கல்
காதலர்க்கு முதலிரவில்!; வாள்போல் தாழை
மடற்பொங்கல் மணப்பொங்கல்!; கல்விப் பொங்கல்
மதிப்பொங்கல்!; கலைஞரவர் ஆட்சி கண்டு
குடற்பொங்கல் சிலபேர்க்கு! மக்கட் கெல்லாம்
குளிர்நிலவுப் பொங்கல்தான்! அண்ணு பேச்சில்
உடற்பொங்கல், உளப்பொங்கல், பூரிப் பாலே
உள்ளஅணு ஒவ்வொன்றும் பொங்கல் கண்டோம்!

புலவர் புலமைபித்தன்

வெண்பொங்கல்! சர்க்கரையின் பொங்கல் எல்லாம்
வெறும்பொங்கல்! பருவத்தால் மலர்ந்த பெண்ணின்
கண்பொங்கல், ஒலியில்லா மொழிகள் பேசும்
கதைப் பொங்கல்! அதுசேர்க்கும் இன்பம்கூடப்
பண்பொங்கல் நிறைந்தகவி அமுத மான
பசுந்தமிழின் பொங்கலின்ன ஒப்ப தில்லை!
விண்பொங்கல் மழை;அதன்ன அமுதம் என்று
விளம்பியநம் வள்ளுவர்சொல் தமிழ்ப்பொங் கல்தான்!

பாற்பொங்கல் நமக்கெல்லாம் வள்ளு வர்முப்
பாற்பொங்கல் அதுதானே! அந்த நாளில்
நூற்பொங்கல் நுழைபுலத்தின் பொங்கல் கண்ட
நுட்பத்தால் இலக்கியங்கள் படைத்தார்! போரில்

வேற்பொங்கல், வாட்பொங்கல் எனவி ளைந்த
வீரத்தின் பொங்கல்தான், தமிழர் வாழ்வில்
பாற்பொங்கல் பொங்குவதைப் போலப் பொங்கப்
பனிமலையில் முக்கொடிகள் பறக்க விட்டார்!

கணுவெல்லாம் இனித்திருக்கும் பூங்க ரும்பைக்
கடுப்பவினித் தமிழர்தம் வாழ்க்கை தன்னில்
அணுவெல்லாம் தமிழினிமை காணு கின்ற
அந்நாளே தமிழ்ப்பொங்கல் படைக்கும் நாளென்(று)
உணர்ந்ததனால் நீதிமன்றம், கல்விக் கூடம்
உள்ளபிற அனைத்திலுமே தமிழ்த்தேன் பொங்கத்
துணிவான செயல்புரிந்த கலைஞர் ஆட்சி
தொடர்ந்துபடைப் பதுதானே தமிழின் பொங்கல்!

நல்லுழைப்புப் பொங்கலினை நாட்டிற் காக
நாள்தோறும் படைப்பவர்கள், சேரன் ஏந்தும்
வில்லினைப்போல் பசிப்பொங்கல் வயிற்றில் பொங்க
விலாமுறிந்து வளைந்திருக்கும் துயரப் பொங்கல்!
இல்லாமற் செய்வதுதான் எதிர்கா லத்தில்
இனித்தமிழர் காணவுள்ள இனிப்புப் பொங்கல்
எல்லோரும் சமமென்ற நிலையில் மக்கள்
இதயத்தில் தமிழ்ப்பொங்கல் படைப்போம் நாளை!!

* * * *

தலைவர் :

உள்ளம் களிகொள்ள
ஒப்பற்ற தமிழ்ப்பொங்கல்

தெள்ளு சுவைக்கவிதைத்
தேன்குழைத்து நம்புலமைப்

பித்தனவர் தந்திட்டார்
பேரின்பம் பெற்றேம்நாம்!

தித்திக்கும் செந்தமிழில்
சீர்திருத்தக் கொள்கைகளை

வித்தாரக் கவிதைகளாய்
மேதக்க ஓவியமாய்

நித்தம் நமக்களித்து
நெஞ்சில் இடங்கொண்ட

பிரச்சார அலுவலராம்
ஆனந்தப் பெருங்கவிஞர்

தரும்புதுமைப் பொங்கலினைச்
சற்றே சுவைத்திடலாம் :



புதுமைப் பொங்கல்

அன்பெனும் அரிசியும் இன்பப் பாலும்
பண்பெனும் சீனியும் பாங்குடன் கலந்தே,
புதுமைப் பொங்கலைப் புசித்திட அழைத்தீர்!
முதுமைத் தமிழெனில் பதுமையும் உயிர்பெறும்
கிண்கிணி நாதம் வெண்கலக் குரலில்
அண்ணன்போல் முழங்கிடும் அருமைப் பெரும!
புத்தொளி உமிழும் முத்துச் சரமே!
சித்திர அரங்கின் வித்தகத் தலைவ!
முத்தமிழ் வாழ நித்தம் உழைத்திடும்
சத்தி படைத்தவா! மெத்த வணங்கினேன்!

கவிஞர் ஆனந்தம்

''இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமெனும் நல்லாள் நகு''மென நேர்மையால்
வள்ளுவன் உரைத்த வாய்மைக் குறளில்—
உள்ள உண்மைகள் தெள்ளிதின் உணர்ந்தோம்!
வான்மழை பொய்ப்பினும் வரையாது வழங்கிடத்
தான்முந்தி வந்திடும் தரைக்கீழ் ஊற்றுகள்!
நிலத்தடி நீரை நிறையமேற் கொணர்ந்தால்,
வளத்துடன் பசுமை வாழ்ந்திடச் செய்யலாம்!
உலகினை ஊட்டி வளர்த்திடத் தமிழகம்
பலதுறை உணவுப் பண்டம் குவித்திடும்!
தன்னிறை வடைந்து, தளரா உழைப்பினுல்
முன்னிலும் பன்மடங்கு முயற்சியும் ஊக்கமும்
ஆக்கமும் அளித்திடும் அரசு வாய்த்ததால்,
தேக்கிய மகிழ்வில் திளைத்தனர் மக்கள்!

திமையும் நன்மையாய்த் தேற்றிடும் திறமையில்
நாமிகச் சிறந்ததால், நாட்டினில் தோன்றிய
வறண்ட நிலைமையை மாற்றிட - நீர்மிகத்
திரண்டிட ஆழமாய்ச் செய்ததால் தழைத்தோம்!
கானல்நீர் என்று கருதிய பற்பல
மாண்புயர் திட்டம் மலர்ந்து மணந்திட—
மக்களுக் காக, மக்களா லான,
மக்களின் அரசு தக்கதாய்ச் செயல்படும்!
திருநாள் வாழிய சீருடன்;
வருநாள் இன்பம் பெருகிட வாழ்கவே!

* * *

தலைவர் :

ஆனந்தக் கவிஞரவர்
அளித்திட்ட தெவிட்டாத
தேனமுதக் கவிசுவைத்தோம்
சிந்தை மகிழ்வுற்றோம்

மூல்லைச் சரமென்னும்
முத்தமிழ ஏடேந்தி
நல்ல கவியமுதம்
நாடோறும் நல்குகிற
பொன்னடியான் பகுத்தறிவுப்
பொங்கலினைப் படைக்கின்றார்
அன்புடனே அப்பொங்கல்
அள்ளிப் பருகிடுவோம் :





மாமுத்தே! எங்கள் மணிமுத்தே! நின்ருெளிரும்
பாமுத்தே! பாபடைத் தேன்!

இருக்கும் அறிவைப் பயன்படுத் தற்கும்
இன்னும் அறியாரிந் நாட்டிலுண்டு!
எண்ணித் தெளிந்துயர் ஏற்றம் பெறுதற்கும்
எண்ணு மனிதரோ கோடியுண்டு!
எருக்கிலே கூடப் பயன்படும்! ஏஏ...
இந்த மனிதரும் வாழ்வதோ?
இன்றைக்கும் இங்கிந்த மூடத் தனம்ஆடி
எக்காளம் போடநாம் வீழ்வதோ?

பொங்கல் பகுத்தறி வெண்ணத்தில் பொங்கட்டும்
புன்மையிந் நாட்டினில் மங்கட்டும்!



தன்னே உணரும் தகுதியி லாப்பல
தற்குறி யாளரிந் நாட்டிலுண்டு!
தாய்த்திரு நாட்டிற் குழைக்கும் திறனிலாத்
தக்கை மனிதரோ கோடியுண்டு!
இன்னும் கைநாட்டுகள் எண்ணிக்கை ஏராளம்!
என்றவர் நெஞ்சொளி ஏந்துமோ?
எங்கும்முற் போக்கின் முழக்கம் செயல்பட
இந்நிலம் மலர்ச்சியில் நீந்துமோ?

மங்கலப் பொங்கல் மணமோ பரவட்டும்!
மடமை இருளதில் கருகட்டும்!

சாதிச் சகதியில் ஒற்றுமை மறந்து
சாயும் மனிதரோ நாட்டிலுண்டு!
சார்ந்த மதத்தினுக் காக வெறிகொண்டு
சண்டை இடுவோரோ கோடியுண்டு!

வீதிக்கு வீதி வலம்வந்தும் மக்களே
வேற்றுமைக் கூற்றுவன் மாய்ப்பதோ?
வெல்லற் கரியமா வீரப் பரம்பரை
வெந்து குமைந்துயிர் தீய்வதோ?

எங்கும் பகுத்தறி வோசை முழங்கட்டும்
இனியபொங் கற்சுவை வழங்கட்டும்!

வேளைக்கு வேளை வறுமைச் சுழல்பற்ற
வேதனை சுவைப்போர் நாட்டிலுண்டு!
வெற்று வயிற்றினர் அன்னவர் வாழ்க்கையில்
விளங்கா உணர்வுகள் கோடியுண்டு!
நாளை புலரும் பொழுதிற் புதுமைகள்
நாற்புற மும்வந்து சூழட்டும்!
நம்மோர் பகுத்தறி வாளர் பணிகண்டு
நலியும்பிற் போக்கினர் வீழட்டும்!

செங்கரும் பின்சுவை நெஞ்சினில் தங்கட்டும்
சீர்திருத்தப் பணி தேங்கட்டும்!

* * * *


தலைவர் :

புன்மை இருள்மங்கிப்
பொங்கிடுக பகுத்தறிவு
என்னும் கவிமுழக்கம்
எழுப்பினர் பொன்னடியான்;
அன்னவர்தம் கவிதையெனும்
அறிவுக் கதிரொளியில்
மின்னுகின்ற பேரின்பம்
மேவிநாம் துய்த்திருந்தோம்.

கொழிக்கும் சீர்திருத்தக்
கொள்கைக் கனலேந்தி
அழிக்கும் பகைஎரிக்கும்
அழகு தமிழ்க்கவிதை
கொழிக்கும் பழனியப்பன்
கருத்தடைப் பொங்கலினை
வழங்கிடுவார்; நாமெல்லாம்
வாயார உண்டிடுவோம்!



திருத்தக்க நல்லமைச்சே! செயலே மூச்சைச்
செந்தமிழ்க்கே அளித்திட்ட சொல்லின் வேந்தே!
அரங்கத்து நாயகரே! சேலம் ஈன்ற
அழகுதமிழ்ச் சுவைக்கனியே! முத்து சாமிப்
பெரும்பேறே! பொங்கலோ பொங்கல்! என்று
பெருமுழக்கம் எழுகின்ற இற்றைக் கிங்கே
கருத்தடைப் பொங்கலினைப் பாட வந்தேன்
கரங்கூப்பிச் சிரந்தாழ்ந்து வணங்கு கின்றேன்!



உலகத்து நிலப்பரப்பில் நமது நாடு
ஒருசிறிது; மனிதஇனப் பெருக்கம் அந்தோ
நிலவுலகம் வியக்குமா றுயர்ந்து நிற்கும்
நிலையீதோ ராபத்துச் சின்ன மாகும்!
அலட்சியமாய் நாமிதனை விட்டு விட்டால்
அழிவதனை நாமணைத்துக் கொள்ளு கின்ற
நிலைவாய்க்கும்; உறுதியிது! நம்மை நாமே
நிர்மூல மாக்குவது நியாயந் தானு?

கொன்றழிக்கும் காலரா பிளேக்கு மற்றும்
கொடுநோய்கள் பலவற்றைத் தடுத்த ழித்து
மன்னுலகில் மனிதகுல வாழ்நாள் தன்னை
வளர்த்துள்ளோம்; மரணத்தைக் குறைத்து முள்ளோம்!
பன்னரிய நல்வாழ்வு வாழ்தற் காகப்
பலதுறையும் ஆராய்ந்து, மக்க ளெல்லாம்
நன்மையுறும் திட்டங்கள் பலவும் தீட்டி,
நன்னிலையை எதிர்நோக்கிச் செல்லு கின்றோம்.

கருவுற்றோர் ஈரைந்தாந் திங்கள் தன்னில்
கவின்மகவைப் பெறுவதுதான் உலகி யல்பாம்!
திருத்தகையீர்! இவ்வுலகில் இற்றை நாளில்
சேய்பிறக்கும் கணக்கறிந்தால் வியப்புக் கொள்வீர்!
பரிகாசச் சொல்லன்று! மணித்து ளிக்குப்
பாரினிலே நாற்பதுசேய் பிறப்ப தாக
ஒருகணக்குத் தருகின்றார் பிறப்புப் பற்றி
உலகெல்லாம் கணக்கெடுத்த கணிப்பின் மிக்கார்!

பிறப்பிந்த விகிதத்தில் பெருகு மாஞல்
பின்னிந்த நாட்டுநிலை என்ன வாகும்?
வறுமைநிலை பஞ்சம்பசி மிஞ்சும்; நாட்டின்
வளத்திட்டம் அத்தனையும் விழலே யாகும்!
குறைதீர்ந்து நாட்டினிலே இன்பம் யாவும்
கொழித்திடவே வேண்டுமெனில், பெருகு கின்ற
பிறப்புவிகி தந்தன்னைக் குறைக்க வேண்டும்;
பிள்ளைகளைப் அளவோடு பெறுதல் வேண்டும்!

அடுத்தடுத்துக் குழந்தைகளைப் பெற்றுல் தாயின்
அழகுகெடும்; உடல்நலமும் அழிந்து போகும்;
அடுத்தடுத்துக் குழந்தைகளைப் பெற்றுல் பிள்ளை
அமிழ்தமும் எட்டிக்காய் போற்க சக்கும்!
அடுத்தடுத்துப் பிறக்கின்ற குழந்தை நல்ல
ஆரோக்ய மாய்த்திகழல் குதிரைக் கொம்பே!
குடும்பநலம் கொழிப்பதற்குத் திட்ட மிட்டுக்
குழந்தைகளைப் பெறுவதுமோர் நாட்டுத் தொண்டே!

வருத்தங்கள் பெருங்கவலை போக்கு தற்காய்
வந்துதித்த தெய்வமலர் குழந்தை! அந்தத்
திருமலரின் நலங்காக்கும் நல்ல திட்டம்
தெய்வீகப் பெண்மைநலம் காத்து நன்மை
தருந்திட்டம் குடும்பநலத் திட்டம்! அந்தத்
தகைசான்ற திட்டத்தைப் பேணிக் காக்க
அருந்தமிழார் திருநாளாம் இந்த நாளில்
அனைவருமே சூளுரைப்போம்! வணக்கம் கொள்வீர்!

* * * *

தலைவர் :

கருத்தடைப் பொங்கலிலைக்
கவிஞர் பழனியப்பன்
திருத்த முறஈந்தார்
சிந்தை களிகொண்டோம்!
விசையுள்ள தமிழ்பாடும்
தமிழ்ப்பித்தன்; வெல்தமிழில்
பசுமைப் பொங்கலிலைப்
படைக்கின்றார்; நாமுண்போம்!



ஆசைகொள்ளும் மீசையுள்ள அமைச்சர் பெருமகனே
ஆசிரியர் உலகினுக்குப் புகழ்சேர்க்கும் திருமகனே
உள்ளமெல்லாம் ஆட்சிசெயும் ஆரூரார் அமைச்சவையில்
உள்ளாட்சித் துறைப்பொறுப்பை ஏற்றிருக்கும் உத்தமரே!
தாய்த்தமிழைக் காப்பதற்கு தன்மான உணர்ச்சியுடன்
பாய்ந்தெழுந்து சிறைசென்ற பாவலரே! காவலரே!
சீரணிக் கவியரங்கில் தலைமைப் பொறுப்பேற்று
ஊருணிபோல் கவிபாடும் ஒளிமுத்தே! என்வணக்கம்!

வேறு

மார்கழிப் பனியை நீக்கி மாண்பினைக் கொடுக்கும் 'தை'யாள்
ஊர்வலம் வந்தாள்; மக்கள் உலவிட வளப்பம் தந்தாள்
பேர், புகழ் அனைத்தும் இங்கே பெருகியே நிறையச் செய்தாள்
ஏர்தரும் உழைப்பைக் கொண்டு இன்பமே விளைத்தாள் மெய்யாய்!

புலவர் தமிழ்ப்பித்தன்

வள்ளுவர், கம்பர், ஔவை, வரகவிச் செய்யுள் நெய்த
வல்லவர் மீசை மன்னர் பாரதிப் புலவர், நெஞ்சம்
அள்ளிடும் புதுவை வேந்தர், அருந்தமிழ்க் காஞ்சி அண்ணல்
சொல்லினர் வாழ்த்துப் பாடல், சுகந்தரும் உழவைப் போற்றி!

'உண்டியைத் தருவோர் எல்லாம் உயிரினைத் தருவோர்' என்றே
மண்டிய கொள்கை ஒன்று மாத்தமிழ் நாட்டில் உண்டு!
அண்டிய மக்கள் வெள்ளம் ஆருயிர் காத்துக் கொள்ளல்
உண்டிடும் உணவால் அன்றோ? உயிரின்றி வாழ்தல் உண்டோ?

நுண்ணீல போன்றே ஒடி நுவலரும் பணியைச் சேர்த்து
செந்நெல், கன்னல், மற்றும் செழுமைசேர் பயிரை எல்லாம்
அண்ணலைப் போன்றே காக்கும் அருள்மிகு உழவர் மக்கள்
கண்ணினை நிகர்ப்பர்; அன்னர், கடவுளர் எனினும் ஏற்கும்!

கடவுளே வணங்கிப் போற்றல்; காவியம் அவர்க்குச் சூட்டல்
நெடியநாள் வழக்கம் ஆகும்; நிம்மதி சிலர்க்குச் சேரும்
அடியவர் கூட்டம் நாளும் அன்புடன் இறையை நாடும்;
முடிவிலான் நீயேவால் நெஞ்சில் முகிழ்த்திடும் பக்தி வெள்ளம்!

உலகினை வாழச் செய்யும் உழவனும் இறைவன் ஆவான்
நிலவிடும் பசியின் துன்பம் நீக்குவோன் அவனே அன்றே!
குலவிடும் பசுமை எல்லாம் குலுக்கியே பொலியச் செய்யும்
உழவினை வாழ்த்திப் போற்ற உதித்ததே பொங்கல் நாளாம்!

கதிர்மணி இலையில் வைத்து கன்னலை அருகே வைத்து
புதியதோர் பானை ஏற்றி புத்தரிசி, வெல்லம் இட்டு
சதிர்புரி வாழையல் கொஞ்சும் தளிர்க்கர மடவார் எல்லாம்
நதியெனப் 'பொங்கல்' செய்வர்; நன்றியை உழவர்க் கீவர்!

பொங்கலின் இனிமை எல்லாம் பொங்கிடும் சிறுவர் நாவில்!
பொங்கலின் பெருமை எல்லாம் புரிந்திடும் நமது பண்பில்!
திங்களில் ஒளியைச் சேர்க்கும் செங்கதிர் போலத் தோன்றி
பொங்கலில் பசுமை சேர்க்கும் உழவரைப் போற்றல் வேண்டும்!

* * * *

முடிப்புக் கவிதை :

தமிழ்ப்பித்தன் தாய்த்தமிழில்
தண்பசுமைப் பொங்கலினை
அமைவாகப் படைத்திட்டார்
அருஞ்சுவையை நாம்பெற்றோம்!

அருந்தமிழ்க் கவிஞர்கள்
ஐவரும் இங்கே
திருந்திய தமிழில்
தீஞ்சுவைப் பொங்கல்
அமுதம் வழங்கினர்
அருந்திநாம் மகிழ்ந்தோம்!
நமக்கிவர் வழங்கிய
நற்றமிழ்ப் பொங்கல்
உள்ளத்திற் கினியது!
உணத்தெவிட் டாதது!
தெள்ளிய அமுதாய்த்
தேனுய் இனிப்பது!
உவட்டா தினித்திடும்
உயர்தனிப் பொங்கலே
உவப்புற வழங்கிய
கவிஞர்கட் கெல்லாம்
நன்றியும் வாழ்த்தும்
நயனுறக் கூறினேம்!
இன்றைய இன்பம்
என்றும் நிலைக்கவே!

எவரெஸ்டப்பா—பாரு கிராமத்தின் படுசுட்டியான விவசாயி சொல்கிறார்:




எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமெண்டினாலான சுவ-ஆதாரமுள்ள, நெளிவான கூரைத்தகடுகளே:


“நிரந்தரமான பாது காப்புக்கு எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமெண் டினாலான நெளிவான கூரைத் தகடுகளில் கொட் டகைகளைக் கட்டுங்கள்”



துரும்பிப்போதோ, அரித்தும் போவதோ இல்லை—பழுதடைவதில்லை—ஒழுகுவதில்லை—மாற்றவேண்டியதில்லை.



சுவ ஆதாரமுள்ளவையாதலால் இருபது வெய்யோ, பாவெய்யோ தேவையில்லை. தாமதம் இன்றித் போஸ்ட் செய்தால் போதும்.



தீப்பிடிப்பதில்லை—வெயிலில் சேதமடைவதில்லை.



சீதோஷ்ண நிலையினால் பாதிக்கப் படுவதில்லை—அவற்றிற்கு பராமரிப்பு தேவையில்லை.



ஒவ்வொரு தினசரியிலும் ஒரு எவரெஸ்ட் டீலராவிலுள்ள முகவரி இன்றே அனுப்பச் சொல்லுங்கள்.



நிரந்தரமான வசதிக்கு எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் உபயோகியுங்கள்.

மேலும்: மடிப்புகளுள்ள கூரைத் தகடுகள், பாசனக் குழாய்கள், தானிய டிவங்குகள், நீர்த் தொட்டிகள், செப்டிக் டாங்கிகள் முதலியன.

எவரெஸ்ட்

அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் லிமிடெட்

(டீசர் அனட் லிமிடெட கம்பெனி அங்கத்தினர்கள்)

ப்ராக்டி. சிவசார் எஸ்டேட்ட், டார்ட்ட் அன்னி பெசன்ட் ரோடு, ஓர்லி, பம்பாய்-18 WB • எவரெஸ்ட் ஹவுஸ், காட்டன் ரீச், தாராதோவா ரோடு, கல்கத்தா-34
202, பவனட் ரோடு, மதராஸ்-2 • பாரவ ஹவுஸ், நாலுமான ரோடு, புது டெல்லி-1 • எவரெஸ்ட் ஹவுஸ், 948, கேபிர் டவுன், ஜுலஜுர் • போதனூர் (கோயம்புத்தூர் டிலவா)

Focus D/S/Tam

அன்புள்ள சீரணி நண்பர்களே !

வணக்கம்.

திங்கள் ஒரு முறை உங்களோடு தொடர்புகொண்டு, மாவட்டங்கள்தோறும் சீரணியினர் ஆற்றுகின்ற சிறப்பான பணிகள்பற்றி நீங்கள் மட்டுமின்றி நாட்டு மக்களும் அறிந்து, போற்றிப் புகழவும், அதனைக் கேட்டு நீங்கள் மேலும் ஊக்கமும், உற்சாகமும் பெற்று, பணியாற்றவுமான நிலையை ஏற்படுத்தித்தரச் 'சீரணி' இதழ் முன் வந்திருக்கிறது எனக் கூறுவதில் பெருமையடைகிறேன்.

சென்ற மாதம் சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சீரணியினர் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். வேலப்பன்பாளையம், ஜே. கிருஷ்ணபுரம், அய்யம்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிக்கட்டடங்களுக்கு ரூ. 750 பெறுமானமுள்ள மின் விளக்குகள் மக்களின் நன்கொடை மூலம் அமைத்திருக்கிறார்கள். காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1266 அரிசன மாணவ, மாணவிகளுக்கு நன் கொடை மூலம் ரூ. 8,862 மதிப்புள்ள சீருடைகள் வழங்கியிருக்கிறார்கள். ரூபாய் 500 பெறுமானமுள்ள கட்டடத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக 'அண்ணா மன்றக் கட்டடம்' என்ற பெயரில் சுல்தான் பேட்டையில் கட்டி முடித்திருக்கிறார்கள். குட்டைக்கு மழைத் தண்ணீர் செல்ல ஏதுவாக சுல்தான் பேட்டையில் வாய்க்கால் வெட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பணியின் மதிப்பீடு ரூ. 300. இப் பணிகள் அனைத்தையும் செய்து முடிக்க அரசினர் செலவு ஏதும் இல்லை.

அரசினர் செலவு ஏதும் இன்றியே ரூ. 10,412 மதிப்புள்ள பணிகளைச் சுல்தான் பேட்டையில் சீரணியினர் செய்து முடித்திருப்பது பெருமைக்குரிய - மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

இதேபோன்று ஊக்கமும், உற்சாகமும் நாடு முழுவதும் பெருக வேண்டுமென்று விரும்புகிறேன்.

அடுத்த முறை 'சீரணி' இதழில், உங்கள் மாவட்டத்தில் சீரணிப் பணிகள்பற்றி, நாட்டு மக்கள் அறிந்துகொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

அன்பன்,

பரமசாமி, சீரணித் தனி அலுவலர்

சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்
பம்புடன் கூடிய

Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்

நம்பத்தகுந்தது



நல்ல
மகசூல்



விவசாயிக்கு
சுபிட்சத்தை
அளிக்கிறது



தாராளமான
தண்ணீர்




நல்ல மகசூலை
அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு

Kirloskar கிர்லோஸ்கர்
மோட்டார்

தாராளமான தண்ணீர்
வசதியை அளிக்கிறது.



கிர்லோஸ்கர் எலக்ட்ரிக் கம்பெனி லிட்.,
த. பெ. எண் 1017, பெங்களூர்-3. இந்தியா

தூண விசாரணைக்கு: பாரி & கம்பெனி லிட்.,
த. பெ. எண் 12. மதராஸ்-1. ● த. பெ. எண் 208, கலகத்தா-1
த. பெ. எண் 506, பம்பாய்-1. BR. ● த. பெ. எண் 172, புது டில்லி-1.



கிர்லோஸ்கர்-ஆரியா டைரக்ட்-ஆன்-லைன் மோட்டர்கள் 10 எச்பி வரையிலும், மோட்டார்டெல்டா மோட்டர்கள் 60 எச்பி வரையிலும் லலிபிரிவ் மோட்டார் ஸ்டார்டர்கள் 70 எச்பி வரையிலும் உடனடியாகக் கிடைக்கும்.

Bengaluru-1282TAM

அன்பிற்கோர் இலக்கணம்

கோவை
திரு. எம். எஸ். தேவசகாயம்

கொங்குச் சீமை என்று பெருமை யுடன் அழைக்கப்படும் கோவை மாவட்டம் உடுமலை எனும் திரு நகரில் 1928 ஆம் ஆண்டு பிறந்த சாதிக்பாட்சா எளிமையும் இனிமை யும் கொண்ட மனவளமுடைய நண்பராவார். அரசியலில், சில நேரங்களில் நண்பர்கள் விரோதி களாவார்கள்; விரோதிகள் நண்பர் களாவார்கள், ஈடுகட்டிக் கொள்வ தற்காக. ஆனால், நண்பர் சாதிக் பாட்சாவைப் பொறுத்த வரையில், நிலைமை வேறு, நண்பர்கள் தொடர்ந்து நண்பர்களாக இருப்பர், விரோதிகளையும் நண்பர்களாக மாற் றிக் கொள்கின்ற மனப்பக்குவம் நிரம்ப உண்டு அவருக்கு.

காலஞ் சென்ற இதய தீபம் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1966 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தேர்தல் நிதி பெறும் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டபோது உடுமலைப் பகுதியில் மாற்றுக்கட்சியினர் திட்ட மிட்டு அண்ணா அவர்களை நிகழ்ச்சி களில் கலந்து கொள்ளவிடாமல் முரட்டுத்தனமாகத் தடுத்து நிறுத்த முயன்றனர். மேலும் திராவிட முன் னேற்றக் கழகம் அந்தப் பகுதியில் ஓங்கி வளர்வதற்கு முக்கியக் காரண மாக இருந்த திரு. சாதிக்பாட்சா வைத் தொலைத்துக் கட்டினால்தான் தங்கள் அரசியல் விளம்பரம் பாதிக் காமல் இருக்கும் எனக் கருதிய அரசியல் விவேகமற்றவர்கள் நண் பர் சாதிக்பாட்சா சென்று கொண் டிருந்த காரை வழிமறித்துத் தாக்கி னார்கள். ஓட்டிச்சென்ற டிரைவரின் சாமர்த் தியத்தால் தப்பித்த அந்தக் கார் தொடர்ந் து செல்லும்போது இரக்கமற்ற அந்தக் குழுவினர் வேறு காரைக் கொண்டு துரத்திச் சென்று கொலை செய்கின்ற பெருமுயற்சியில் ஈடு பட்டனர். டிரைவர் மிக்க சாமர்த்தியமாக வேறு வழியாகக் காரைக் கொண்டு சென்ற காரணத்தால் நோக்கம் ஈடேறாத அந்தக் கும்பல் திரும்பி யது. அன்று டிரைவர் மட்டும் உயிருக்குப் பயந்து அவருடைய கைகால் ஆட்டங் கண் டிருக்குமானால்-நினைக்க



எனக்குத் துணிவில்லை. சாதிக் இல்லை! முழுக்க முழுக்க டிரைவரின் சாமர்த்தியத்தால் உயிர் தப்பினர் அன்று.

இது சம்பந்தமான வழக்கு ஒன்று பதிவாகி நான்கு மாதங்களாக எவ்வித மேல்நடவடிக்கையும் இல்லாது தூங்கிக்கொண்டிருந்த போது 67ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற திரு. சாதிக், அறிஞர் அண்ணாவின் சீரிய தலைமையில் அமைச்சர் ஆனார். நான்கு மாதங்களுக்குமுன் அவரிடம் யாரெல்லாம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்களோ அவர்களை மன்னித்து இன்றைய முதலமைச்சர் கலைஞரைப்போல் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

1957ஆம் ஆண்டு முன்னேற்றக் கழகத்தையும், காங்கிரசையும் எதிர்த்துச் சுயேட்சையாக வெற்றி கண்ட கோர்ட்டார் என்று அழைக்கப்படும் சுப்பைய கவுண்டரையும் தன் உற்ற அரசியல் நண்பராக்கிக் கொண்டார்.

அதைப் போலவே, 62ஆம் ஆண்டு நண்பர் சாதிக்பாட்சா வெற்றி பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கட்சி நண்பர் தாமோதரன் 67இல் அவருடைய வெற்றிக்காக முழு நேரமும் உழைத்த குறிப்பிடத்தக்க நண்பராஞர்.

சிறு வயதிலேயே தந்தையாரை இழந்த காரணத்தால் பெரிய குடும்பத்தை நிர்வகித்துப் பாதுகாக்கின்ற பொறுப்பு மிக்க சுமை அவர்மீது ஏறியது. அதன் காரணமாக 1948இல் பி.ஏ. பட்டப் படிப்பை முடித்த வுடன் இரண்டாண்டுக் காலம் ஆசிரியராகவும், இரண்டாண்டுக் காலம் அஞ்சல் அலுவலகத்திலும் பணியாற்றினர். தன்னுடைய மகன் டாக்டராகவோ, வக்கீலாகவோ அல்லது என்ஜினியராகவோ வரவேண்டும் என்று விரும்பிய அவருடைய தாயாரும், உறவினர்களும் மிக்க வலியுறுத்தியதின் பேரில் 51ஆம் ஆண்டு சட்டப் படிப்புக்குச் சென்னை வந்து சட்டக் கல்லூரியில் பயின்று 53ஆம் ஆண்டு வழக்கறிஞர் பட்டம் பெற்ருர். மிகக் குறுகிய நாட்களே துணை வழக்கறிஞராகப் பயிற்சி பெற்று 54ஆம் ஆண்டே உடுமலையில் தனியே வழக்கறிஞர் தொழிலை ஆரம்பித்தார்.

அதுவரை நெருக்கமான நேரடி அரசியல் ஈடுபாடு இல்லாத இவரை, நல்ல நண்பர் என்றமுறையில் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. உடுமலை நாராயணன் இவரைக் கேட்காமலேயே கூட்டத் தலைமைக்கு போட்டு விளம்பரமும் செய்து விட்டார். விளம்பரத்தைக் கண்டவுடன் ஆச்சரியம் ஒரு பக்கம்; என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்ற கூச்சம் ஒரு பக்கம். கூட்ட ஏற்பாடு செய்த நண்பர் நாராயணனைத் தனியாக அழைத்து 'இதுவரை ஆன செலவையும், இனிக் கூட்டம் நடத்த ஆகும் செலவையும் நானே தந்துவிடுகிறேன். வேறு தலைவரைப் போட்டு நடத்துங்கள்' எனக் கூறித் தப்பிக்கப் பார்த்தார். நேர்மையுள்ள உண்மையான ஒரு நண்பரை இழக்கச் சம்மதியாத நாராயணன் அதை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துவிட்டார். காரணம், நண்பர் சாதிக்கின் குடும்பம் பொதுப் பணிக்குப் புதிய குடும்பம் அல்ல. சாதிக்பாட்சாவின் பெரிய தந்தையார் சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும் உடுமலை நகர் மன்றத் தலைவராகவும் பல காலம் பணியாற்றி இருக்கிறார். இவருடைய தந்தையாரும் பல்வேறு பொதுக் காரியங்களில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். இவருடைய நெருங்கிய உறவினர்களெல்லாம் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடும் பற்றும் கொண்டவர்களாக இருந்தார்கள். அதன் காரணமாக உடுமலைப் பகுதி மக்கள் மனநிறைவோடு அக் குடும்பத்தைத் 'திவான் குடும்பம்' என்றே அழைப்பார்கள்.

இத்தகைய சிறப்புகள் நிரம்ப உள்ளன என்ற துணிவிலேதான் விளம்பரப் படுத்தியதாகச் சமாதானம் கூறினர் திரு. நாராயணன். புதிய அனுபவம்; நண்பர்கள் வலியுறுத்துவதைத் தட்டிப் பழக்கப்படாத சாதிக்பாட்சா, அரை மனத்தோடு கூட்டத் தலைமை தாங்கினர்.

ஏற்ற பொறுப்பை அன்று மிகவும் சிறப்பாகச் செய்து முடித்தார்.

1957ஆம் ஆண்டு முன்னேற்றக் கழகம் நேரிடையாகக் கலந்து கொண்ட பொதுத் தேர்தலில் மாண்புமிகு மதியழகன் தி.மு.க வேட்பாளராக உடுமலைத் தொகுதிக்குத் தேர்வு செய்யப்பட்டபோது முன்மொழிந்தவர் திரு. சாதிக் பாட்சா.காங்கிரஸ்கட்சியின் சார்பில் ஒரு வழக்கறிஞர் நிறுத்தப்பட்டார். நண்பர் மதி வெற்றி வாய்ப்பை அப் பொழுது இழந்தாலும், அத்தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரும் தோல்வி யடைந்தார். காங்கிரஸின் தோல்விக்குச் சாதிக்பாட்சா மிக்க பொறுப்பாக இருந்த காரணத்தால் வழகறிஞர்களின் முழு எதிர்ப்பும் இவர்மேல் திருப்பப்பட்டு இரண்டாண்டுக் காலம் தொழில் பாதிக்கத் தக்க அளவுக்கு இருந்தபோது சிறிதும் சோர்வடையாமல் எதிர்நீச்சல் அடித்து 1960ஆம் ஆண்டு தொழிலில் சக வழக்கறிஞர்கள் பொருமைப்படத் தக்க அளவுக்குக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டார்.

1957ஆம் ஆண்டு முன்மொழிந்தவராக இருந்த இவரே 1962ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தி.மு.கழக வேட்பாளராக உடுமலைத் தொகுதியில் நின்று மிகக் குறுகிய வாக்குகள் வேறுபாட்டில் வெற்றிக்குரிய வாய்ப்பை இழந்தார். செய்தியைக் கேட்டவுடன் கூட இருந்த தோழர்களெல்லாம் வேதனை அடைந்தார்கள். காரணம் கோவை மாவட்டத்திலேயே உடுமலைத்தொகுதியை வெற்றி பெறக்கூடிய வாய்ப்புள்ள தொகுதியாகக் கருதியிருந்தார்கள். திரு. சாதிக்பாட்சா அவர்களோ அந்த நேரத்திலும் கொஞ்சமும் சோர்வடையாமல் 'இதை ஒரு தோல்வியாகக் கருத வேண்டாம். வெற்றிக்குரிய படிக்கட்டாக அமைத்துக் கொள்வோம்' என உடனிருந்தவர்களை உற்சாகப்படுத்தி ஏற்கனவே இருந்ததைவிட மேலும் சற்றுத் தீவிரமாகவே, தொகுதியின் குறைபாடுகளைக் களைகின்ற பெருமுயற்சியில் ஈடுபட்டார். அதன் விளைவாக உடுமலை தி.மு.கழக நகரச் செயலாளராகவும், திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், அமராவதி கூட்டுறவுச் சர்க்கரைஆலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், வால்பாறை தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், மற்றும் பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். தொழிலாளத் தோழர்களின் உயர்வுக்காக இவர் வாதாடிய பாங்கினைக் கண்ட அந்த தோழர்களெல்லாம் இப்போது அவருடைய வழக்கறிஞர் சேவை தங்களுக்குக் கிடைக்காத ஒன்றுகி விட்டதே என எண்ணி ஏங்குவதுண்டு.அந்த அளவுக்கு அவர்களோடு துணை நின்றார். பல வழக்குகளை ஊதியம் பெருமலேயே நடத்திக் கொடுப்பார்.

1962ஆம் ஆண்டு தமிழகத்தின் அரசியல் திருப்புமையமாக, அடித்தளமாக அமைந்த விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்ட மாநாடு சென்னையில் நடந்தபோது அந்தப் போராட்ட மாநாட்டின் தலைவராக இருந்து நடத்திக் கொடுத்தார். அதன் வினாவாகத் தமிழகம் முழுமைக்கும் அறிமுகமானார்.

கழகம் முடிவெடுத்த விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தை உடுமலையில் தலைமை ஏற்று நடத்தி மூன்றுமாதம் சிறைத் தண்டனை பெற்றார்.

இருபது உறுப்பினர்களைக் கொண்ட உடுமலை நகர் மன்றத்தில் 1959 முதல் 1967 வரை உறுப்பினராக இருந்தார். காங்கிரஸ் கட்சியினுடைய பலம் அதிகமாக இருந்த உடுமலை நகர்மன்றத்தில் ஆறு நகர் மன்ற உறுப்பினர்களைமட்டுமே தி.மு.க.கொண்டிருந்தக நிலையில் இருவருடைய திறமையினாலும் மாற்றுக் கருத்து உடையவர்களையும் மதிக்கின்ற மனப்பக்குவத்தைத் தெளிவாக அறிந்திருந்த காரணத்தாலும் மாற்றுக் கட்சியினரும் பலர் ஆதரிக்க 1963ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் நகர்மன்றத் தலைவராக இவரைத் தேர்ந்தெடுத்தார்கள். மற்ற நண்பர்களும் இவருடைய திறமையிலும் தலைமையிலும் நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகும். மன்றத் தலைவராக மிகக் குறுகிய காலந்தான் இருந்தார் என்றாலும், பல ஆண்டுகளாக எதிர்பார்த்து ஏமாந்துபோன நிலையில் இருந்த உடுமலை நகரத்திற்குத் திருமூர்த்தி

மலேயிலிருந்து குடிநீர்த் திட்டம் உருவாக்கி நகரமக்களின் தண்ணீர்க்கவலையைப் போக்கினர். அந்த நாளில் அண்ணா டமலே வந்தால் திருமூர்த்தி மலைக்குச் செல்லாமல் வரமாட்டார். அங்குள்ள நீர் மூலிகை கலந்த அவ்வளவு சுவையுள்ள நீர். தாகம் தீர்த்துக் கொள்கின்ற உடுமலே நகர மக்கள் நண்பர் சாதிக்கின் சாதனையைப் போற்றாதவே செய்வர்.

பகுதி மக்களின் நெருங்கிய ஊழியராகப் பணியாற்றிய நண்பர்வர்கள் 1967ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெற்றி பெற்ற கழகச் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சென்னை வந்து அண்ணா அவர்களைச் சந்தித்தது போலவே இவரும் நுங்கம்பாக்கம் இல்லத்தில் அண்ணாவைச் சந்தித்தார்.

வழக்கமாக அண்ணா அவர்கள் அவருக்கே உரிய பாச உணர்வோடு நடைபெற்று முடிந்த தேர்தல் நிலைமைகளை கேட்டுத் தெரிந்துகொண்டதோடு விடைபெற்றுக் கொள்கின்ற முறையில் எழுந்த இவரைப் பார்த்துச் சூசகமாகச் சில கேள்விகளைக் கேட்டு வைத்தார். 'அமைச்சர் பொறுப்பு தர இருக்கிறேன் ஏற்றுக்கொள்' என்று சொல்லாமல் அவருக்கே அமைந்திருந்த உரிமை உணர்வோடு ''உனக்குக் கீழே பணியாற்றுகின்ற திறமைமிக்க வழக்கறிஞர்களிடம் தொழிலே ஒப்படைத்துவிட்டு ஓய்வாக இரு; தகவல் வரும்'' என இரத்தினச் சுருக்கமாக அண்ணா சொல்லக் கேட்டவுடன், அந்த அறிவிப்பின் ஆழத்தைப் புரிந்துகொண்ட பாவலரின் பதில் ஏதும் சொல்லாது தலேயை மட்டும் அசைவு காட்டிய படி விடைபெற்றுக் கொண்டார்.

1967 மார்ச் திங்கள் ஆறு தேதியும் வந்தது; நண்பர் சாதிக்பாட்சா அவர்கள் அமைச்சர் ஆன செய்தியும் வந்தது. காலத்தின் விடிவெள்ளியாம் பேரறிஞர் அண்ணா தலேமையில் திராவிடமுன்னேற்றக் கழக முதல் அமைச்சரவை ஏற்பட்டது. உருவான அமைச்சரவையில் பொது நலத்துறை அமைச்சராக நல்லவர்கள் மெச்சக்கத்தக்கவகையில் சிறப்பாகப் பணியாற்றினர். பொது மக்களுக்கு நெருங்கிய தொடர்புள்ள இந்தத் துறையில் நல்ல மாற்றத்தையும் வேகத்தையும் உருவாக்கிக் காட்டினர். வேறு நிகழ்ச்சிகளுக்குச் செல்லுகின்றபோது வழியில் அரசு மருத்துவமனே இருந்தால் முன்னறிவிப்பு இல்லாமலேயே சென்று பார்வை இடுவார். இதன் காரணமாக அரசு மருத்துவமனைகள் எல்லாம் சுறுசுறுப்பாகப் பணியாற்றின.

மற்ற மாவட்ட நண்பர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது என முன் கூட்டிக் கேட்டுக்கொண்டு ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உடுமலேத் தொகுதிக்கு குறிப்பிடத் தக்க வேறு எந்தப் பகுதிக்கும் கிடைக்காத சிறப்பு ஒன்று உண்டு. 1957இல் அதே தொகுதியில் தி.மு.க வேட்பாளராக நின்ற திரு. மதியும் ஓர் அமைச்சர். 1967இல் அதே தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக நின்ற திரு. சாதிக்கும் ஓர் அமைச்சர்.

சிறிதும் எதிர்பாராத, நினேத்துக் கூடப் பார்க்கமுடியாத வேளையில் எண்ணி இருபத்துமூன்றே மாதங்களில் கருணேமிக்க தீபச்சுடரை கால தேவனின் கொடிய கரங்கள் அணேத்ததால் தமிழகமே கலியிழந்து காட்சி தந்த நேரத்தில், கழகத்தின் கண்மணியாய் தலேவனின் வழி நின்றே எண்ணுவதும் எழுதுவதுமாய்ப் பம்பரம்போல் சுழன்று பணியாற்றும், ஏழை எளிய மக்களின் இனிய அண்ணன் கலேஞரவர்களின் சிறப்புமிகு தலேமையில், 1969ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ஆம் நாள் தமிழகத்தில் தி.மு. கழக இரண்டாவது அமைச்சரவை உருவானது.

இரண்டாண்டுக் கால நடைமுறை அனுபவத்தில் பிரச்னைகளை அணுகுகின்ற முறையையும் சிக்கல்களைத் தீர்க்கும் தன்னடக்கமான பாங்கினையும் நண்பர் சாதிக்கினிடம் கண்ட கலேஞரவர்கள் அது நாள்வரை தான் வகித்துவந்த பொதுப் பணித் துறையை ஏற்று நடத்தும் பொறுப்பைத் தந்தார். கலேஞர் இருந்து சிறப்பித்த இடத்தை ஏற்று நடத்துவதென்றல் சாதாரண காரியம் அல்ல. முன்பெல்லாம் இப்படி ஒரு

முக்கியமான துறை இருப்பதாகவே பொதுமக்களுக்குத் தெரியாது. கலைஞர் அந்தத் துறையை ஏற்றவுடன் மழை குறைந்திருந்தும் அவருடைய சலியாத உழைப்பால் நீர்ப்பாசனத்துறையிலே தனி அக்கரை காட்டி வீராச்சலே இரட்டிப் பாக்கி அந்தத் துறைக்கே புதிய பொலிவையும் கலையையும் உருவாக்கி இருந்தார். அந்த நிறை சிறிதும் குறைந்துவிடாத நிலையில் அயராது உழைத்துத் திறம்பட நிர்வகித்து வருகிறார் திரு. சாதிக்.

திரு. சாதிக் அவர்களின் விவாதங்களில் நயம் இருக்கும்; நண்பர்கள் கோபமூட்டினாலும் தவறியும் தரக் குறைவான வார்த்தைகள் வரா; வேகம் இருக்கும்; அதிலே விவேகம் மிகுந்து காணப்படும். இத்தகைய எல்லாக் குண நலன்களும் ஒருங்கே அமையப்பெற்ற நண்பர் அண்மையில் தி.மு.கழகத்தின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அறிவும், அன்பும், அவை அடக்கமும் நிரம்பியுள்ள இவர், அறிஞர்பெருந்தகையின் படை வரிசையில், கலைஞரின் முகாமில் ஓர் அங்கம்!

சம்பாப் பயிரைத் தாக்கும் முக்கியமான நோய்கள்

கொலே நோய் அல்லது கொள்ளே நோய் :

இந்த நோய் குறிப்பாகக் குளிர்ந்தகாலத்தில் அதிகமாகக்காணப் படுகிறது. தாக்கப்பட்ட பயிரில் முதலில் இலைகளின்மேல் கண் வடிவமான சிவப்புப் புள்ளிகள் தோன்றும். இந்தச் சிவப்புப் புள்ளிகளின் மத்தியில் சாம்பல் நிறமான புள்ளிகள் தோன்றி இலைகள் கரய்வதோடு கணுக்களும், கதிர்க் காம்புகளும் கருகிக் காணப்படும். இளம் பயிரை இந்நோய் தாக்கினுல், பயிர் காய்ந்து தீய்ந்து விடுகிறது. முதிர்ந்த பயிரில் இந்நோய் காணப்பட்டால், மகசூல் பெருவாரியாகப் பாதிக்கப்படுகிறது. கொலேநோய் தாக்காத கோ-31 போன்ற நெல்ரகங்களைத் தேர்ந்தெடுப்பது சிறந்தது. இந்நோயைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ தாமிரக் கலவை மருந்து அல்லது 300 கிராம் டைத்தேயோ கார்பமேட் மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். நோயின் தீவிரத்திற்குத் தக்கவாறு இரண்டாவது முறையும் மருந்து தெளிக்கலாம். செரசான் சுண்ணும்புக் கலவையை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவுவதனுலும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.


செம்புள்ளி நோய் :

தாக்கப்பட்ட பயிரில் தோகைகளில் செங்கல் நிறச் சிவப்புப் புள்ளிகள் தோன்றும். இப்புள்ளிகள் எள்ளின் அளவைவிடச் சற்றுப் பெரியதாக இருக்கும். தானிய மணிகளிலும் கருமையாகப் புள்ளிகள் தோன்றும். நோய் தீவிரமாகத் தாக்கினுல் சில சமயங்களில் பயிர் கதிர் வாங்குவதுகூட நின்றுவிடும். இந்நோய் விதைமூலம் பரவுவதனுல் ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் அக்ரசான் அல்லது டில்லக்ஸ் போன்ற கரிய பாதரசக் கலவை மருந்துகளைக் கலந்து விதைக்கவேண்டும். வளர்ந்த பயிரில் இந்நோயைக் கட்டுப்படுத்த தாமிரக் கலவை மருந்தையோ கார்பமேட் மருந்தையோ தெளிக்கலாம்.

நிறைந்த மகசூல் பெற வீரியவிதைகள், ரசாயன உரங்கள், பூச்சி மருந்து ஆகிய நவீன முறைகளை ஏற்கனவே உபயோகித்து வருகிறீர்கள்.

இப்போது கிருஷி இயந்திரக்கலப்பை

உபயோகித்து விவசாயத்தை மேலும் லாபகரமானதாகச் செய்யுங்கள்



கிருஷி இயந்திரக் கலப்பை உபயோகிக்க இலகுவானது. கடின உழைப்புக்கு ஈடு கொடுக்க வல்லது. நீடித்து உழைக்கவல்லது. உயரிய நான்கு ஜதை எருதுகள் செய்யக்கூடிய வேலையை அதனினும் குறைவான செலவில், விரைவாகவும் ஆற்றவல்லது. 5HP டீஸல் என்ஜினுல இயங்கும் இந்த இயந்திரக்கலப்பைக்கு மணிக்கு 35 பைசா மதிப்புள்ள டீஸல் எண்ணெயே தேவைப்படுகிறது. (மூன்று மணி நேரத்திற்குள் ஒரு ஏக்கர் நிலத்தை உழுது பண்படுத்தலாம்)

பலவிதத்தில் பயனளிக்கவல்லது கிருஷி

சுலபமாக இயங்கவல்ல கிருஷி டீஸல் இயந்திரக் கலப்பை நஞ்சை, புஞ்சை, விவசாயத்திற்கு மிகவும் ஏற்றது. உங்கள் நிலத்தில் உபயோகிப்பது மட்டுமின்றி பிறருக்கும் வாடகைக்கு விடுவதன மூலம் அதனை முழுமையாக பயன்படுத்தலாம்.

நிலத்தை உழுது பண்படுத்தும் வேலைக்கு மட்டுமின்றி, கிருஷி டீஸல் இயந்திரத்திற்கு தகுந்த உபகரணங்களைப் பொருத்தி, விதையிடுதல், நீர் இறைத்தல், பூச்சிமருந்து தெளித்தல், உரமிடுதல், கதிர் அடித்தல், நெல்குத்துதல், போக்கு வரத்து போன்ற பல விவசாயப் பணிகளுக்கும் பயன்படுத்தலாம்.

கிருஷி இயந்திரம் எவ்வளவு லாபகரமாக பணியாற்றவல்லது என்பதுபற்றி மேலும் விவரங்கள் அறிய எங்களுக்கு எழுதுங்கள்.

கிருஷி உங்கள் விவசாய உழைப்பு, நேரம், செலவு ஆகியவற்றைக் கணிசமாகக் குறைக்கிறது

தயாரிப்போர் : கிருஷி என்ஜின்ஸ் பிரைவேட் லிமிடெட்
ஹைதராபாத்-18 (A.P.)
பூரண விற்பனையாளர்கள் : கிருஷி சேல்ஸ் & சர்வீஸ்.
ராஷ்டிரபதி ரோடு, செகந்திராபாத் (A.P.)

Krishi


KEP-5243A

மடல்தரும்தகவல்

நெற்சிற்கினிய நண்ப,

கடிதம் கண்டேன்! கடந்த ஆண்டில் வான் பொய்த்ததால் வந்துற்ற இடரை எதிர்த்து அரசு தன் துயர் துடைப்புப் பணிகளால் கண்ட வெற்றியைப் பற்றிய என் கடிதத்தைப் படிக்கும் நேரத்தில் தமிழ் நாட்டின் பெரும்பகுதி பசுமைக் கோலம்பூணத் தொடங்கிவிட்டதாக எழுதியிருந்தாய்.

ஆமாம் நண்ப! இவ்வாண்டு இயற்கை நம்மைச் சோதிக்கவில்லை. தமிழகத்தின் பெரும் பகுதிகளில் நல்ல மழை! வறட்சியின் கொடுமையிலிருந்து மீட்சி! எங்கும் 'பசுமை



யான தோற்றங்கள்' தோன்றத் தொடங்கி விட்டன. பச்சைக் கொடிகள் கண்ணுக்கு விருந்தாகி வருகின்றன. இந்தப் பச்சைக் கொடிகளோடு கோடிக்கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களிலும் பட்டொளி வீசி பறக்கத் தொடங்கி விட்டது இன்னொரு 'பச்சைக் கொடி!'

அது —

நம் மாநில அரசின் பெரும் முயற்சிக்கு வழிகாட்ட மத்திய அரசு காட்டியது.

ஆம், தமிழ்மக்களின் நெடுங்காலக் கனவை நனவாக்கக் காட்டப்பட்டுள்ள கொடி!

இன்னுமா நீ புரிந்து கொள்ளாமல் இருப்பாய்! சேலத்தில் இரும்பு ஆலை அமையப்போவதைப் பற்றித்தான் எழுதுகிறேன். சேலத்து இரும்பு நமக்குப் பயன்படப் பச்சைக்கொடி காட்டப்பட்டுவிட்டது.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முன்பு சேலம் இரும்பு பற்றி ஆராய்ச்சி தொடங்கியது; கி. பி. 1864-ஆம் ஆண்டில் ஆய்வறிஞர்களான 'கிங்', 'ஃபுட்' என்ற இரு பெரும் நிபுணர்கள் சேலம் இரும்பைப்பற்றி ஆராய்ந்தனர்.

இவர்கள் ஆராய்ச்சியைப் பற்றி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக விருந்த திரு. லீஃபானு, திரு. ரிச்சர்ட் முதலியோர் விவரங்களை வெளியிட்டுள்ளனர். 1893-ஆம் ஆண்டில் திரு. சர் தாமஸ் ஹாலண்ட் என்ற அறிஞர் பெருமகன் சேலத்து இரும்பு, அளவிலும் தரத்திலும் சிறந்தது என்பதை இரசாயன ஆராய்ச்சிகளுடன் விளக்கினர். பின்னர் திரு. சி. எஸ். மிட்லமிஸ் என்ற அறிஞரும் சேலத்து இரும்பை இரசாயனச் சோதனைக்கு உட்படுத்தி அதன் சிறப்பை வெளியிட்டார்.

1914-ஆம் ஆண்டில் புதுச்சேரியைச் சேர்ந்த 'காடர்ட்' கம்பெனியாளர்களும், 1919-ஆம் ஆண்டில் இந்தியப்புவியியல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் ஸ்டுவர்ட்டும்; 1938-ஆம் ஆண்டில் காசிப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர்

டுபேயும், இந்திய புவியியல் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி திரு. கருணுகரனும்; 1944-ஆம் ஆண்டில் விரிவான ஆராய்ச்சி நடத்திய திரு. டாக்டர் எம். எஸ். கிருஷ்ணனும், திரு. என்.கே என். ஐயங்காரும், 1956-ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் இராமநாதனும், 1957-ஆம் ஆண்டு முதல் 1959-ஆம் ஆண்டு வரை கஞ்சமலைப் பகுதியில் ஆராய்ச்சி நடத்திய சென்னை மாநிலக் கல்லூரிப் புவியியல்துறைப் பேராசிரியர் டாக்டர் ச. சரவணனும், 1964-ஆம் ஆண்டில் கல்கத்தாவைச் சேர்ந்த தஸ்தூர் கம்பெனியாரும், மற்றும் கிழக்கு, மேற்கு ஜெர்மனி நாட்டு நிபுணர்களும், நார்வே, அமெரிக்கா முதலிய நாட்டு வித்தகர்களும்,ஜப்பான் நிபுணர் குழுவினரும், இன்ன பிற நிபுணர்களும், வல்லுநர்களும் சேலத்து இரும்பின் சிறப்பை - அளவை - பயனை - இரும்பாலை உருவாகவேண்டிய அவசியத்தைப் பல்வகையானும் எடுத்துரைத்துள்ளனர். ஆனால், அச் சேலத்து இரும்புருக்காலைத் திட்டம், செந்தமிழ் நாட்டில் உருவாக இப்பொழுதுதான் வழி பிறந்து இருக்கிறது.

நண்ப, சேலத்து இரும்பு என்று சொல்லும் பொழுது இப்பொழுதுள்ள சேலம் மாவட்டத்தில் மட்டும் தான் இரும்புக் கனிவளம் உள்ளது என்று எண்ணிவிடாதே. பழைய சேலம் மாவட்டத்தில், இப்போதைய தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் இரும்புக் கனிவளம் நிரம்பவுள்ளது.

(அ) சேலத்திலிருந்து வடகிழக்கே ஒன்பது மைல் தொலைவிலுள்ள கோடுமலை மண்டலத்தில் இரும்புக் கனிவளம் உள்ளது.

(ஆ) துள்ளமலை - கொல்லிமலைப் பிரிவுகளிலும் இரும்புக் கனிவளம் உள்ளது.

(இ) சிங்கிபுரம் பகுதியிலும் - கோடுமலையிலிருந்து தெற்கே நான்கு மைல் தொலைவில் இரும்புக் கனிவளம் காணப்படுகிறது.

(ஈ) தீர்த்தமலைப் பிரிவுகளில் - ஹரூருக்கு எட்டு மைல் வடகிழக்கில் தனித்து தீர்த்தமலையிலும் அதைச் சார்ந்த மலைத்தொடர்களிலும் இரும்புக் கனிவளம் உள்ளது.

(உ) கஞ்சமலைப் பகுதி: சுமார் 4½ மைல் நீளமும் 2மைல் அகலமும் கொண்டு அமைந்துள்ள இம்மலை, சேலம் நகரத்தின் தென்மேற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. கடல்மட்டத்திற்குமேல் 3236 அடி உயரிந்திருக்கும் இம்மலையின் கனிப் படுகைகளைச் சீரியது, சிறந்தது. என்று வித்தகர்கள் போற்றுகின்றனர்.

(ஊ) சேலம் மாவட்டத்தின் மற்றப்பிரிவுகளில் (1) பெருமாம்பட்டியின் வடகிழக்குப் பாகம் (2) நெருஞ்சிப் பாடியின் வடகிழக்குப் பகுதி (3) வாரியூர்க் குன்றின் தென்பகுதி (4) புரசப்பட்டிக்கு அரைமைல் கிழக்கில்,அதாவது பெண்ணூற்றின் தென்கரை (5) பாக்கம் குளத்தின் பக்கம் (6) வீரராங்கேயிலிருந்து மூன்று மைலில் உள்ள தென்பகுதி (7) சங்கரவீரம் என்ற கிராமத்திற்குப் பக்கம் (8) சங்கர வீரத்திலிருந்து ஒன்றரை மைல் தொலைவு (9) பூக்காணம் என்ற கிராமத்திலிருந்து ஒரு மைல் தெற்குப் பகுதி (10) கல்ராயன் மலைக்குத் தென்கிழக்குக் கோடி (11) பூர்கஞ்சேரிக் கிராமத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் சிறு குன்றுகள் (12) பூர்கஞ்சேரிப் பள்ளத்தாக்கு (13) இன்னெடு கிராமத்திற்கு ஒன்றரை மைல் வடகிழக்கு (14) பெல்லாபூண்டியிலிருந்து சில அடி தூரத்தில் அமைந்திருக்கும் குன்றுகளின் சரிவுகள் (15) மூதூர்ப் பெரிய குன்றின் மேற்குச் சரிவு (16) மூதூர்ப் பெரிய குன்றிலிருந்து ஒன்றரை மைல் தெற்குப் பாகம் (17) ஏழூரிலிருந்து சிறிது தொலைவில் வடக்கில் அமைந்திருக்கும் பள்ளத்தாக்கு (18) அவியர் (ஔவையார்) மலையின்மேற்குச் சரிவின் அடிப்பாகம் (19) அரிய பாளையத்திற்கு இரண்டு மைல் மேற்குப் பகுதி (20) பைத்தூருக்கு வடமேற்குப் பாகம் (21) ஆத்தூர்க் குன்றின் அடிவாரம் (22) சிலபடுகைகள், பச்சைமலை (23) எழும்பலூர்க் குன்றிலுள்ள சில படுகைகள் (24) தும்மம் பட்டியிலும் சிந்திரிப்பட்டியிலும் உள்ள படுகைகள் (25) ஸ்வைதா ஆற்றின் வடக்குப் பகுதியும் கோநேரிப்பட்டிக்கு

அருகில் அமைந்திருக்கும் குன்று (26) சித்தலிங்கையின் வடக்கே அமைந் திருக்கும் குன்றுகள் (27) கீடா (கேடா) மலையின் தென்சரிவின் அடிப் பாகம் (28) இராஜாபுரத்தின் வடக் கிலும் தெற்கிலும்.

இந்த இடங்களில் மட்டுமில்லை நண்ப,

சேலம் மாவட்டத்தில் இன்னும் பல இடங்களிலும் இரும்புக் கனிப் பொருள்கள் கிடைக்கின்றன! அள வில் குறைந்தவை, தரத்தில் குறைந் தவை என்று தள்ளி ஒதுக்கியவை கூடத் தவிர, குறிப்பாகச் சில இடங் களைப் பற்றியும் அங்குக் கிடைக்கும் இரும்புக் கனிவளம் பற்றியும் ஆராய்ச்சி அறிஞர் கணக்கிட்டு இருக் கிறார்கள். அந்த விவரம் இதோ :

1.	கஞ்சமலை	...	54,648,000 டன்கள்
2.	கோடுமலை	...	12,450,000 டன்கள்
3.	பெருமாமலையும் புதுப்பாளையமும்	...	10,428,000 டன்கள்
4.	ஆத்தூர், சிங்கிலியா கோம்பை	...	11,724,000 டன்கள்
5.	சித்தேரியும் தெய்ஞண்டமலையும்	...	55,416,000 டன்கள்
6.	தீர்த்தமலை	...	47,520,000 டன்கள்
7.	இராசிபுரம் - நாமக்கல் மலைகள்	...	33,924,000 டன்கள்
8.	கொல்லிமலை	...	67,452,000 டன்கள்
9.	பச்சைமலை	...	11,088,000 டன்கள்

மொத்தம் 30,46,50,000 டன்கள் கனிப்பொருள்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. இக்கனிவளம் தமிழ் நாட்டு மக்களுக்குப் பயன்பட, 'சேலத்தில் இரும்பாலை' உருவாக வேண்டும் என்ற எண்ணம் பல்லாண் டுகளாகஇருந்தும் இப்பொழுதுதான் முயற்சி வெற்றியின் தலைவாயிலில் நடைபோடுகிறோம்.

பாதை காணப்படுகிறது!
பச்சைக் கொடியும் தெரிகிறது!
பொற்காலமும் உருவாகிறது!

பிறபின்

அன்புடன்
மாமூலன்

பார்வையிழந்தவர் நலன்

முதலமைச்சர் துயர் துடைப்பு நிதியிலிருந்து ரூ. 5000 உதவி

பார்வை இழந்தவர்களுக்காக மதுரையில் செயல் முறை முன்னோடித் திட்டத்துக்கு முதலமைச்சர் துயர் துடைப்பு நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பால்

FACT

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பால் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரையடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பால் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பால் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.

பாக்ட ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ்
திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம்: 2-வது மாடி,
19, வான்னட்-இன்.சீப்.ரோடு,
சென்னை-8.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்















Collaroid FT 2203 TM



அகில உலக வேளாண்மை இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின் அடிப்படையில் 1968-ம் ஆண்டு இந்தியத் தூதுக்குழுவில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக நான் கலந்து கொண்டேன். இந்தத் திட்டம் அமெரிக்க அரசால் 1948-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுப் பல்வேறு நாட்டு இளைஞர்களைத் தங்கள் நாட்டுக்கு அழைத்து அங்கு 6 திங்கள் சுற்றுப் பயணம் செய்யவும், வேளாண்மைக் குடும்பங்களில் தங்கிப் பண்ணை முறைகளை அறிந்து வரவும் ஏற்பாடு செய்துதருகின்றது. நான் ஏறத்தாழ ஆறு அமெரிக்கக் குடும்பங்களில் தங்கினேன். வேளாண்மைத் துறைக்குப் புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தில் ஒரு வாரம் தங்கியிருந்தேன். சிற்றூர்களில் உள்ள விவசாயக் குடும்பத்தில் அவர்களுடன் தங்கியதால் அமெரிக்க நாட்டு இளைஞர்கள் வேளாண்மைத் துறைக்குச் செய்யும் பணியை அறிகின்ற வாய்ப்புக் கிடைத்தது. ஆறு திங்கள் சுற்றுப் பயணம் செய்தபின் நெல் விளையும் நாடான பிலிப்பெயின்ஸ் நாட்டில் நடைபெற்ற ஆசிய இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு தாயகம் திரும்பினேன்.

அமெரிக்க நாட்டில் இளைஞர்கள் பணி புரிவதற்குப் பல மன்றங்கள் பேருதவியாக இருக்கின்றன. இளைஞர் கழகம், வேளாண்மைத் தொழில் புரிவோர் சங்கம், 4 கெச் (4 H) கிளப் என்று சொல்லப்படுகின்ற புகழ் மிக்க மன்றம் ஆகிய இவற்றில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் இளைஞர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு திங்களிலும் இருமுறை வேளாண்மை வளர்ச்சிக் கருத்துப் பரிமாற்றம் செய்கின்றனர்.

அமெரிக்க நாட்டில் இருக்கின்ற 50 மாநிலங்களிலும் புகழ் மிக்க இளைஞர் மன்றமாக இருப்பது, 4 கெச் (4 H) கிளப் என்று அழைக்கப்படும் மன்றமேயாகும். '4 கெச்' என்ற சொல் நான்கு முக்கியமான கொள்கைகளைக் குறிப்பதாகும். நல்ல கருத்துக்களைச் சிந்திக்க மூளை இருக்குமிடமான தலையை ஆங்கிலத்தில் குறிக்கும் Head என்ற சொல்லின் முதல் எழுத்து எச். நல்ல உண்மையான நம்பிக்கைக்கு அவசியமான நல்ல இருதயத்தை குறிக்கின்ற ஆங்கிலச் சொல்லான Heart-ம், நல்ல பணி புரிவதற்குத் தேவையான கையைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான Hand-ம், H (ஹெச்) ஐ முதலெழுத்தாகக் கொண்டவைகளே. நான்காவது Health. நல்ல முறையில் பணி புரிவதற்கு உடல் நலம் அவசியம். அதற்குரிய ஆங்கிலச் சொல்லான Health-ன் முதல் எழுத்து H ஆகும். இதுவே 4 H முறையாகும். ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொள்ளும் இளைஞர்கள் இந்த நான்கையும் கொண்டு என் மன்றத்திற்கும், மக்களுக்கும் நாட்டிற்கும் பேருதவியாக இருப்பேன் என்ற உறுதிமொழிகூற 4 H என்ற மன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தையும் துவக்குகின்றனர். இந்த மன்றம் அமெரிக்க இளைஞர்கள் மத்தியில்



செல்வாக்குப் பெற்றதாக இருக்கின்றது. 9 வயதில் இருந்து 19 வயது வரை ஆண், பெண் இரு சாராரும் இதில் உறுப்பினராக இருக்கலாம். 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் அவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கு மன்றத்திற்கு வருகின்றனர். ஒவ்வொரு கூட்டத்திற்கும் அரசு அலுவலர்களும் வந்து வேளாண்மை வளர்ச்சிக்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்றும் கூறுகின்றனர். திரைப்படம் மூலமும் அவர்களுக்கு விளக்கம் தருகின்றனர். இளைஞர்கள் தங்கள் பண்ணையில் செய்ததை மற்றெல்லாரிக்கும் சொல்கின்றனர். இத்தோடுமட்டுமின்றி,பாற்பண்ணை, மாடு வளர்ப்போர் சங்கம் ஆகியவற்றிலும் இளைஞர்கள் கலந்து உற்சாகத்தோடு பணி புரிகின்றனர்.

படித்துக் கொண்டிருக்கும் பள்ளி, கல்லூரி மாணவர்களும், மிக்க ஆர்வத்தோடு தங்களுடைய பண்ணைகளில் வேலை செய்கின்றனர். பள்ளி நாள் முடிந்ததும் வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்று என்ன வேலை இருக்கின்றது என்று கேட்டு இரவு சாப்பிடுவதற்குமுன்பு அதைத் தந்தையோடு சேர்ந்து செய்கின்றனர். மாட்டுப்பண்ணை, ஆடு வளர்த்தல், பால் பண்ணையில் சாணத்தைக் கூட்டுவது போன்ற வேலையைப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கும் வீட்டுப் பிள்ளைகள் தாமே செய்கின்றார்கள். சில இளைஞர்களுக்குத் தங்களுக்குச் சொந்தத்தில் பண்ணை இல்லாவிட்டால் பக்கத்துப் பண்ணையை அடைந்து பணி புரிந்துகொண்டு கல்வி கற்பதற்கு அந்தப் பணத்தைச் செலவு செய்கின்றனர். தங்களுடைய பெற்றோர்களைப் பணம் கேட்காமலேயே தாங்கள் கல்வியைக் கற்கின்றனர். பண்ணை வைத்து நடத்துபவர்கள் தங்களுடைய பிள்ளைகள் பண்ணைகளில் பணிபுரிந்தாலும் அவர்களுக்கு அதற்கு உண்டான கூலியைக் கொடுக்கின்றனர். இந்த முறை அவர்களை மேலும் தொடர்ந்து பணிபுரிய ஊக்குவிக்கிறது. அவர்கள் செய்கின்ற பணிக்கு மணிக்கு இவ்வளவு என்று கூலி தருகின்றனர்.

கோடை விடுமுறையில் சில குடும்பங்களில் பெற்றோர்களுக்குப் பண்ணையில் வேலை குறைவாகத் தெரியும். காரணம் என்னவெனில், பள்ளியும், கல்லூரியும் விடுமுறையாதலால் காலையில் இருந்து மாலைவரை தந்தையாரோடு பள்ளிப் பிள்ளைகள் பண்ணையில் பணி புரிகின்றனர். இன்று என்ன செய்தாய் என்று கேட்டால், ''என் தந்தைக்கு உதவியாக இருந்தேன்'' என்று பெருமையாக அங்கே சொல்லுகின்றார்கள். பெண்களும் டிராக்டர் ஓட்டுகின்றனர். இளைஞர்களின் பணி சிறப்பாக இருந்தால்தான் வேளாண்மைத் துறையில் வளர்ச்சியைக் காணமுடியும் என்ற எண்ணத்தில் டிராக்டர் ஓட்டுவதற்கு வயது குறைவாக இருந்தாலும் சில கட்டுப்பாடுடன் வீதிகளைத் தளர்த்தி ஓட்டுவதற்கு உரிய அனுமதியைத் தருகின்றனர் அப்படிப்பட்ட இளைஞர்கள் நெடுஞ்சாலையில் ஓட்டுவதற்கு அனுமதிக்கப் படுவதில்லை. ஆனால் வயல்களில் ஓட்டுவதற்கு அனுமதி வழங்கப் படுகின்றது. பெண்கள் பெருமளவில் வேளாண்மையில் பங்கு கொள்கின்றனர். அமெரிக்க நாட்டில் ஆண்கள் செய்யும் வேலையைக்கூடப் பெண்கள் செய்வதுடன் குறிப்பாக இளம் மகளிர்கள் பண்ணைகளில் பணி புரிகின்றனர். இந்த வழக்கம் எப்படி வந்தது என்று அங்குக் கேட்ட பொழுது, இரண்டாவது உலகப் போரில் ஆண்கள் வெளியிடங்களில் இருந்ததால் பெண்களே பண்ணைகளைப் பார்த்துக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டு நாளடைவில் அது அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்கு வசதியாக அமைந்துவிட்டது. இதுவே நாளடைவில் இளம் பெண்கள் வேளாண்மைத் துறையில் ஈடுபடக் காரணமாக அமைந்து விட்டது.

சில இளைஞர்கள் பசுமாடுகளைத் தங்களுக்கென்று தனியாக வளர்க்கின்றனர். அதற்கு இளைஞர்களை ஊக்குவிக்கப் பரிசு அளிக்கிறது அமெரிக்க அரசு. பெரியவர்களுக்கு மட்டும் நடைபெறும் விவசாயக்கருத்தரங்கு போன்றவைகட்கு இளைஞர்களும் பெற்றோர்களுடன் சென்று கவனிக்கின்றனர்.

அமெரிக்க நாட்டில் வேளாண்மைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பையனே அல்லது பெண்ணே காலையில் இருந்து

மாலைவரை வேளாண்மை சம்பந்தப் பட்ட நிகழ்ச்சிக்குச்சென்று வீட்டுக்கு வந்தவுடன், பெற்றோர்கள் 'இன்று என்ன கற்றுக் கொண்டாய்?' என்று கேட்டு அவர்கள் கூறுவதைக்கேட்டுப் பாராட்டுகின்றனர்.

வேளாண்மை வளர்ச்சிக்காக அகில உலக இளைஞர்களை அமெரிக்க நாட்டுக்கு அழைக்கின்றார்கள். 1968 ஆம் ஆண்டுமட்டும் 37 நாடுகளைச் சேர்ந்த 99 பேரை அமெரிக்க நாட்டிற்கு அழைத்தனர். அவர்களைப் பல வேறு மாநிலங்களில் உள்ள குடும்பங்களின் பண்ணைகளில் தங்கி அமெரிக்க விவசாய முறைகளை அறிய வாய்ப்புக் கொடுத்தனர். அதேபோல் அமெரிக்க நாட்டில் இருந்தும் பல்வேறு நாட்டிற்கு இளைஞர்களைப் பரிமாற்றுத் திட்டம் மூலம் அனுப்பி வேளாண்மை முறையை அறிந்து வரச் செய்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து அமெரிக்கா செல்பவர்களை இளைஞர் மன்றங்களில் அழைத்துப் பேசச் செய்கின்றனர். பேச அழைக்கப்பட்டால், பேசுபவர் பேசி முடித்தவுடன் இளைஞர்கள் தங்களுடைய சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளக் கேள்விகள் கேட்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். கேட்டறிந்தவைகளை மனத்தில் கொண்டு தங்களுடைய பண்ணைகளில் அவற்றைச் செயற்படுத்த ஆவன செய்கின்றனர்.

இப்படிப் படித்த இளைஞர்களுடைய ஒத்துழைப்பு இருக்கின்ற காரணத்தினால்தான் 100க்கு ஏறத்தாழ 7 சதவிகிதம் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க நாடு வெளி நாட்டுக்கு உணவுப் பொருள்களை அனுப்புமளவிற்கு உற்பத்தி செய்ய முடிகின்றது.

நம் நாட்டில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த வேளாண்மைக் குடும்பங்களில்மட்டுமே குடும்பத்தைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் பணிபுரிகின்றனர். ஆனால், அமெரிக்க நாட்டில் பல ஆயிரம் ஏக்கர் வைத்திருப்பவர்கள் வீட்டில் கூட எல்லோரும் பணிபுரிகின்றனர். அங்குக் கூலி அதிகம். ஆகையால்தான் இப்படிப் பணிபுரிகின்றனர் என்ற கருத்து இருந்தாலும், படித்த இளைஞர்கள் நம் நாட்டிலும் அதுபோல் வேலையில் ஈடுபட வேண்டும்.

இந்த அடிப்படையில் இப்பொழுது தமிழகத்தில் படிப்படியாக சில அமைப்புகள் தோன்றுகின்றன. மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சிரணி, இவை போன்ற பணிகளில் இளைஞர்கள் ஈடுபட ஊக்குவிக்கின்றது.

அமெரிக்காவில் மறைந்த குடியரசுத் தலைவர் கென்னடி அவர்களால் துவக்கப்பட்ட சமாதானப் படையில் அமெரிக்க இளைஞர்கள் பெருமளவில் சேர்ந்து கல்வி வளர்ச்சிக்கு, வேளாண்மை வளர்ச்சிக்கு என வெளிநாடுகளில் தங்கி இரண்டு ஆண்டுகள் முழு நேரத்திலும் இந்தத் திட்ட அடிப்படையில் பணி புரிகின்றனர். அவர்கள் திரும்பியவுடன் மேலும் வேளாண்மைத் துறையில் ஈடுபட ஊக்க மளிக்கின்றது.

அமெரிக்க நாட்டில் படித்துக் கொண்டிருக்கின்ற மாணவர்களும், பல ஆயிரக்கணக்கான நிலத்திற்குச் சொந்தமானவர்களுடைய வீட்டுப் பிள்ளைகளும் பண்ணை வேலைகளில் ஈடுபடுவதை மனத்திற் கொண்டு நம் நாட்டு வேளாண்மை வளர்ச்சிக்கு இளைஞர்களாகிய நாம் மேலும் பணிபுரிவோமாக.

[வானொலிப் பேச்சிலிருந்து]

———

தரமுள்ள நவீன விவசாயக் கருவிகள் தயாரிப்பார்கள்

ஜான் கலப்பை ஒர்க்ஸ்

மேலூர்.

ஆழ்கிணறு தோண்டுவதற்கான காலிக்ஸ் கோர்டிரில் தயார் செய்து சென்னை ரூரல் டெவலப்மெண்ட் டைரக்டர் அவர்கள் கே. டிஸ். 152118/67 தேதி 16-9-1967ன்படி பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு, விற்பனை செய்துவரும் சிறந்த ஸ்தாபனம்.

மேலும் தொழில் நுணுக்க ஆய்வுத் திறனின் முழுப் பயனை நல்ல சாகுபடியின் மூலம் பலனடைய எங்கள் ''ஜான் மரக் கலப்பைகள், இரும்புக் கலப்பைகள், தழைமிதி கருவிகள், சேர் கலக்கிகள், இன்டர் கல்டிவேட்டர்கள் மற்றும் ஜான் விவசாயக் கருவிகளையே உபயோகியுங்கள்.

விவரங்கட்கு :

ஜான் கலப்பை ஒர்க்ஸ்

காந்திஜி பூங்கா ரோடு,


மேலூர், (மதுரை மாவட்டம்)

லிங்கம் ஸ்டோர்ஸ்

அம்மன் சன்னதி

காரைக்குடி

PSG ஆயில் என்ஜின். எலக்ட்ரிக் மோட்டார், பம்பு செட்டுகளும் எலக்ட்ரிக் சாமான்களும், ''கதிர்'' சூபர் பாஸ்பேட் கலப்பு உரங்களும் கிடைக்கும்.



விவசாயத்தைப் பெருக்க அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் மூலமாகவும், நில அடமான பாங்குகள், தனியார் பாங்குகள் மூலமாகவும் பம்பு செட்டுகள் உங்களுக்கு கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள் :

''PSG'' ஆயில் என்ஜின் மோட்டார் பம்பு செட்டுகள், 'கதிர்' கலப்பு உரங்கள்.



1. பிள்ளையைப் போல்தென்னம் பிள்ளையைநாம் வளர்த்தால்
நல்லபயன் நேரும் நமக்கு.

2. வீட்டின் புறத்தமைந்த வெற்றிடத்தைக் காய்கறித்
தோட்டமாய்ச் செய்க தொடர்ந்து.

3. வளர்ந்த பயிரதனுள் மாடுகளை மேயவிடல்
குழந்தையைக் கொல்வதன் நேர்.

4. ஏற்ற உரமின்றேல் எவ்வாறு தான்விளையும்
நேற்றுவரை வாய்த்த நிலம்.

5. மழைபெய்யும் நாளில் மருந்தைத் தெளித்தல்
விழலுக் கிறைப்பதன் நேர்.

6. பயிரென்றும் பாராமல் பாழ்படுத்தும் பூச்சி
உயிருக்குக் காலன் மருந்து.

7. உரமளிக்கக் கூட்டுறவு வங்கியுண்டே; என்றும்
அரசே அதற்குத் துணை.

8. பசுமைப் புரட்சியின் பாங்கறிந்தால் உண்டு
வசையின்றி வாழும் வகை.

9. விளைவைப் பெருக்காமல் வீட்டில் குடும்ப
அளவைப் பெருக்கல் தவிர்.

10. வள்ளல் நமக்கு வயலாகும்; அவ்வயலை
உள்ளுவதால் உண்டு பயன்.

இது கணவர்கள் பக்கம்
மனைவியர் படிக்கவேண்டாம்



இங்கே 51 முறுக்குகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன; ஆனால் உண்பதற்கோ 182 விநாடிகள் பொறுத்திருக்க வேண்டும்...

2½ சுற்றுக்களில் 3½ அங்குல விட்ட முள்ள சுவையான, சத்துள்ள முறுக்குகள் 51 வேண்டுமா? அப்படியாயின், கீழ்க்கண்ட பொருட்களைச் சேகரியுங்கள்:

அரிசி மாவு 5 ஆழாக்கு;

வேர்க் கடலை ½படி;

உப்பு 2 தேக்கரண்டி,

கடலை எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் 1 லிட்டர் இவை போதும்!

இப்போது பொருட்கள் தயார் அல்லவா?

வேர்க்கடலையைச் சுத்தமாக உரித்துவிட்டு, அவற்றை இரண்டு மணி நேரம் ஊற வையுங்கள். பிறகு அதை ஆட்டுக்கல்லில் நன்றாக அரையுங்கள். பின்னர் அதைப் பிழிந்து, வேர்க்கடலைப் பாலைத் தனியே எடுத்துக் கொள்ளுங்கள்.


அடுத்ததாக, அரிசிமாவில் இப்பாலை விட்டு, உப்புத்தூளையும் சேர்த்து நன்றாகப் பிசையுங்கள்; உங்களுக்கு வியர்வை வரும்வரை விடாது பிசையவேண்டாம்.

இதை முறுக்கு அச்சு வாயிலாக 3½ அங்குல விட்டத்தில் 2½ சுற்றுக்கள் இருக்கும்படி எண்ணெயில் விடுங்கள்.

பிறகு எடுங்கள். அதுதான் கடலைப் பால் முறுக்கு. சுடச் சுடச் சாப்பிட வேண்டாம். சற்று ஆறிய பிறகு சிறிது சிறிதாக உண்ணுங்கள். உண்டு முடிக்க, சமையல் தொடக்கத்திலிருந்து 182 விநாடிகள் ஆகலாம்.

மனைவியிடம் இதைச் செய்யச் சொல்லுங்கள்; அவர் செய்யாவிட்டால், உங்கள் அலுவல்களை அரை நாள் தள்ளி வைத்துவிட்டுச் சமையலில் இறங்குங்கள்; மனைவிக்கும் முறுக்கைக் கொடுக்க மறந்து விடாதீர்கள்! பழி தீர்க்க வேண்டாமா?

— ராமா சேவிகா திருமதி வயலட் நேசமணி கூறக்கேட்டு எழுதியவர் எம். ஏ. லத்தீப்.



செங்கற்பட்டு மாவட்டத்தில் கன்னிகைப்பேர் கிராமத்தில் தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு கா. வேழவேந்தன் அவர்கள் மரத்தின் அடியில் அமர்ந்து மக்களின் குறையறியும் காட்சி.

குன்றக்குடியில்
நிலமில்லாதோருக்குத் தவத்திரு
குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி.
அவர்கள் பட்டா வழங்கினர்கள்.





சென்னை மாநகராட்சியினர் மவுண்ட் சாலையில் அமைத்துள்ள புதிய ஒளிவிளக்குகளை தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் 24-11-1969 அன்று ஏற்றிவைத்தார்கள்.







மாநிலத் தொழில்
வளர்ச்சிக் குழு
3-12-1969 அன்று
சென்னை இராசாசி
மண்டபத்தில் கூடியது.
அதில்
தொழிலமைச்சர்
மாண்புமிகு
செ. மாதவன் அவர்கள்
உரை நிகழ்த்தினார்கள்.



மேலே: குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கட்கும் தமிழ்நாடு அரசு அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்கட்கும் 19-11-1969 அன்று இராமேசுவரத்தில் ஆலய மரியாதையோடு வரவேற்பளிக்கப்பட்டது.

கீழே: அங்கேரி நாட்டிலிருந்து வந்திருந்த விவசாய அடிப்படைத் தொழில் துறையைச் சேர்ந்த ஆறு பேர்களைக் கொண்ட வல்லுநர் குழு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களை 22-11-69 அன்று சந்தித்தது.





தமிழ்நாட்டில் அறநிலையப் பணிகள்

தமிழ்நாடு, கோயில்களுக்கு மிகவும் புகழ்பெற்றது. தமிழ்நாட்டிற் போல மிக்க பழமையும், பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த கோயில்கள் பலவற்றை வேறு எங்கணும் காண்டல் அரிது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் துதித்துப் பாடிப் போற்றிய சிறந்த கோயில்கள் பற்பல, இற்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, நம் தமிழ்நாட்டில் மிக்கச் சிறப்புடன் விளங்கி வருகின்றன. பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர அரசர், நாயக்க மன்னர் என்பவர்களால் அமைக்கப்பெற்ற கோயில்கள், தமிழ்நாட்டிற்குப் பெருஞ் சிறப்பையும் புகழையும் அளித்து வருகின்றன.

இக் கோயில்களையும், இவற்றைச் சார்ந்த பல்வேறு அறக்கட்டளைகளையும், தமிழ்நாடு அரசின் அறநிலையத் துறை, கண்ணும் கருத்துமாகப் போற்றிப் புரந்து வருகின்றது. இச் செயலில், நம் தமிழ்நாடு அரசு, ஏனைய மாநில அரசுகளுக்கெல்லாம் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டு அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் 9347 கோயில்களும், 787 அறக்கட்டளைகளும், 105 திருமடங்களும் ஆக மொத்தம் 10239 சமய நிறுவனங்கள் இருந்து வருகின்றன.

அறநிலையத்துறை ஆற்றிவரும் சிறந்த பணிகளினுள், ஆண்மைக் காலத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் பழுது பார்க்கப்பட்டும், புதுப்பிக்கப்பட்டும் திருப்பணிகள் பல செய்யப் பெற்றுள்ளன. நூற்றுக் கணக்கான கோயில்களில் குட முழுக்கு விழாக்கள் சிறந்தமுறையில் நிகழ்த்தப் பெற்றிருக்கின்றன. 1-1-1968 முதல் இதுவரையில் மட்டும் திருத்தணி, வைத்தீசுவரன் கோயில், குமாரவயலூர் முதலிய 24 கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் சிறப்புற நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு அமைச்சர்
கே.வி.சுப்பையா

1-1-1968 முதல் 31-3-1969 வரையில் மட்டும் நம் தமிழ்நாடு அரசு பல்வேறு மாவட்டங்களில் உள்ள 60

கோயில்களுக்கு, 4 இலட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கியுள்ளது. 1959ஆம் ஆண்டின் அறநிலையச் சட்டம், 66ஆம் பிரிவின் கீழ், வருவாய் மிக்க கோயில்களில் இருந்து வருவாய் இல்லாத கோயில்களுக்கு நிதியுதவும் திட்டத்தின்படி, 509 கோயில்கள் நன்மையடைந்துள்ளன. இதன் மூலம் அக் கோயில்களில் இயன்ற அளவு பூசை முதலியன நடைபெறுவதற்கு வழிவகைகள் செய்யப் பெற்றுள்ளன.

அறநிலையத் துறையின் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும், கோயில்களின் வருவாய் சமீப ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. அண்மையில் ஓராண்டில் 122 கோயில்களின் வருவாய், பாராட்டத்தக்க வகையில் மிகுதிப்படுத்தப் பட்டுள்ளது. கடந்த ஓர் ஆண்டிற்குள் சுமார் 266 சமய நிறுவனங்கள், அறநிலையத்துறைப் பாதுகாப்பின் கீழ்ப் புதியனவாகக் கொண்டு வரப் பட்டிருக்கின்றன.

கோயில்களில் துப்புரவும், தூய்மையும், புனிதத் தன்மையும் நிலவுவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் அவ்வவ் வட்டாரங்களில் உள்ள கோயில்களில், தூய்மையும் துப்புரவும் பொறுப்பிலுள்ள கோயில்களை ஆராய்ந்து, அவற்றுள் தலைகிறந்து நிற்கும் கோயிலுக்கு வெள்ளிச் சுழற்கோப்பை பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2 ஆண்டுகளில் மட்டும், கோயில்களில் சுண்ணம் தீட்டப் பெற்றவை 56; வெளவால் தொல்லை ஒழிக்கப்பெற்றவை 133; செடி கொடிகள் கனியப்பெற்றவை 132; பழுதுபார்த்துப் புதுப்பிக்கப் பெற்றவை 154; பாகி நீக்கித் துப்புரவு செய்யப்பெற்ற திருக்குளங்கள் 51. இவற்றினுலெல்லாம் கோயில்களில் நாளுக்குநாள் வழிபட வருவோர் தொகை பெருகி வருகின்றது. திருமயிலை, வடபழநி, திருப்போரூர், திருத்தணி, வைத்தீசுவரன்கோயில், பழநி, திருச்செந்தூர், இராமேசுவரம் முதலிய பல கோயில்கள், இவ் வுண்மைக்குச் சான்று பகரும்.

கடந்த 2 ஆண்டுகளில்மட்டும், பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள கோயில்களில், மொத்தம் 106 அறக் கட்டளைகள் புதியனவாக, அன்பர்கள் பலரால் ஏற்படுத்தப்பட்டிருத்தல் குறிப்பிடத் தக்கது. இங்ஙனமே வருவாயின் அளவு மிகுதிப்பட்டு 51 கோயில்கள் அறநிலையப் பட்டியலிற் புதியனவாகக் கொண்டுவரப்பெற்றுள்ளன.

பக்தர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் வசதிகள் செய்து தரும் முறையில், ஒளிவிளக்குகள் அமைத்தல், குடி தண்ணீர் வசதி செய்தல், வழிபாட்டிற்குரிய திருநீறு, குங்குமம், சந்தனம், பன்னீர், பஞ்சாமிர்தம் முதலியன, தூயனவாகவும் நியாயமான விலைக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில் அறநிலையத்துறை பெரும்பணி புரிந்துள்ளது.

பெருகிவரும் யாத்திரிகர்களுக்குப் பயன்படுவதற்காக, திருச்செந்தூர், பழநி, திருக்குற்றுலம், திருத்தணி, சுவாமிமலை, வைத்தீசுவரன்கோயில் என்னும் இடங்களில் முன்பே அமைந்திருப்பதுபோல, கடந்த ஓர் ஆண்டிற்குள் சாத்தூர், பரமக்குடி, உத்தரகோசமங்கை, காளையார்கோயில், திருவாடானை, குமாரவயலூர் என்னும் எட்டு இடங்களில், ஒய்வு விடுதிகள் (Rest Houses) கட்டப்பட்டுள்ளன. அண்மையில் (4-7-1969 அன்று), இராமேசுவரத்தில் யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு, ரூபாய் 1,90,000 செலவில் ''விவேகானந்தர் இல்லம்'' என்னும் விடுதி ஒன்றும் கட்டி முடிந்து திறக்கப் பட்டிருக்கின்றது.

கோயில்களும் சமய நிறுவனங்களும் சமுதாய வாழ்விற் பெரிதும் பங்கு கொண்டு, பொதுமக்களுக்குப் பழங்காலத்திற் போலவே பல்லாற்றானும் பயன்பட்டு, நன்மை விளைவித்து வருதல் வேண்டும் என்னும் உயரிய குறிக்கோளுடன் பல சிறந்த ஏற்பாடுகள் அறநிலையத்துறையால் பெரிதும் செய்யப்பட்டு வருகின்றன.

பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படும் பொருட்டும், தமிழ்நாட்டுக்கே யுரிய சித்த மருத்துவ முறையை

ஆதரித்து வளர்க்கும் பொருட்டும், கிருப்புகலூர், திருக்குற்றாலம், திருச்செந்தூர், திருநெல்வேலி, சுவாமிமலை, வைத்தீசுவரன் கோயில், சமயபுரம், பழநி, பைம்பொழில் முதலிய இடங்களில் சித்த மருத்துவ இல்லங்கள் தொடங்கப் பெற்று நன்கினிது நடைபெற்று வருகின்றன.

''திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை'' என்னும் தமிழ்ப் பழமொழியின் பொருளை விளக்கி மெய்ப்பித்து உணர்த்தும் வகையில், திக்கற்ற ஏழைச் சிறுவர்களைப் பேணிப் புரந்து, கல்வியளித்து, நல்லமுறையில் வளர்த்து, வாழவைக்கும் சிறந்த நோக்கத்துடன், அறநிலையத் துறையின் ஆதரவில், கோயில்களின் சார்பில், திருத்தணி, சிக்கல், நாச்சியார் கோயில், வைத்தீசுவரன் கோயில், கல்லுப்பட்டி, பழநி, திருநெல்வேலி, திருச்செந்தூர், சென்னை ஆகிய இடங்களில் ''திக்கற்றோர் இல்லம்'' (orphanages) பல நன்கினிது நடத்தப் பெற்று வருகின்றன. பல கோயில்களில் இளம் பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை மாலைகளில் கடவுளுக்கு அபிடேகம் செய்யப்பெற்ற பால் விநியோகமும், மத்திய உணவளிப்பும் நன்முறையில் நடந்துவருகின்றன.

இளஞ் சிறுவர்களுக்கு ஆழ்வார்களும், நாயன்மார்களும் அருளிச் செய்துள்ள தெய்வத் தீந்தமிழ்ப் பாடல்களை, இளமையிலேயே இசையுடன் கற்பித்து, அவர்களைச் சமய வுணர்வும் ஒழுக்கமும் உடையவர்களாய் வாழச் செய்தற்குரிய வகையில், திருவெண்காடு, திருப்புகலூர், திருக்கடவூர், பழநி, கோயம்புத்தூர், திருவாரூர், திருக்களர், திருமயிலை ஆகிய கோயில்களில் தேவாரப் பாடசாலைகளும், கும்பகோணம் சாரங்கபாணி கோயில், மாயூரம் விளநகர் வரதராசப் பெருமாள் கோயில் ஆகியவற்றில் திவ்வியப் பிரபந்தப் பாடசாலைகளும் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன. இங்ஙனமே திருமயிலை, சிக்கல், காஞ்சீபுரம், சிதம்பரம், தருமபுரம், அள்ளூர் முதலிய இடங்களில் வேத சிவாகம பாடசாலைகள் உள்ளன.

பொதுமக்களின் நலன் கருதியும், சமய சமுதாயத் தொண்டுகளுள் ஒன்றாகவும், அனைவருக்கும் பயன்படும் பொருட்டும், பல கோயில்களில் பெருஞ் செலவில், எல்லா நவீன வசதிகளுடன் கூடிய திருமண மண்டபங்கள் கட்டப்பெற்று மிகவும் குறைந்த வாடகைக்கு விடப்பெறுகின்றன. அண்மையில் 19-6-1969 அன்று, திருவாரூரில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ''திருவாரூரான் திருமண மண்டபம்'' ஒன்று நம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றுள்ளமை செய்தி. இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கது. பல கோயில்களில் திருமணப் பதிவாளர்கள் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

''ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே'' எனச் செந்தமிழ் நாட்டுச் சிறந்த பெருஞ் சித்தர் ஆகிய திருமூலதேவர் அருளிச் செய்த படி, நாட்டு மக்களைக் கல்வியறிவுடையவர்களாக ஆகும்படிச் செய்தல், சிறந்த சமயப் பெருந்தொண்டு ஆதலின், கோயில்களின் சார்பில், பழநி, திருக்குற்றாலம், பூம்புகார், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கல்லூரிகளும், திருநெல்வேலி, திருவெண்காடு, மதுரை, இராமேசுவரம், திருமலை, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப்பெற்று வருகின்றன. இவற்றுள், பெண்களுக்காக இரு கலைக்கல்லூரிகளும், 6 உயர்நிலைப்பள்ளிகளும் அமைந்திருத்தல் மகிழ்ச்சிக்குரியது.

இத்தகைய கல்வி வளர்ச்சிப் பணிகளுக்கு, அறநிலையத்துறையின் பொதுநல நிதியில் இருந்து உதவியளிப்பதற்கு வழிவகைகள் செய்து, அதற்கு ஏற்றபடி அறநிலையச் சட்டம் (97) ஆம் பிரிவு அண்மையில் திருத்தப் பெற்றிருப்பதையும், இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடலாம்.

சமய உணர்வையும், பக்தியையும், சமய தத்துவ நூற் கருத்துக்களையும் பொதுமக்களிடையே பரப்பும் பொருட்டுத் ''திருக்கோயில்'' என்னும் திங்கள் இதழ் ஒன்றும், கடந்த 11 ஆண்டுகளாக மிகவும் சிறந்த முறையில் நடத்தப் பெறுகின்றது. சமயத்துறையில் தலைசிறந்த பேரறி

ஞர்கள் பலர், அதன்கண் அரிய, சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வற்றை எழுதி வருகின்றனர். தமிழகத்தில் மட்டுமின்றி இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் உள்ள சமயப்பற்று வாய்ந்த தமிழன்பர்கள் பலர், இதன் உறுப்பினராகப் பயன்பெறுகின்றனர்.

இந்து சமய மக்கள் தங்கள் சமயத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளவும், தங்களுக்குரிய சமய நம்பிக்கையை வலிமைப்படுத்திக் கொள்ளவும், தங்களுடைய வாழ்க்கையை இந்து தருமத்திற்கும் ஒழுக்கப் பண்பாடுகளுக்கும் ஏற்ப நடத்தத் துணை செய்யவும், அறநிலையத் துறையின் சார்பில், தென்னாட்டின் திருமடங்களையும், திருக்கோயில்களையும் இணைத்துத் ''தமிழ்நாடு தெய்வீகப் பேரவை'' என்னும் சமய நிறுவனம் அண்மையில் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடம் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி முதலிய ஆதீனங்களின் தலைவர்கள் பலரும் அதன் உறுப்பினராக உள்ளனர். அறநிலைய ஆணையர் அதன் துணைத் தலைவராக இருக்கின்றார்.

இந்து சமயப் பிரிவினரிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன வற்றை விலக்கி, அவர்களிடையே பொதுவானவைகளை மட்டும் வலியுறுத்த, இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் நம்பிக்கையுடைய இந்துக்கள் அனைவருக்கும் பயன் விளைவிக்கும் வகையில், பேரவையின் பணிகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

சமய நிறுவனங்களும், கோயில்களும், அறக்கட்டளைகளும், எந்தெந்த நோக்கத்திற்காக ஏற்பட்டனவோ, அந்தந்த நோக்கங்களுக்குரிய செயல்களையும், கடமைகளையும் அவைகள் சரிவரப் புரிந்து வருவதற்கு, எல்லா வகையாலும் தமிழ்நாடு அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது. அறநிலையத் துறையின் சார்பில் சமய வளர்ச்சி குறித்துப் பலதிறப் பணிகள் நடைபெறுகின்றன. சமயப் பிரசாரகர்கள் பலர் (36) கோயில்களில் பணியாற்றி வருகின்றனர். போதிய வருவாய் உள்ள கோயில்களில், திருமுறையும் திவ்யப் பிரபந்தமும் பாடுவதற்கு, 58 ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். காலை, மாலை வேளைகளில் பக்திப் பாடல்கள் 367 கோயில்களில் ஒலிபரப்பப்படுகின்றன. விழாக் காலங்களிலும், சிறப்பு நாட்களிலும் ஏறத்தாழ 409 கோயில்களில் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றப்படுகின்றன. மார்கழி மாதத்தில் நூற்றுக் கணக்கான கோயில்களில் திருவெம்பாவை, திருப்பாவை மாநாடுகள் சிறப்புற நடத்தப்பெறுகின்றன.

இத்தகைய செயல்கள் பலவற்றிற்கும் இன்றைய தமிழ்நாடு அரசு பெரிதும் ஆதரவு அளித்து வருவதுடன், தஞ்சைப் பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், ஸ்ரீரங்கம், இராமேசுவரம் முதலிய பல பழம்பெரும் கோயில்களை எல்லாம் போற்றிப் பாதுகாத்துத் திருப்பணி செய்வதற்கு விழைந்து பெரிதும் முயன்று வருகின்றது. இத்துறையில் நம் முதலமைச்சர் அவர்கள், ஆழ்ந்த பற்றும், அளவிலா ஆர்வமும் கொண்டு முயன்று வருகின்றார்கள்.

தமிழ்நாடு அரசு மட்டுமேயன்றி, தமிழகப் பொதுமக்களும், அறநிலையத்துறை ஆற்றிவரும் அரிய பல சிறந்த பணிகளைப் பெரிதும் அறிந்து போற்றிப் பாராட்டிப் பயன்கொள்வர் என்பதில் ஐயமில்லை.

[வானொலிப்பேச்சு 19-10-'69]

———



ஏற்றந்தரும் வயல்களுக்கு
எருவேணக்க வந்தாள்—அவள்
எருவேணக்க வந்தாள்—அவள்
எண்ணத்தையும் தந்தாள்...!

புன்முறுவல் பூத்திடவே
புதுவிதையை நட்டாள்—அவள்
புதுவிதையை நட்டாள்—என்
உள்ளத்தையும் தொட்டாள்!

நாணுகின்ற இடையசைத்து
நாற்றுநட வந்தாள்—அவள்
நாற்றுநட வந்தாள்—காதல்
நெஞ்சத்தையே தந்தாள்!

கலேபயின்ற கன்னியவள்
களேபறித்து நின்றுள்—அவள்
களேபறித்து நின்றுள்—என்
கண்களேயே வென்றுள்!

அல்லித்தண்டு கைகளினுல்
அறுத்திடவே முனேந்தாள்—கதிர்
அறுத்திடவே முனேந்தாள்—எனே
அரவணேக்க கனிந்தாள்!

நெல்மணியை இல்லத்திலே
நிரப்பியுமே மகிழ்ந்தாள்—அவள்
நிரப்பியுமே மகிழ்ந்தாள்—காதல்
நினேவகல நெகிழ்ந்தாள்!

அமோக விளைச்சலுக்கு யூரியா



இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்பொரேஷன்
தயாரிப்பு

FDSNLC 1142TM

அறிவுக்கு ஓர் விருந்து

உலகின் தலை சிறந்த நூலாகப் பிறநாட்டு அறிஞர் பெருமக்களும் போற்றும் தமிழ்மறையைப்பற்றியும் அதன் பெருமைகளைப் பற்றியும் தமிழாய்ந்த சான்றோர் சிலர் தெரிவித்த கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அக்கருத்துக்களை வெளியிட்டவர்கள் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

யார் யார் எவ்வகைக் கருத்துக்களை வெளியிட்டிருப்பார்கள் என்று உங்களால் ஊகிக்க முடியுமா?

திருக்குறள் பற்றிய உங்கள் தமிழறிவுக்கு ஓர் அரிய விருந்து. [யார் யார் எதைச் சொல்லியுள்ளார்கள் என்பது 64ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.]


சொன்னவர்கள் இவர்கள் :




டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்



தமிழ்க் கடல் மறைமலையடிகள்



நாவலர் இரா. நெடுஞ்செழியன்



தமிழ்த்தென்றல் திரு. வி. க.

நூலாசிரியர்கள் சொல்வதில் மிகச் சிறந்தவை

1. உலகிலுள்ள நூலாசிரியர்கள் சொல்லியுள்ள கருத்துக்களைத் தொகுத்து மிகச் சிறந்தது எது என்று சொல்ல முடியுமா?

''கடவுளே நம்பியோர் கைவிடப் படார்'' என்பதுதான் என்று நீங்கிறீர்களா? அதுவல்ல?

வள்ளுவர் எது என்று எடுத்துரைத்திருக்கிறார்.

உலகிலுள்ள எல்லோருடனும் பங்கிட்டு உண்டு வாழ்வதுதான் உலகிலுள்ள நூல்கள் சொல்லும் கருத்துக்களில் தலைசிறந்தது என்கிறார்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.''

* * *

தமிழும் குறளும்

2. தமிழ் என்பதும் மூன்றெழுத்து. குறள் என்பதும் மூன்றெழுத்து. தமிழ் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படும். குறளும் அறத்துப்பால், பொருட் பால், இன்பத் துப்பால் என்று மூப்பாலாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழ் 'அ' என்ற உயிர் எழுத்தில் தொடங்கி 'ன்' என்ற மெய்யெழுத்தில் முடிகிறது. குறளும் 'அகர முதல எழுத்தெல்லாம்... என்று 'அ' என்னும் உயிர் எழுத்தில் தொடங்குகிறது. குறளின் இறுதிப்பாடலில் ''...கூடி முயங்கப் பெறின்'' என்று 'ன்' என்னும் மெய் யெழுத்தில் முடிகிறது. தமிழ் என்பதில் 'ழ்' என்ற ழகரச் சிறப்பெழுத்து உள்ளது. குறள் என்பதில் 'ற்'கரச் சிறப்பெழுத்து உள்ளது.

மிகச்சுருங்கிய வெண்பா யாப்பினைத் திருவள்ளுவர் எடுத்தது ஏன்?

3. மக்களுயிர்க்கு வேண்டப்படும் பொருட் குறைவுகளெல்லாம் விரித்துரைப்போமெனப் புகுந்த வடமொழி மிருதி நூல்கள் வரம்பின்றி விரிந்தமையாற்றான் பயன்படுதலின்றி வழக்கு வீழ்ந்து ஒழிந்தன. உயிர்க்கு உறுதிப் பொருள்நாடி அவற்றையெல்லாந் தொகுத்து உரைக்க ஒருப்பட்ட திருவள்ளுவனார் இந்நுட்பம் தேர்ந்து தாங்கருதிய பொருள்களைக் கருதியவாறே தெரிவித்தற்குச் சிறந்த கருவியாக இக் குறள் வெண்பாவினுல் நூல் இயற்றுவாராயினர்.

* * *

திருவள்ளுவர் அறவோர்

4, திருவள்ளுவர் என்னும் நினைவு தோன்றும்போதே உலகமும் உடன் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுதற்குக் காரணம் என்ன? காரணத்தைத் திருவள்ளுவர் அருளிய நூல் உணர்த்தும். அந்நூலே திருவள்ளுவரை உணர்த்தற்குரிய கருவியும் ஆகும்.

திருவள்ளுவர் வெறும் கலைப் புலமையில் நின்றவரல்லர்; அவர் இயற்கைப் புலமையென்னும் தெய்வப்புலமை பெற்றவர்; அறவோர். திருவள்ளுவர் அறவோரென்பது அவர்தம் தெய்வப் புலமையினின்றும் முகிழ்த்த வாடாமலராகிய திருக்குறளால் நனி விளங்கும். திருவள்ளுவரின் அறத்தில் நின்று, பொருளில் புகுந்து, இன்பத்தில் இயைந்தால் அவர் தம் உள்ளம் புலனுகும்.

திரட்டித்தந்தவர் : நி. சந்திரசேகரன்
பி.காம்.



[புலவர் கு. சுப்புராமன்]

நல்லதோர் நாட்டிற்கிலக்கணம் வகுத்த வள்ளுவர்,

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு'

என்றுரைக்கின்றார். குறையாத விளைச்சல் வேண்டும்; நிறைகுணச் செம்மல்கள் வேண்டும்; பெருஞ் செல்வர் வேண்டும். செல்வத்தைப் பயன்படும் வகையில் சேமித்து வைக்கும்நயனுடையாளரைத் தாழ்விலாச் செல்வரென வள்ளுவர் குறிப்பிடுகின்றார். பொருள் இலார்க்கு இவ்வுலகில் இன்பமில்லை என்று கூறுகின்றார். இதை நாம் கண்ணாரக் காண்கிறோம். பொருளில்லையேல் குடிப் பிறப் பழிந்து, கல்வியெனும் பெரும் பூணையை விடுத்து, நாணை கீளைந்து, மாணெழில் சிதைந்து, மானங்கெட வாழவேண்டிய இழிநிலை ஏற்படும். எனவே, பொருளின் இன்றியமை யாமைபற்றிச் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை.

'ஈட்டி எட்டின மட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்' 'பணம் பந்தியிலே' என்ற பழ மொழிகள் பொருளினது ஆற்றலைப் போற்றுகின்றன. பொருளுள்ளவன் எத்தகைய செயல்களையும் எளிதில் முடித்துக் கொள்கின்றான். நினைவிற் கும் எட்டாமல் கனவாகவே இருந்த நிலவுப்பயணம் இன்று வெற்றியுடன் நிலைவேறிவிட்டதென்றால் அதற் குக் காரணம் அறிவாற்றல் மட்டு மன்று; பொருள் பெருந்துணை செய் தது என்பதை மறந்துவிட முடியாது. கையில் பொருள் வைத்து ஒரு செயலை முடித்தல், 'குன்றின்மீது நின்று, கீழே நடக்கும் யானைப் போரைக் காண்பது போன்று எளிதானது' என்று வள்ளுவர் அழகுற விளக்குகின்றார்.

'குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை'

என்பதே அக் குறள். பொருளற்ற வன் வாக்கு வேதவாக்காயினும் செல்லாவாக்காகின்றது; நல்லவனு யினும் உலகத்தார் கண்களுக்குப் பொல்லாதவனுகக் காட்சியளிக் கின்றான். உலகத்தார் இருக்கட்டும்! பெற்றதாய்கூட அவனை வெறுப் பாள்!

'இல்லானை இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாயும் வேண்டாள் செல்லாது அவன் வாயிற் சொல்'

என்பது பழம் பாடல். இன்றைய சமுதாயத்தில் எதற்கும் பொருளே முதற்கண் தேவைப்படுகின்றது. வீட்டாயினும் சரி, நாடாயினும் சரி; கேடில்லாமல் நீடுவாழவேண்டுமா யின் பொருளல்லவற்றையும் பொருளாகச் செய்யும் பொருள் மிகமிகத் தேவை. எனவே, அரும் பாடுபட்டுச் சேர்க்கும் செல்வத் தைப் பாழ்படுத்தாமல் பயன்படச் செலவுசெய்து மீதிவைத்துச் சேமித் தால் நீதென்பது யாதென்று தெரி யாமல் வாழலாம். மக்களுக்கு அறம்

உணர்த்த வந்த பெரியோர் அனை வரும் சேமிக்க வேண்டுமென்பதை மிகமிக வலியுறுத்திச் சென்றுள் ளனர். அவரவர் வருவாய்க்குள் செலவுகளை வரைப்படுத்திச் சேமிப் பது சிறந்த ஒழுக்கம் ஆகும். திட்ட மிட்டுச் செலவு செய்தலைக் கற்றுக் கொள்ளவில்லை யென்றால், கட்டி கட் டியாகத் தங்கப்பாளங்கள் இருந்தா லும் கிட்டமாற் போகும். குன்றனைய செல்வமும் குன்றும். வருவாய்க்குள் செலவை அமைத்துக் கொள்ளுதல் கேடுவராது காக்கும் வழியாகும்.

'ஆகா ளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை'

'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றக் கெடும்'

என்பன பொய்யா மொழிகளாகும். சேமித்து வைக்கவேண்டுமென்பதை விளக்கும் வள்ளுவர்,

'செய்க பொருளைச் செறுநர் செருக் கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்'

என்னும் குறட்பாவில் பொருளைத் திரட்டுக; ஏனெனில், உன் பகைவனை அழிக்கும் கருவிகளுள் செல்வத்தைப் போன்று கூர்மையானது வேறு ஒன் றும் இல்லை என்கிறார். செல்வமிருப் பின் அறமும் இன்பமும் ஒருசேரக் கைகூடும் என்பதனை

'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு'

என்னும் குறளால் கூறுகின்றார்.

'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும்
உலப்பெய்
தடுவது போலும் துயர்'

என்ற நாலடிப் பாடல் வள்ளுவர் கருத்தினை வலியுறுத்து கின்றது.

செல்வம் நிலையற்றது எனப் புலவர் கள் கூறியிருப்பினும், நியவழிகளில் பொருள் சேர்த்தலையும், செல்வச் செருக்கால் பிறருக்குத் தீங்கு செய் தலையும் தடுக்கவே கூறியுள்ளனர் எனக் கொள்ளவேண்டும். பொரு ளைப் பெரிதென மதிக்காத பாரதி யார்கூட,

'பொருளிலார்க்கு இனமிலை தூணை யிலை
பொழுதெலாம் இடர் வெள்ளவந் தெற்றுமால்
பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்'

என உணர்ந்து பாடியுள்ளார்.

எனவே, 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்பதற்கிணங்கக் காசுள்ளபோதே சேர்த்துக் கொள்ள வேண்டும். 'சிக்கனமாக இருப்பதே ஒருவித வருமானத்தைப் போன்றது தான்' என்பர் ஓர் அறிஞர்.

'ஆன முதலில் அதிகம் செலவானல் மான மழிந்து மதிகெடும் போனதினை
எல்லார்க்கும் கள்ளனுய் ஏழ்பிறப்பும் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு'

என ஔவைப் பிராட்டியும் எச்ச ரிக்கை செய்துள்ளார்.

மலர்தோறும் சென்று தேனீ தேனைச் சேர்த்து வைப்பதாலன்றே மருந்திற்கும் அருந்தப் பயன்படுத்து கின்றோம். இல்லையேல் மருந்திற்குக் கூட கிடைக்குமா?

மழைபெய்து வெள்ளம் பெருக் கெடுத்து ஓடும்போது, குளத்திலும் ஏரியிலும், அணையிலும் சேமித்து வைத்துக் கொண்டால்தானே இரு போக, முப்போக நெற்களைச் விளை விக்க முடியும்? இல்லையேல் எக்கதி ஏற்படும்?

சேமித்து வைப்பவன் தனக்கு மட்டுமல்ல; தன்வழிவழி வாழ்வார்க் கும் தன்நாட்டிற்கும் நல்வழியைத் தேடிவைப்பவனுகின்றன். பொறுப் புள்ள ஒவ்வொரு குடிமகனும் சேமிக் கும் பழக்கத்தை முதற்கடமையாகக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் எத்தனையோ எதிர் பாராதசெலவுகள் நமக்குத் திடீரென வருகின்றன. தலைவலியும் காய்ச்சலும் முன்னறிவிப்போடு வருவதில்லை. உறவினரும் விருந்தினரும் வருவர். பள்ளி செல்லும் குழந்தைகள் செலவுப் பட்டியலைக் கொணர்ந்து நீட்டும்; அப்போது கையிற் பொரு ளில்லையேல் துன்பம் நம்மை வாட்

டும். எனவே சேமிப்பில் நாட்டம் செலுத்தினால் நமை வாட்டும் வறுமையை ஓட்டிப் பிறருடன் போட்டி போட்டு முன்னேறலாம். வெள்ளம் வரும்முன் அணைகட்ட வேண்டும். வந்தபின் வருந்துவதால் பயனில்லை.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

எனவே, துன்பம் போக்கி இன்பம் சேர்ப்பதற்கு - குழந்தைகளின் அறிவை நிறைவுடன் வளர்ப்பதற்கு-மக்கள் வாழ்வு மறுமலர்ச்சி அடைவதற்கு - சிறுசேமிப்பு மிகமிக அவசியம்.

தனியொருவனுக்கே சிறுசேமிப்பு உயிர்நாடி என்றால் மக்களால் ஆளப்படும் நாட்டிற்கும் அது எவ்வளவு தேவை என்பதைச் சொல்ல வேண்டுமோ? நாட்டின் வருவாயை நிர்ணயித்து வரவு செலவுத் திட்டத்தை வகுத்து, கடலெனப் பெருகிய ஏரிகளும், விண்ணைமுட்டும் எழிற் கூடங்களும், கண்ணைக்கவரும் வண்ணமலர்ச் சோலைகளையும், பாலை வனத்தைப் பசுஞ் சோலையாக்கும் வாய்க்கால்களையும் கட்டி முடிக்கின்றோம். மற்றும் பெருந்தொழிற்சாலைகளை நிறுவ, நிலத்திற்கடியிற் புதைந்து கிடக்கும் கனிவளங்களைப் பயன்படுத்தக் கோடிக்கணக்கில் பணம் தேவை. அப்போதெல்லாம் வெளி நாடுகளை நாடி ஓடமுடியுமா?

நம் எல்லைகளில் தொல்லைதரும் பகைவரை ஓட்டி நாட்டைக் காத்திடப் படைபலம் வேண்டும். திடீரெனப் புயலினால் - வெள்ளத்தினால்-தீயினால் பேரிழப்பு நிகழும்; மழையின்றிப் பஞ்சம் தலைவிரித்தாடும். இத்தகைய நேரங்களில் நமக்குக் கைகொடுக்கும் தெய்வமாக - வாழ்விக்க வந்த வள்ளலாக - இணையற்ற துணையாக - வறுமையென்னும் பகையினை அழிக்கும் கனையாக - துன்பக் கடல்கடக்கும் புணையாக உதவுவது சிறுசேமிப்பேயன்றி வேறெதுவும் இல்லை. எனவே, வெள்ளமெனப் பெருகும் செலவினைத் தடுத்து, சேமிப்பு என்னும் அணையைக்கட்டி, பொருள் என்னும் நீரைத் தேக்கி, இன்பம் என்னும் பயிரை விளைவிக்கலாம்.

அரசினர் செயற்படுத்திவரும் சிறுசேமிப்புத் திட்டத்திற்கு நம் முழு ஒத்துழைப்பையும் நல்குவோம். நம்மால் இயன்ற அளவு சேமிப்போம். ரூ.5, ரூ. 10, ரூ. 100 பரிசுப் பத்திரங்கள் வாங்கினால் நம் பணம் பத்திரமாக இருப்பதோடு வட்டியோடு திருப்பிப் பெறலாம். அதனால் அரசினர் அரிய திட்டங்களை நிறைவேற்ற இயலும். சேமிப்பால் நாம் பயன் பெறுவதோடு நாட்டின் முன்னேற்றத்திலும் பங்கு பெறுகின்றோம். தாய் நாட்டின்மேல் உண்மைப் பற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் சிறுசேமிப்புச் செய்து வருமானத்தைப் பெருக்குவோம்-நம் மானத்தைக் காப்போம்.

சிறுதுளி பெருவெள்ளம் அன்றே?

அடுத்த 'சீரணி'

மகளிர் இதழாக

வெளிவரும்

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன்கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களே ஆதரிப்பது, உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனிவெல்லம் * சர்க்கரை * மண் பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4

வள்ளுவர் வாழ்விடம்



கோவை இளஞ்சேரன்

இந்த ஆண்டு அறிஞர் அண்ணா அறுபது. அறிஞர் பெருந்தகை நம் முடன் இல்லை. நினைத்தால் நெஞ்சம் கொதிக்கிறது. அவர்கள் வாழ்ந்த இடம், கையாண்ட பொருள்களைக் காண்கிறோம். அவை கொதிப்பைக் குளிராக்க இயலா. ஆயினும், ஆற்றுமை ஓரளவு நழுவும்.

இந்த ஆண்டு அண்ணல் காந்தியடிகளின் நூறாவதாண்டு. அடிகளை நம்மிடமிருந்து பிரிந்தனர். உன்னினுள் உள்ளம் குமுறுகிறது. அண்ணல் வாழ்ந்த குடில்கள், புழங்கிய பொருள்களைக் காண முடிகிறது. அவற்றால் குமுறலைக் குறைத்துக் கொள்ள முடியவில்லை. எனினும், ஆறுதல் தழுவுகிறது.

இந்த ஆண்டு திருவள்ளுவப் பெருந்தகையின் ஈராயிரம். அத் தெய்வத் தந்தை நம்பால் இருக்க இயலாது. எண்ணினால் ஏக்கம் கவ்வுகிறது. அப் பெருமான் கைக் கொண்ட பொருள்களைக் காண முடிகிறதா என்றால் ''இல்லை'' என்ற சொல் தான் எஞ்சுகிறது. அப்பெருமான் வாழ்ந்த இடம்.....புள்ளிகளைத்தான் இடமுடிகிறது; ஏக்கம் போக்க ஏது இல்லை. வாழ்ந்த இடம் புள்ளிகளைத் தான் பெறுகிறதேயன்றி முற்றுப் புள்ளியைப் பெறவில்லை; புள்ளிகளை நிரப்ப முயலலாம்.

தொன்மைச் சான்றோரின் காலத்தையோ வாழ்ந்த இடத்தையோ காண இன்றியமையாத சான்றுகள் வேண்டும். தொல்புதைபொருள்கள், பண்டை இலக்கியங்களிற் குறிப்புகள், கல்வெட்டுகள், தக்க இயைபான செவிவழிச் செய்திகள் புறச் சான்றுகளாகும். ஆசிரியர்தம் நூலுள் கிடைப்பன அகச்சான்றுகளாம். புறச் சான்றினும் அகசான்றே வலுவுடைத்து.

''மாதாரு பங்கி மறுவில் செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு''
''வையைத்த கூர்வேல் வழுதி
மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்''

—என்பன திருவள்ளுவமாலை வெண்பாக்களின் அடிகள். இவை கொண்டு திருவள்ளுவப் பெருந்தகை மதுரையில் வாழ்ந்திருக்கலாம் என்றும், 'கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி மனமகிழத் திருவள்ளுவர் முப்பாலை மொழிந்தார்' (துடிசைக் கிழார் அ. சிதம்பரனார் கருத்து) என்றும் குறிப்பர்.

தொண்டை நாட்டுத் திருமயிலை (மைலாப்பூர்) வாழ்ந்த இடம் என்று செவிவழிச் செய்திகொண்டும், திருவள்ளுவர் கோயில் அமைந்தது கொண்டும் குறிப்பர். இவைகொண்டு வெளிநாட்டறிஞர் சீகண்பால்கு என்பார் ''தூயர் தாமசு வாழ்ந்த இடத்தில் திருவள்ளுவர் வாழ்ந்தார்'' என்று குறித்தார்.

திருவள்ளுவர்தம் வாழ்வைக் குறிக்கும் தொடர்புடைய திருவள்ளுவமாலை, ஞானுமிர்தம், கபிலரகவல், திருவள்ளுவர் கதைகூறும் வெண்பாக்கள், சில சிற்றிலக்கியத் தொடர்கள், தனிப்பாடல்கள் முதலியன யாவும் சொல்லமைப்பால், மரபு வேறுபாட்டால் பல ஐயங்களை எழுப்புவன. அவற்றை மேலும் ஆய்வதால் ஐயங்கள் வைரம் பாய்ந்து கொண்டே போகின்றன. இவை அறிவிக்கும் கருத்துக்களால் ஒன்றற்கொன்று வேறுபாடு அமைந்தவை; மாறுபாடு உடையன; முரண்பாடு

கொண்டவை. எனவே, சான்றுகள் ஈடு கொடுத்து நிற்பவையாகா.

வாழ்வியலின் பொது நெறியை நாடி உலகெல்லாம் சுழன்றுலும் இறுதியில் திருவள்ளுவப் பெருந்தகையை அடைந்து நெஞ்சம் நிறைவு பெறுதல்போல், அவர்தம் வாழ்விடமாம் செய்தியறியவும் அப்பெருந்தகையை நாடுதலே இயல்புடைத்தாம். அப்பெருந்தகை அருளியுள்ள முப்பாலாம் பல் பொருட்பேழை நாம் பெற்றுள்ள அரும் புதையல். அப்புதையலின் மணியான சொற்கள் பல தமிழ்நாட்டின் ஒரு பகுதியை அடையாளங் காட்டுகின்றன. சிறப்பான தொடர்கள் பல அப்பகுதியைச் சுற்ற வைக்கின்றன. ஆங்காங்கு தென்படும் நடைமுறைத் தொழில்கள் சில அப்பகுதியை அணைத்து நிற்கின்றன. பழக்க மரபுகள் சில அப் பகுதியைச் சுட்டி நிற்கின்றன.

எந்த நூலிலும் அந்த நூலாசிரியர் வாழ்ந்த பகுதியில் பெருவழக்காய் வழங்கும் சொற்கள், தொடர்கள், தொழில் முறைகள், மரபுகள் அமைதல் இயல்பு. அவை, அவ்வாசிரியர் வாழ்விடத்தைக் காட்டிக்கொடுக்கும் அடையாளச் சின்னங்கள். அவ்வடையாளச் சின்னங்கள்வழி முன்னர் இடப்பட்ட புள்ளிகளை நீக்கி நிரப்ப முயலலாம்.

சொற்கள்

இவ்வகை அடையாளச் சின்னமாகத் திருக்குறளில் பட்டொளி வீசி நிற்கும் சொல் ''ஊருணி'' (குறள் 215) எனுஞ்சொல். இச்சொல் ஊர் மக்களால் உண்ணப்படும் நீர் நிலையைக் குறிப்பது. சில இடங்களில் கேணியைக் குறிக்கும். மணக்குடவர் இதற்கு ''ஊர் உண்கின்ற கேணி'' என்றே குறித்தார். ''ஊருண் கேணி'' எனப் புறநானூறும் (392), குறுந்தொகையும் (399) பேசும். ''ஊருணி'' செந்தமிழ் நாட்டுச் சொல். அதனினும் முகவை மாவட்டத்தில் (இராமநாதபுரம் மாவட்டம்) பெருவழக்காயுள்ளது. தமிழகத்தின் பிறபகுதிகளாம் சோழ, சேர, தொண்டை நாடுகளில் வழங்காச் சொல் என்பதும் அறியத் தக்கது.

அடுத்து முகவை மாவட்டத்தின் அடிப்படையைக் கொண்டதாய் அமைந்த சொல் ''மாடு'' என்பது. சோழநாட்டார்தம் செல்வம், நெல் வயல்களைக் கொண்டு அளவிடப்படுவது. சேர நாட்டாரது செல்வம் தென்னந் தோப்பு. பாண்டி நாட்டில் முகவை மாவட்டத்தார் தம் செல்வம் மாட்டு மந்தை. அப்பகுதி நிலைமைத் தொடர்பில் செல்வம் என்னும் பொருளில் ''மாடு'' என்னும் சொல் அமைந்துள்ளது. ''மாடு அல்ல மற்றையவை'' (400) எனக் கையாளப்பட்டுள்ளமை குறிப்பிற் கொள்ளத்தக்கது.

அடுத்து உறக்கத்திலும் சான்று போல் ''உறக்கம்'' என்னும் சொல் உளது. பிற பகுதியாரெல்லாம் கண்ணயர்தலைத் தூக்கம் எனுஞ் சொல்லால் குறிக்கின்றனர். முகவை மாவட்டத்தாரும், அதனைச் சார்ந்த சில பகுதியினரும் இன்றும் 'உறக்கம்' என்ற சொல்லையே வாய்ப்போக்கிலும் கூறுகின்றனர். திருவள்ளுவர் 'தூக்கம்' என்ற சொல்லைக் 'காலம் நீட்டித்தல்' என்னும் பொருளில் வழங்கியுள்ளார்.

''உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

(339) என 'உறக்கம்' எனுஞ் சொல்லைக் கண்ணயர்தலுக்காகப் பயன்படுத்தலைக் காணலாம். இச்சொல்லும் ஒரு தனித்தன்மை கொண்டு முகவை மாவட்டத்தை அடையாளங் காட்டுகிறது.

'என்ன நோவா?'; 'நோப்பாளப் படுகிறுயே' என்றெல்லாம் முகவை மாவட்டத்தார் இன்றும் உரையாடுகின்றனர்.

''நோ நொந்து அறனல்ல செய்யாமை நன்று'' (157) என 'நோ' நிற்பதைக் காண்கிறோம். பிற பகுதியார் 'கஷ்டம்', 'துன்பம்', 'சிக்கு' என உரையாடுவதையும் நினைக்கலாம்.

''அவம்'' என்னுஞ் சொல்லும் 'வீண்', 'கேடு' என்னும் பொருள்களில் முகவை மாவட்டத்தார் வாயில் இயல்பாக வழங்கப்படுவதை,

''அவமதனை அஃதிலார்
மேற்கொள்வது'' (262)

''அவஞ்செய்வார்'' (266)

எனத் திருவள்ளுவர் குறளோடு

இயைபுபடுத்திக் காணலாம்.

இவைபோன்று மேலும் பல சொற்கள் முகவை மாவட்ட வழக்கிலுள்ளவை திருக்குறளில் அமைந்துள்ளமை திருவள்ளுவருடன் அம்மாவட்டத்தை இணைக்கின்றன.

தொடர்கள். (காரணப்பெயர்கள்)

திருக்குறளில் வந்துள்ள இயற்பெயர் 'இந்திரன்' எனும் ஒன்றே. காரணப் பெயர்களாகப் பல தனிமொழியாகவும், தொடர் மொழியாகவும் அமைந்துள்ளவற்றில் சில காண்போம்:

''வகுத்தான்'' (377) என்பது தனிமொழியாயமைந்த காரணப் பெயர்.

முதலகிகாரத்தில் ''ஆதி பகவன்'' (1)

''வாலறிவன்'' (2)

''மலர்மிசை ஏகினான்'' (3) முதலியனவும், பிற இடங்களில்

''ஐந்தவித்தான்'' (25)

''உலகியற்றியான்'' (610)

''தாமரைக்கண்ணான்'' (1103)

முதலியனவும் தொடர் மொழிகளாக அமைந்த காரணப்பெயர்கள்

இவைபோன்ற காரணப்பெயர்கள் இடுகுறியாக இடுவது முகவை மாவட்டத்திலும், அதனைச் சார்ந்த பகுதிகளிலும் காணப்படும் ஒன்று. இன்றும் 'பிழை பொறுத்தான்', 'ஊருடையான்', 'நாடு காத்தான்' 'நாடாண்டான்' எனும் பெயர்களும் இவை போன்றனவும் மக்கட்குடிப்படுவதும் இணைத்துக் காணத்தக்கன.

தொழில்முறை

ஒரு நாட்டில் பகுதிக்குப் பகுதி அந்நாட்டு மொழி அடிப்படை பிறழாது வேறுபடுதல் இயல்பு. அதுபோல் தொழிலைச் செய்யும் முறையும் வேறுபடும். தமிழகத்தின் அடிப்படைத் தொழில் உழவுத் தொழில். உலகமே சுழன்றும் ஏர்ப்பின்னது தான்.

நீர்வளம் மிக்க சோழநாடு போன்ற பகுதிகளில் உழவுத்தொழில் முறைவேறு; பிற பகுதிகளின் முறை வேறு. இதனை ஆற்றுநீர்ப் பாய்ச்சலால் தொழிற்படுவது; மழையை எதிர்பார்த்துத் தொழிற்படுவது எனக் கொள்ளலாம்.

ஆற்றுநீரை வயலில் தேக்கிப்பின் உழுதல் முன்னது. பின்னது மழையால் பதப்பட்ட நிலத்தை உழுதல். இதனைப் 'புழுதி உழவு' என்பர்.

திருவள்ளுவப் பெருந்தகை,

''தொடிப்புழுதி கஃசா உணக்கின்
பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்''

என்கிறார். ஒரு பலம் புழுதி கால் பலமாக ஆகுமாறு உழுது உணக்கல் கதிரவன் ஒளியில் காயப்போடல் வேண்டும் என்பது அவர்தம் கருத்து. இது புழுதி உழவினைக் குறிப்பது. அதனினும் காயப்போடும் குறிப்பு உன்னத்தக்கது.

நீர் வளம் மிக்க சோழநாட்டு மாவட்டங்களிலும், பிற மாவட்டங்களில் சில பல பகுதிகளிலும் நீர் பாயும் நிலம் உண்டு. முகவை மாவட்டப் பெரும்பகுதி புழுதி உழவைக் கொண்டது என்பதை அறியுங்கால் திருவள்ளுவப் பெருந்தகையை முகவை மாவட்டத்தோடு இணைத்துக் காணத் தோன்றுகிறது.

'ஏரினும் நன்ருல் எருவிடுதல் கட்படின்
நீரினும் நன்றதன் காப்பு'

என்னும் குறளில் ஏர் உழுதல்— எருவிடல்— (விதைத்தல், முளைத்தல் மழைநீரால்)— களையெடுத்தல்— (இறைவை) நீர் பாய்ச்சல்- காவல் எனுஞ் செயல்முறை வரிசையை உற்று நோக்கின் மேற்கண்ட கருத்து வலுப்பெறுகிறது.

மேலும் அக்குறளிலேயே ''பிடித் தெருவும்'' என்று எருவைப் பிடி அளவில் குறித்திருத்தல் நோக்கத் தக்கது. சோழநாடு போன்ற பகுதிகளில் எருவைக் குவித்துக் கொட்டிப் பின்னர் வாரிப் பரவவிடுவதும், கூடையில் அள்ளிக் கொட்டுவதும் பழக்கமாகும். பிடி பிடியாகப் பரப்பும் முறையும் முகவை மாவட்டத்தையும் அதனைச் சார்ந்த பகுதிகளையும் நினைவுறுத்துகின்றன.

இவ்வுழவுத் தொழில் முறை வட ஆர்க்காடு, தென்னார்க்காடு பகுதிகளிலும் பெருமளவில் கையாளப்படு

வதுண்டு. எனினும், அப்பகுதிகள் தோற்ந்த வினை நிலங்களாக ஆன காலத்தை ஆயவேண்டியுள்ளது. அப் பகுதிகள் மக்கள் வாழும் நாட்டுப் பகுதிகளாக, சங்ககால அளவில் மாற்றப்பட்டமை கரிகாலன் காடு கெடுத்து நாடாக்கியமையும், அதற்கு முன்னர் இராமாயண, பாரத காலங்களில் காட்டுப் பகுதி களாகக் குறிக்கப்பட்டமையும், இன் றளவும் அவ்வப்பகுதிப் பெயர்கள் காடு எனுஞ்சொல்லோடே வழங்கப் படுகின்றமையுங்கொண்டு அப்பகுதி முறைகளை அடிப்பட்ட பழைமையின வாய்க் கொள்ளுதற்கில்லை.

எனவே, உழவுத் தொழில் முறையை அறிவிக்கும் பாங்கில் பெரும் அளவில் முகவை மாவட்டத் தைத் திருக்குறள் அடையாளங் காட்டி நிற்பதைக் காணமுடிகிறது.

இவண் குறிக்கப்பட்ட சொல் லாட்சி, பெயர்த் தொடர்கள், தொழில் முறைகள் கொண்டு கூர்ந்து நோக்கின் திருவள்ளுவப் பெருந்தகை வாழ்ந்த இடத்தை அடையாளங் காண முடிகிறது.

அவ்விடத்தைப் பெருஞ்சுற் றெல்லையாகக் கோடிட்டால் அது பாண்டி நாட்டகமாகவும், அதனையும் கூர்ந்து நோக்கிச் சுருக்கினால் முகவை மாவட்டமும் அதனை அடுத்துள்ள திருநெல்வேலி மாவட்டப் பகுதியும் மதுரை மாவட்டத்தின் சிறு பகுதியும் கொண்டதாகவும், அதனினும் பெரு மளவில் இயைந்து நிற்பது முகவை மாவட்டமாகவும் அமையும். இக் சுருத்திற்கு மேலும் சில மரபுகள் இயைந்து நிற்கின்றன. அவையும் ஆயப்படின் கருத்து உறுதிபெறும்.

இக்கட்டுரை திருவள்ளுவர் தம் வாழ்விடத்தை அறிய அவாவும் மூனைப்புக் கட்டுரையே. பல்கிப் பெருகிக் கிடக்கும் திருக்குறட் கருத் துக்களைத் தொடர்ந்து ஆயவேண் டும். அவ்வப்பகுதியில் வாழும் புலமையர் இவ்வாறு இயைந்து வரும வற்றைக் கூர்ந்து காணவேண்டும். மிகவிரிவாகவும், ஆழமாகவும் கண் டறியவேண்டிய ஆய்வாகும் இது. ஆயும்போதில் மாவட்டப் பகுதிப் பற்றிற்கு இரையாகிவிடக்கூடாது. கூர்த்த ஆய்வுகளால் வாழ்விடப் பகுதியின் சுற்றெல்லையைச் சுருக்கு வோமாயின் திருவள்ளுவர் வாழ்ந்த நேரான இடத்தையே அடையாளங் கண்டுவிடக்கூடும்.

இவ்வாய்வின் பயன் திருவள்ளுவப் பெருந்தகையைக் காணும் பேற்றைப் பெற இயலாது எனினும், அவர் தம் வாழ்விடத்தையாவது காண்கிறோம் என்று அமைதி பெறுவது மட்டு மன்று; பல சொற்களுக்கும் தொடர் களுக்கும் உவமைகளுக்கும், மரபு களுக்கும் தெளிந்த பொருளைப் பெற வும், அவற்றை வாழ்வியலில் நடை முறைப்படுத்தி வாழ்வைச் செம்மை செய்துகொள்ளவும், உலகோர்க்கு எடுத்துரைத்து உலகோரையும் வாழ் வித்து இன்புறவும் பயன்படும்.

இவ்வாறு திருவள்ளுவப் பெருந் தகையை ஒரு சிற்றெல்லைக்குள் அகப் படுத்துவதில் முயன்று வென்றாலும், அப்பெருந்தகை உலகத்தார் உள்ள மெனும் எல்லை கட்டமுடியாத பரந்த பேரெல்லையில் திகழ்பவரேயாவார்.

திருவள்ளுவப் பெருந்தகை தோன்றிய இடத்தைப்பற்றி ஆராயும் கட்டுரை இது. இவ்வாராய்ச்சியினை இலக்கிய அறிஞர்கள் தொடர்ந்து இஃதை ஒரு சிறந்த ஆராய்ச்சிக் கோவையாக ஆக்கிட வேண்டுகிறேன்.


— ஆசிரியர்

தொண்டுள்ளம் வளர வேண்டும்

[சத்திய விசய நகரம் கிராமியப் பயிற்சி நிலையத்தில் 1-12-1969 அன்று தமிழ்நாடு உணவு அமைச்சர் மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் அவர்கள் சீரணித் தொண்டர் பயிற்சி முகாமைத் துவக்கி வைத்த போது ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவு.]

விழாத் தலைவரும், வட ஆர்க்காடு மாவட்டச் சீரணித் தொண்டரும் ஆன அருமை நண்பர் தர்மலிங்கம் அவர்களே! பயிற்சி பெற வந்திருக்கின்ற நண்பர்களே! என் அன்பு கலந்த வணக்கம். இந்த விழாவைத் துவக்கிவைக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்; நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர்களெல்லாம் சீரணியைப்பற்றியும், சீரணியைத் துவக்கி வைத்த பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றியும், சீரணி எப்படி எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதைப்பற்றியும், நாளை முதல் துவங்கப்போகும் வகுப்புக்களில் நீங்கள் பெறப்போகும் பயிற்சிபற்றியும் பேசினார்கள். மிகவும் தேவையான காரியங்களைக் கிராம மக்களுக்குச் சொல்லுவதற்காகவும் கிராமத்திற்குப் பயன்படத்தக்க காரியங்களை நீங்கள் கற்றுக்கொண்டு போவதற்காகவும், இந்த முகாம் பயன்பட வேண்டுமே தவிர, ஏதோ வந்தோம், உண்டோம், கலந்தோம், சிரித்தோம், வீணையாடினோம், கலந்தோம் என்று இருக்கக் கூடாது. இங்குக் கலந்தோம் என்பதைத் தவிர மற்ற அனைத்தும் இருக்கலாம். கடைசியிலே கற்றோம்; செல்கின்றோம்; 'கற்றதற்கு ஏற்ப நடப்போம்' என்ற உறுதியோடு செல்ல வேண்டும். கிராமங்களை வளர்ச்சியடையச் செய்யவேண்டும். அந்த அடிப்படையில் தவறியிருக்கிறார்கள், கடந்த 22 ஆண்டுக் காலமாக. ஏன் தவறினர்கள், எப்படித் தவறினர்கள்? என்ற ஆராய்ச்சிக்கு நான் போக விரும்பவில்லை. ஆனால் நான் மட்டுந்தான் இதைச் சொல்லுகிறேன் என்று எவரும் என்னைத் தவருகக் கருத வேண்டாம். கிராமங்கள் வளரவில்லை, கிராமத்திலே இருக்கிற ஏழை, ஏழையாகவே இருக்கிறான் என்று நான் சொன்னால்கூட ஏதோ அரசியல் நோக்கத்தோடு சொல்கிறேன் என்று தவருகப் பல பேர் கருதிக்கொள்ளக்கூடும்.

இங்குள்ள அவ்வளவு பேருக்கும் நினைவுபடுத்துவதற்காக நான் ஒன்று



சொல்ல விரும்புகிறேன். அண்மைக் காலத்தில் இந்தியாவிற்கு ஒரு பெரிய மனிதர் வந்திருக்கிறார். பாகிஸ்தானில், பத்தேனிஸ்தான் வேண்டும் என்ற காரணத்திற்காக அயூப்கானுல் பல ஆண்டுக்காலம் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த ஒரு பெரியவர் - மகாத்மா காந்தியோடு தோளோடு தோள் நின்று போராடியவர். 'சுதந்திர சுயராஜ்ஜிய வாழ்வைக் காண்பதற்கு நான் வந்திருக்கிறேன். ஆனால் நான் பார்ப்பதெல்லாம் ஏழை ஏழையா

கவே இருக்கிறுன். கிராமங்கள் வளர்ச்சியடைய வில்லே. ஏழை மக்களேப்பற்றி இந்த நாட்டு மக்கள் யாரும் கவலேப்பட்டிருப்பதாகத் தெரியவில்லே' என்று வருத்தப் பட்டுத் தெரிவித்திருக்கிறர். அரசியல் ஆசாபாசங்களுக்கு அப்பாற் பட்ட ஒருவர், இந்திய நாட்டின் விடுதலேக்காகப் போராடிய ஒருவர், அவரே கூறியிருக்கிறர் என்று சொன் னுல் அது எவ்வளவு உண்மை என்று உங்களுக்குப் புலனுகும். கிராமத் திலே இருக்கும் நண்பர்கள் கிராமங் கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்பதிலே அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். பெரும்பாலும் நம் கிராமத்திலே இருக்கிற வாலிபர் கள் தங்களுடைய பொழுது போக்குக்காக ஏதேதோ வீனேயாட்டுக் காரியங்களில் ஈடுபடுகிறர்கள். கிராமங்களுக்கு மிகவும் இன்றியமை யாத தேவைகளே நிரப்புவதற்கு அந்தப் பொழுதுபோக்கு நேரங் களேப் பயன்படுத்த வேண்டும் என்கிற அடிப்படைக் கொள்கை களுக்குத்தான் இது போன்ற சிரணி முகாம்கள் செயற்படுத்தப்படுகிறதே தவிர வேறென்றுமில்லே என்ற தத்துவத்தை நீங்கள் மனத்திலே கொள்ள வேண்டும் என்று பணிவன் புடன் நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சிரணி அரசியல் கூட்டங்களுக்கு அப்பாற்பட்டது; கிராமங்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்ப தற்காகக் கிராமங்களிலே இருப்பவர் களே அழைத்து, இந்த நாட்டினு டைய விவசாய வளர்ச்சி எப்படி வளரவேண்டும் என்பதை விரிவாகப் பாடமாகப் போதித்து, அதை அவர் கள் கற்றுக்கொண்டு மற்றவர்களுக் குப் போய்ச் சொல்வதற்கும், அந்தத் தொண்டர் படை ஒன்றுபட்டு இருப் பதற்கும் இந்த முகாம் பயன்படுமே தவிர, எந்த அரசியல் நோக்கத் திற்காகவும் அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இங்குக் கற்றுக்கொடுக்கப்போகின்ற காரியம்தான் என்ன? சமுதாயத் தொண்டை மக்களுடைய மனத்தில் தூண்ட வேண்டும்; ஏற்றி வைக்க வேண்டும்; ஆழமாகப் பதிய வைக்க வேண்டும்; அதன் மூலம் அவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்பதுதான்.

நீங்கள் கிராமப் புறங்களுக்குப் போய்ப்பார்த்தால் தெரியும். நாட்டு விடுதலேக்குப் பிறகு கிராமங்களில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றந்தான் என்ன? எங்காவது உயரத்தில் ஓடிக் கொண்டிருக்கின்ற மின்சாரக் கம்பி யையும், புதிதாகக் கட்டப்பட்டிருக் கின்ற பாடசாலேகளேயும்தவிரக் கிரா மத்தில் வேறுஎந்தமாற்றமும் இல்லே; எந்த வளர்ச்சியும் இல்லே; கிராமம் அப்படியே இருக்கின்றது; பாழ டைந்த கிராமமாக இருக்கின்றது. கிராமத்திலே இருக்கிற மக்கள் மிக வும் பஞ்சத்தில் அடிபட்டவர்க ளாக, வறுமைக்குள்ளானவர்களாக இருக்கிறர்கள். இந்நிலேயை மாற்றிக் கிராமங்களில் இன்பமும் வளமை யும் தவழச் செய்ய மேற்கொள்ளும் தொண்டுகளில் சிரணியினரின் பங்கு சிறப்பானதாகும்.

நீங்கள் எல்லாம் விவசாயத்துறை யில் விரிவாகப் பயிற்சி பெறப் போகிறீர்கள். விவசாயத்தைப் பொறுத்த மட்டில் நான் உங்களுக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணு அவர்கள்கூடச் சட்ட மன்றத்திலே உறுப்பினராக இருந்த போது 1958ஆம் ஆண்டு என்று நினேக்கிறேன், பேசினர்கள்:

''இந்த நாடு விவசாய நாடு; ஆனுல், அமெரிக்கா தொழில் நாடு. இந்த நாட்டில் அதிகமான பேர் விவ சாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அமெ ரிக்காவில் விவசாயத்தில் மிகவும் குறைவான மக்கள் ஈடுபட்டுள்ளார் கள். குறைவான மக்கள் ஈடுபட்டுள்ள அமெரிக்காவில் விவசாயத்தில் உற் பத்தி அதிகமாக இருக்கிறது. அதிக மான மக்கள் ஈடுபட்டிருக்கின்ற விவ சாய நாட்டில்போதுமான அளவு கூட உணவை உற்பத்திசெய்ய முடிய வில்லே.'' இதை அண்ணு அவர்கள் சட்ட மன்றத்தில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி ஒரு வேடிக்கை யான உதாரணம் கூடச்சொன்னர் கள். அமெரிக்க நாட்டிலே இருந்து இந்தியாவிற்கு உணவுப் பொருள் இறக்குமதி செய்வது எப்படி இருக் கிறது என்று கேட்டால், மாதவி வீட்டிலே இருந்து கண்ணகிக்குச்

சாப்பாடு எடுத்து வந்து சாப்பிடு வதுபோல இருக்கிறது'' என்று வேடிக்கையாகச் சொன்னார். அமெரிக்கா நம்மிடத்திலே இருந்து உணவு கேட்கவேண்டும். காரணம் நாம் உணவு உற்பத்தி செய்கிற நாடு. அவனிடத்தில் நாம் தொழில் சாமானே வாங்கவேண்டும். காரணம் அவன் நாடு தொழில் உற்பத்தி பெருகி இருக்கின்ற நாடு. தலைகீழாக உணவுக்கு அமெரிக்காவை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சின்னஞ் சிறிய நாடு ஜப்பானில் செய்யப்படுகின்ற நடவுமுறைக்கு நம் நாட்டிலே ஜப்பான் நடவு என்று கொண்டுவந்து வைத்திருக்கின்றோம். விவசாய வளர்ச்சியை நம் நெஞ் சிலே புகுத்துவதற்கு எவ்வளவு சிரம மாக இருக்கிறது என்பதைக் கிராமத் திற்குப் போய்ப் பார்த்தால்தான் தெரியும். புதியதாக வந்திருக்கிற ஐ. ஆர். 8 நெல், ஐ. ஆர். 5 நெல், ஏ.டி.டி. 27 போன்ற உயர் ரகங்கள், பத்மா, ஜெயா என்று புதிதாக வந்துள்ள உயர்ரக நெல்களை எல் லாம் மக்கள்மனத்திலேபதியவைத்து இவற்றை பயன்படுத்துங்கள் என்று சொல்வதற்கு, தூண்டுவதற்கு நாம் எவ்வளவு சிரமப்பட வேண்டி யிருக்கிறது என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் கிராமத் திலே போய்ச்செய்யவேண்டிய வேலை கள் ஏராளமாக இருக்கின்றன! ஒன் றல்ல, இரண்டல்ல. பள்ளிகள் கட்டு கிறீர்கள்; பாராட்டுக்குரிய பணி. மேலும் சீரணித் தொண்டர்கள் கிரா மத்தைச் சுத்தமாக வைத்திருப்ப திலே அக்கறை காட்டலாம்; சீரணித் தொண்டர்கள் விவசாயிகளுக்குப் புதிய விவசாய முறைகளைக் கற்றுக் கொடுப்பதிலே அக்கறை எடுத்துக் கொள்ளலாம்; சீரணித் தொண்டர் கள் கிராமங்களிலே கிராம மக்களை வஞ்சிக்க வருகின்ற சமுதாயத் துரோகிகளுக்கு இடம் கொடுக்கா மல் கிராமத்தைப் பாதுகாக்கலாம். கொடிய மிருகம் இரவுக் காலத் திலே வரும்; தூங்குகின்ற நேரத்திலே வரும். ஆனால், சில சமுதாயத் துரோகிகள் பகல் வேளையில், விழித்து கொண்டிருக்கிற நேரத்தில், ஏமாந்து இருக்கின்ற கிராம மக்களை வஞ்சிப் பதற்காக வருகின்றார்கள். இத் தகைய சமூக விரோதச் சக்திகளை எதிர்த்து நீங்கள் சீர்திருத்தம் செய்ய லாம், விவசாயத்தை வளர்ப்பதற் குக் கற்றுக்கொடுப்பதோடு கிராம மக்களுக்கு என்னென்ன தேவை என் பதைத் தொண்டர்கள் யார் யார் இடத்தில் சொல்லவேண்டும் என் பதை எடுத்துச் சொல்லிச் செய்து காட்டலாம். அது கிராமத் தொண் டர்களுடைய வேலையாக இருக்குமே தவிர மற்றையவர் வேலையாக இருக்கமுடியாது. நாம் ஏன் அந்த வேலையைச் செய்யவேண்டும்; எனக்கு என்ன என்று ஒதுங்கி இருந்தால் நாட்டிலே எந்தக் காரியமும் நடக் காது.

நீங்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். உலகத்தில் நாம் இங்கு அனுபவிக்கிற ஒவ்வொரு பிற பொருளும், விஞ்ஞான சாதனைகளின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கின்ற ஒவ்வொரு பொருளும் மேல்நாட்டுக் காரன் கடுமையாக உழைத்துச் சமு தாயத்திற்குக் கொடுத்து இருக் கிறான். கடுமையாக 'உழைத்து' என்று நான் சொல்லுகிறேன். அதை நீங்கள் நன்றாக மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். சாதா ரண உதாரணம் ஒன்று சொல்லு கின்றேன். பெரியம்மை நோய் மேல் நாட்டிலே பரவிக்கொண்டிருந்த நேரம்; அந்த நோய்க்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பது எப்படி? இந்தப் பயங்கர வியாதிக்குத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு டாக்டர் முயற்சி எடுத்துக்கொண் டார். ஒருமுறை பெரியம்மை வந் தால் மறுமுறை வருவதில்லை. இதற் குக் காரணம் என்ன? டாக்டர் யோசித்தார்; யோசித்து மாட்டுக்கு 'இஞ்செக்சன்' கொடுத்து அதி லிருந்து மருந்தைத் தயாரித்தார்.

முதன்முதலில் இதைச் சோதித் துப் பார்க்கவேண்டும். யார் உடம் பில் குத்திச் சோதித்துப் பார்ப்பது? அந்த டாக்டர் மருந்து கண்டுபிடித்த பிறகு பெரிய முயற்சி எடுத்துக் கொண்டு பலரை அழைத்துப் பார்த் தார்; பணம் கொடுப்பதாகக் கூறி யும் பலரை அழைத்துப் பார்த்தார். ஒருவர்கூட முன்வரவில்லை. கடைசி யில், அந்த டாக்டர், ''நான் கண்டு பிடித்த இந்த மருந்து சமுதாயத் திற்குச் சொந்தமாக'' இருக்கவேண்

டும் என்று கருதி, தன்னுடைய ஒரே பிள்ளையைத்தூக்கி,மடியிலேபோட்டு அந்தப் பிள்ளையினுடைய கையிலே அதைக் குத்திப் பார்த்து வெற்றிகர மாக முடித்தார்- வெற்றி பெற்றார். வெற்றி பெற்றபிறகு அமெரிக்க நாட்டை சார்ந்தவர்களில் ஒரு வியா பாரி அவரிடத்தில் வந்து '10 ஆயிரம் பவுன் (அந்தக் காலத்தில்) நான் கொடுக்கிறேன். அந்த இரகசி யத்தைமட்டும் கொடுத்துவிடு. அந்த மருந்தை நான் தயாரித்து விற்றுக் கொள்கிறேன்' என்று கேட்டான். அப்பொழுது அவர் சொன்னார்; '' நான் இதைக் கண்டுபிடித்தது வியாபாரப் பொருள் ஆக்குவதற் காக அல்ல. இதிலே சம்பாதிக்க வேண்டுமென்பதற்காக அல்ல இதை நான் கண்டுபிடித்தது. இந்தச் சமுதா யத்திற்கு, ஏழை எளிய மக்களுக்கு, இலவசமாக,இனாமாக இது கிடைக்க வேண்டும் என்பதற்காக இதை நான் கண்டுபிடித்திருக்கிறேனே தவிர, உன்னுடைய வியாபாரத்திற் காக நான் கண்டுபிடிக்கவில்லை'' என்று சொல்லி, மறுநாள் பத்திரிகை யில் தன்னுடைய மருந்தினுடைய இரகசியம் முழுவதையும் உலகத் திற்கு வெளியிட்டுவிட்டார். அவர் அந்த இரகசியத்தை வியாபாரிக்குக் கொடுத்து இருந்தால் பத்தாயிரம் பவுன் அவருக்குக் கிடைத்திருக்கும். வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டார் என்று சொன்னால்,தன்னுடைய ஒரே பிள்ளையை எடுத்துக் குத்திச் சோதித் தார் என்று சொன்னால் அவர் செய்த தியாகம் எப்பேர்ப்பட்ட தியாகம்! அந்த உணர்ச்சியும் மனப்பான்மை யும் நம் நாட்டிற்கு வரவில்லையே! என்ன காரணம்?

எந்த ஒரு விஞ்ஞானச் சாதனையை எடுத்துக் கொண்டாலும் சரி அதைக் கண்டுபிடிப்பதற்காகப் பட்டபாடு- படிக்கும்போழுது கண்ணீர் வரு கிறது. அவ்வளவு சிரமப்பட்டு இருக் கிறார்கள். அ வ் வ ள வு தூரம் போவானேன்? இன்றையத் தினம் உயிரைத் துச்சமென மதித்துச் சந்திர மண்டலத்திற்கு அமெரிக் காவைச் சார்ந்தவன் போய்த் திரும்பி வருகிறான் என்று சொன்னால் அதனுடைய பொருள் என்ன? உயி ரையே துச்சமென மதித்து முதலிலே இரண்டு பேர் போனார்கள்! அவர்கள் திரும்பி வந்தார்கள். மீண்டும் மூன்று பேர் உயிரைத் திரணமாக மதித்து, காற்று மண்டலத்தைத் தாண்டி,பூமி யின் இழுப்புச் சக்திக்கு அப்பால் போய், அதற்குப்பிறகு சந்திரமண்ட லத்தின் இ ழு ப் பு ச் சக்திக்குப் போய், சந்திர மண்டலத்திலே இறங்கி, அங்கே இருந்து இங்கே இருக்கும் மனிதனோடு பேசுகிறான். இங்கே-அமெரிக்காவிலே இருக்கிற வர்கள் அங்கே அவன் என்ன செய் கிறான் என்று படம் பார்க்கின்றார்கள் -டெலிவிஷன் படத்தைப் பார்க்கிறார் கள்.

அந்த அளவு முன்னேற்றம் காண வேண்டுமானால் நம் நாடு, நம் கிரா மம், நம் சுற்றம் என்ற அந்த எண்ண மும், உணர்ச்சியும் நம் மக்களுக்கு வரவேண்டும். அது வந்தாலன்றி இந்த நாடு உருப்படாது. எந்த அரசி யல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, கிராம மக்களுக்கு இந்த நாடு ''நம் நாடு'' என்ற அந்த எண்ணம் வந்தாலன்றி, இந்த நாடு நமக்குச் சொந்தம் என்ற அந்த எண்ணம் வ ந் தா ல ன் றி, இந்த நாடு நம் முடைய சொத்து என்ற அந்த உணர்வு வந்தாலன்றி, இந்த நாட்டி னுடைய வருமானம் நம்முடைய வருமானம் என்ற அந்த 'நீண்ப்பு' வந்தாலன்றி, இந்த நாட்டிலே செல வழிக்கப்படுகின்ற ஒவ்வொரு காசும் 'நம்முடைய வரிப்பணம்' என்ற அந்த நினைவு வந்தாலன்றி நிச்சயம் இந்த நாடு உருப்படாது.

நான் உங்களைக் கேட்டுக்கொள் வது இங்கே பயிற்சி பெறுகின்றதை ஏதோ காதிலே வாங்கி, பொழுது போக்குவதற்காக என்று இராமல் இதைக் கிராமத்து மக்களுக்குச் சொல்லவேண்டும் என்ற நீண்ப் போடு போகவேண்டுமே தவிர, வேறு வழியில்லை. இந்த உலகத்தைச் சுற்றிப் பார்போமேயானால், எத் தனையோ தலைவர்கள் உயிரைக் கொடுத்து இந்த உலகத்தை திருத்தி அமைத்திருக்கிறார்கள். அ ப் படி த் திருத்தி அமைத்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன் னும் திருத்தப்பட வேண்டும். அந்தத் தலைவர்கள் பட்டியலிலே நாம் இடம் பெறுவிட்டாலும்,காந்தியார்போல்,

பேரறிஞர் அண்ணவைப்போல் நாம் அந்த அளவுக்குத் 'தியாகம் செய்து' நாட்டு மக்களுடைய மனத்திலே இடம் பெருவிட்டாலும், நம்மாலான சிறிய உதவியையாவது இந்தச் சமுதாயத்திற்குச் செய்யவேண்டாமா? மரமாக இருந்திருந்தால் நிழலாக இருந்திருப்போம்; தண்ணீர் ஆக மழையாகப் பெய்திருந்தால் வயலுக்குப் பயன்பட்டு இருப்போம். ஆனால் மனிதனுகப் பிறந்து எந்த விதப் பயனுமின்றி, தங்களுடைய வீடுஉண்டு, குடும்பம்உண்டு, சொத்து உண்டு, வியாபாரம்உண்டு, என்று இப்படி இருப்பது நாட்டிற்கும் நல்ல தல்ல, வீட்டிற்கும் நல்லதல்ல. நான் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் கிராம மக்களிடத்துச் சென்று 'தொண்டு உள்ளத்தைப் பதிய' வையுங்கள் என்பதுதான்.

நான் விளையாட்டுக்குச் சொல்ல வில்லை; ஏதோ உபதேசத்திற்காகச் சொல்லுகிறேன் என்ற கருதவேண்டாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்:

ஓர் ஏழை விவசாயிக்கு மின்சார பம்புசெட் இணைப்பு வேண்டும் என்று சொல்லி அந்த மின்சார பம்புசெட் இணைப்புக்காக மின்சார இலாகாவிற்குப் போக வழிதெரியாமல் தடுமாறுவதாக வைத்துக்கொள்ளுங்கள். அவனை நீங்கள் அழைத்துப் போய், மின்சார இலாகாவிலே கொண்டு சென்று, அதற்குண்டான மனுவை வாங்கிப் பூர்த்தி செய்து, அதை ஏழையின் கையிலே கொடுத்து, அதற்குண்டான காரியங்களை கவனித்து இணைப்பு வாங்கிக் கொடுப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். மின்சாரத்தை இணைத்து அந்த மின்சாரப் பம்புசெட் ஓடித் தண்ணீர் வந்து விழுகின்ற காட்சியைப் பார்க்கும்பொழுது உங்கள் மனம் எப்படி இருக்கிறது என்று அப்பொழுது பாருங்கள். தொண்டுள்ளத்தினுடைய 'அருமை' அப்பொழுது தெரியும்.

நம்மால் இந்த மின்சாரம் கிடைத்திருக்கிறது ஏழைக்கு, என்று மனம் நிறைவு பெறும்.

அரசியல் ஆசாபாசங்களைவிட்டுச் சமுதாயத்தைச் சீர்திருத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு, ஏழை எளிய மக்களுக்கு 'வாழ்வு' அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு, அடித்தளத்தில் சிக்கி இருக்கிற ஏழை எளிய மக்களைக் 'கைகொடுத்துத் தூக்குவதற்கு முயற்சி' செய்ய வேண்டும் என்கிற அந்த ஆர்வத்தோடு இங்குக் கல்வி பயிலுங்கள். நாட்டில் விவசாயத்தைப் பெருக்கக் கல்வி பயிலுங்கள். எந்த நேரத்தில் உரமிடவேண்டும்- எந்தெந்த நெல்லுக்கு எந்தெந்த உரம் போடவேண்டும்- எந்த அளவு போடவேண்டும்? இது போன்ற அந்த முறைகளை இங்கே முகாமிலே பயிலுகின்றவர்களும், கிராமஊழியர்களும் மற்றைய கிராம வாசிகளுக்கு - ஏழைகளுக்கு நிஜமே படித்தவேண்டும் - எடுத்துச் சொல்லவேண்டும்.

அந்த அக்கறைமட்டும் தோன்றி விடுமேயானால் இந்த நாட்டிற்கு உயர்ச்சி தோன்றிவிட்டது என்று பொருள் கொள்ளலாம். அதற்காகத்தான் அண்ணு அவர்கள் இந்தச் சிரணியை அமைத்தார்களே தவிர- தன்னுடைய அரசியல் கட்சியை வளர்த்துகொள்வதற்காகவும் இல்லை அல்லது வேறு ஒரு காரணத்திற்காக வும் அல்ல. இந்த நாட்டை எப்படி முன்னேற்றுவது? தொண்டுள்ளத்தை மக்களின் மனத்திலே எப்படி விளக்கேற்றி வைப்பது? தொண்டுள்ளத்தை மக்களின் மனதிலே எப்படித் தூண்டி வைப்பது? அந்த முயற்சிதான் இந்தச் சிரணிப் படையே தவிர வேறெதுவும் அல்ல.

அந்தத் தொண்டுள்ளத்தை உங்கள் மனத்திலே இன்று ஏற்றி வைக்கின்றோம்.

மேலும் நீங்கள் விளக்கம் பெறுவதற்கு அடுத்த நாட்களிலே நடக்கப்போகின்ற பயிற்சி முகாம் உதவியாக இருக்கும். நீங்கள் பெறுகின்ற பயிற்சி வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்ல பயிற்சியாக இருக்கட்டும். அப்பொழுதுதான் நாடு முன்னேறும்! அப்பொழுதுதான் நமக்குப் பல னிருக்கும், பயனிருக்கும் என்ற உணர்ச்சியை, உணர்வை, உங்களுக்கு தூண்டிவைக்கின்ற இந்த நல்ல விழாவில் கலந்து கொள்ளுகின்ற வாய்ப்பளித்த நண்பர்களுக்கு நன்றியும், வணக்கமும் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாண்டு ஒரே ஒரு போகம்...









அடுத்த ஆண்டு மூன்று போகங்கள்?

உணவு தானிய உற்பத்தியைப்
பெருக்கி வளமை
காணுங்கள். அதற்காக,
குறைந்த வட்டிக் கடன்களை
வழங்குகிறது
பாங்க் ஆஃப் பரோடா.

நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ—

பாங்க் ஆஃப் பரோடா

தலைமைக் காரியாலயம் : மான்ட்வி, பரோடா.
இந்தியாவிலும் வெளிநாடுகளிலும்
400க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன

Shilpi B.O.B. 23A/69 Tam

ஊர்நலத் தொண்டரின் உயரிய சேவை!


''சிறந்த பயிற்சிபெற்று வெளிவருகின்ற ஊர்ப்பணியாளர், சோர்வு தட்டாமல், சிக்கலிலே சிக்கிக்கொள்ளாமல், மனம் முறிந்துவிடாமல் பணியாற்றி, ஊர் மக்களிடையே புதியதொரு சக்தியைத் தோற்றுவிக்கச் செய்தல்வேண்டும்.''

'ஊர்ப்பணியாளர் முழுநேர ஊழியர்களாகவிருந்து, தங்கள் திறமை, ஆர்வம், ஊக்கம், உணர்வு, உறுதி ஆகியவற்றை ஊர் மக்களுக்குக் காணிக்கையாக்கி அவர்கள்பால் மறைந்து, புதைந்து கிடக்கும் சக்திகளை வெளிக்கொணர்ந்து, புதிய, புகழ்மிக்க சமுதாயத்தை உண்டாக்க வேண்டும். இதுவே ஊர்ப்பணியாளரின் வாழ்விலக்கணமாகும்.'


இதை முழுவதுமாகவே ஏற்று, சிறிதும் பிறழாது சாதனைகளை உருவாக்கிக் குவித்திருப்பவர், சத்திய விசய நகர (வடஆர்க்காடு) ஊர்ப் பணியாளர் திரு. ம. சுந்தரம் அவர்கள்.

மிதிவண்டியில் ஐ. ஆர்-8

இங்கு, திரு. சுந்தரம் அவர்களை மிதிவண்டியுடன் காண்கிறோம்-ஏதோ ஒரு பொருளின் விற்பனையாளர் என்ற தோற்றத்தில். ஆனால் சற்றே உற்று நோக்கும்போது நாம் வியப்படைகிறோம். அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருள்களை விற்கும் நிலையிலுள்ள விற்பனையாளர்கூட, விளம்பரப் பலகையைப் பொருத்திக் கொண்டு தெருத் தெருவாகச் சென்று வணிகஞ்செய்யக்கூச்சமுற்று நிற்கும் நிலையில், திரு. சுந்தரம் தம்



முடைய மிதிவண்டியிலேயே ''ஓர் ஏக்கரில் 50 முதல் 60 மூட்டைகள் கிடைக்க, அதிசய நெல் ஐ. ஆர்-8 பயிரிட அணுகுக. எம். சுந்தரம் டி. ஏ. இ. கிராம சேவகர், ச. வி. நகரம் ஆரணி'' என்ற விளம்பரத் தகட்டை சொந்தச் செலவில் செய்து பொருத்திக்கொண்டு சத்திய விசய நகர் முழுவதிலும் சுற்றிச் சுழன்று பணியாற்றுகிறார் என்றால், உழவர்கள் நலத்தில் அவருக்குள்ள ஆர்வத்தை என்னவென்று சொல்வது!



இது என்ன, கிருஸ்துமஸ்பண்டிகை விளக்கு போலுள்ளதே என எண்ண வேண்டாம். அதுவும் ஐ. ஆர்-8 பற்றிய மின் விளக்குக் கூடுதான்.

ஐ. ஆர்-8 பற்றிய நினைவே உழவர்களின் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்பதற் கெனத் தமக்கேற்படும் மின்செல வைக்கூடப் பொருட்படுத்தாது, இக் கூட்டை இரவிலும் ஒளிமயமாக்கு கிறார். சேவையின்பால் எழுந்துள்ள சீரிய உள்ளம் அவருடையது போலும்!

ஏட்டுச் சுரைக்காய் அல்ல

தம்முடைய இல்லத்தின் பின் புறத்தே ஒரு காய்கறித் தோட்டம் அமைத்து, ச.வி. நகர மக்களைச் சாரி சாரியாக அங்கு அழைத்து, காய் கறிகளைப் பயிரிடும் முறைபற்றி, நேரிடையாகவே விளக்குகிறார். நூல் கோலின் தழை பயனற்றதென எண்ணி வீதியின் கண் விசியெறிந்த நிலை, இங்கே பழங்கதையாகி, அவை ரையாகச் சமைக்கப்பட்டுத் தவருது உண்ணப்படுகின்றது.

சொற்பொழிவுகள், ஆலோசனைக் குறிப்புக்கள் வாயிலாக வேளாண்மையில் புதியனவற்றைக் கையாளாத மக்களைத் தம்மிடமுள்ள 'ஆர்மோனியம்,' 'புல்புல்தாரா' போன்ற இசைக் கருவிகளை நயம்பிற மாறு இசைத்து, செவிகளுக்கு உணவளித்து அவர்களை நண்பர்களாக்கிக் கொண்டு, பின்னர் வினயத்துடன் செய்தியைப் புகட்டி வழிப் படுத்துகிறார்.

அடக்கமும் அமைதியும் ஒருங்கே இணைந்த திரு. ம. சுந்தரம் தம் முடைய சிறந்த சாதனையெனக் கூறிக் கொள்வதென்ன?

''காஞ்சி ஊராட்சியிலிருந்து கர கண்டீசுவரர் கோயில் வரையிலான 2 பர்லாங்கு தூரத்திற்கு 300 மாங் கன்றுகள், 300 தென்னங்கன்றுகளை நட்டுக் காத்தேன்; அவை தற்போது நன்முக வளர்ந்துள்ளன'' என்று கூறு கிறார்.

சிறந்த மன்றம், சிறந்த செயல்

இவருடைய சில இதர சாதனைகள் பளிச்சிட்ட வண்ணமுள்ளன. 1966-67ஆம் ஆண்டில் வடஆர்க்காடு மாவட்டத்திலேயே சிறந்த வாலொலி மன்றமாக, ச.வி. நகர கிராம வாலொலி மன்றத்திற்கே பரிசளிக்கப் பட்டுள்ளதெனின், இவருடைய தொடர்ந்த சேவை அங்கு இருக்க வில்லை எனச் சொல்லக்கூடுமோ?

ச.வி. நகரத்தில் ஐ. ஆர்-8, ஆடு துறை-27 பயிர்களைக் கட்டுக்கோப் பாக, பயிர்முறைகள் அனைத்தையும் கையாண்டு உழவர்கள் ஆர்வமுடன் பயிரிடுதற்குப் பின்னணியாக இவர் விளங்கினர் என்றும், ஏனைய ஊர்ப் பணியாளர்கள் இவரைத் தழுவிச் செயலாற்ற வேண்டுமென்றும் இவரைப் பாராட்டி இராணிப்பேட்டை மாவட்ட வேளாண்மை அலுவலர், ஆரணி ஒன்றிய ஆணையருக்குக் கூறியுள்ளார்.

நகைமுகமும், இனிய சொற்களும் கொண்டு இரவு பகலென நோக்காது உழைக்கும் திரு. ம. சுந்தரம் ஒரு முதல்நிலை ஊர்ப்பணியாளர். 1963 ஆம் ஆண்டில் இல்வாழ்க்கைப் பொறுப்பேற்ற இவருக்கு இரண்டு செல்விகள் உள்ளனர்.

அறிவுக்கு ஒரு விருந்து: 47ஆம் பக்கத்தில் உள்ளது.

சொன்னவர்கள்: 1. நாவலர் இரா. நெடுஞ்செழியன் 2. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் 3. தமிழ்க் கடல் மறைமலையடிகள் 4. தமிழ்த் தென்றல் திரு.வி.க.



[நமது செய்தியாளர்]

எளிய தோற்றம்; இனிமையான பார்வை; பண்பு நிறைந்த பணிவான உரையாடல்—இவற்றின் கூட்டலே திரு. பா. ரா. குருதாசன் அவர்கள்.

பயிர் முறைகள் அனைத்தையும் கசடறக் கற்றுத் தெளிந்து, அவையனைத்தையும் செயலில் மேற்கொண்டு, செவ்வையாக வேளாண்மை செய்யும் திரு. குருதாசன், சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியிற் பயின்று, பி.எஸ்ஸி. பட்டம் பெற்றவர்.

பெற்ற பரிசுகள்

23 வயதே நிரம்பிய இவர், பயிர் செழிக்க, உடல் வருந்த உழைத்து, இன்றைய நிலையில் வட்டார அளவில் ஒரு முதற் பரிசு, ஒர் இரண்டாம் பரிசு, ஊர் நிலையில் ஒரு முதற் பரிசு ஆகியவைகளைப்பெற்றுத் திகழ்கிறார். மூன்று பரிசுகளைப் பெற்றதனால், வேளாண்மையில் மேலும் ஆர்வம் பெருகிடவே, தற்போது நடை பெற விருக்கும் மாவட்ட நெல் விளைச்சல் போட்டியிலும் இவர் பங்குபெற விருக்கிறார். இவ்வெல்லாப் போட்டிகளிலும், இவருடைய உழைப்பிற்கு உறுதுணையாக நின்று, பரிசுகளைத் தேடித் தந்துள்ளது, ஐ. ஆர்-8 என்ற நெல்வகைதாம். 1967-68, 1968-69 ஆகிய இரண்டாண்டுகளில் மேற்கூறப்பட்டுள்ள மூன்று பரிசுகளை இவர் பெற்றார்.

செங்கை மாவட்டத்திலமைந்துள்ள பூவிருந்தவல்லியையடுத்துள்ள பாணவேடுத் தோட்டம் என்னும் ஊரில் வாழும் திரு. குருதாசன், தம்முடைய பணியாட்களிடத்திலே அன்பையும் பரிவையும் பெரிதும் வழங்கி, அவற்றிற்கு மாற்றாக அவர்களுடைய தளரா உழைப்பையும், ஆர்வத்தையும் பெற்று, காடு திருத்திக் கழனியாக்கி, நன்செய், புன்செய்யாக, இன்றைக்கு 60 ஏக்கர் நிலங்களில், திறமையான முறையில் வேளாண்மை செய்கிறார்.

இவர், ஒர் ஏக்கர் நிலத்தில் ஐ. ஆர்-8 பயிர் செய்யக் கையாண்ட முறைகளையும், அவருக்கு ஐ. ஆர்-8 அளித்த ஆதாயத்தையும் இனிக் காண்போம்.

விதையளவு

வேளாண்மைக் கிடங்கிலிருந்து 15 கிலோ எடையுள்ள ஐ. ஆர்-8 விதைகளை வாங்கி, விதைப்பதற்கு முன், அவற்றை 'வெட் செரசான்' என்ற மருந்தை 1 கிலோ விதைக்கு 2 கிராம் என்ற முறையில் கணக்கிட்டுக் கலந்து, விதைகளைப் பக்குவப்படுத்திய பின்னர், 10 சென்ட்

வயற்பரப்பில்நாற்றங்கால்விட்டார்.

அடியுரமாக ஒரு வண்டிச் சுமை குப்பை எரு இட்ட பிறகு, விதைத்த 15ஆம் நாள், 10 கிலோ 'அமோனியம் சல்பேட்டை' மேலுரமாகப் போட்டார். 'பாராமார்' என்ற மருந்தைப் பயன்படுத்தி, நாற்றங் காலைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்தார்.

நடவு வயல்

இயந்திரக் கலப்பையைக்கொண்டு 6 சால் ஓட்டிய பிறகு, இரும்புச் சக்கரமும், சேறு கலக்கும் சுருவியையும் கொண்டு 2 சால் விடப்பட்டன.

வயலிற்குத் திரு. குருசாமி, என்னென்ன உரங்களிட்டார்? இதை அவரே கூறுகிறார்: ''வயலைச் சமப்படுத்துவதற்கு முன்பாக 15 வண்டிச் சுமை சாண எருவையும், நடவிற்கு ஒரு கிழமை முன்பாக 2000 கிலோ தழையுரத்தையும் நிலத்துடன் கலந்தேன். இரசாயன உரமாக 'ஸ்டாண்டர்ட் மிக்சர்-5'ஐ 400 கிலோ அடியுரமாக இட்டேன்.''

பின் செய்நேர்த்தி

நடவு முடிந்த 15 நாட்களுக்குப் பின்னர் ஒரு முறையும், நட்ட 30 நாட்கள் கழித்து ஒருமுறையும் களை யெடுக்கப்பட்டன. நடவிற்கு 30 நாட்கள் கழித்து ஏக்கருக்கு 50 கிலோ யூரியாவும், பிறகு நடவிலிருந்து 45 நாட்கள் கழித்து 30 கிலோ யூரியாவும் மேலுரங்களாக இடப்பட்டன.

பி.எச்.சி. 10 சதவீத மருந்தை ஏக்கருக்கு 20 கிலோ வீதம் களைக்கிட்டு நட்ட 15ஆம் நாள் தூவினர். பிறகு 10 நாட்கள் கழித்து 'டெமக்ரான்' 'குமான்' என்ற மருந்துகளைக் கையாண்டார். 45ஆம் நாள் 'ஃபாலிடால்', 'குமான்' ஆகியவற்றை மீண்டும் தெளித்தார்.

பயிர்களைப் பாதுகாக்க எல்லா முன்னேற்பாடுகளையும்முழுமையாகச் செய்து முடித்து, அறுவடை நாளை – பயன்தரும் நன்னாளை — ஆவலுடன் எதிர்நோக்கிய வண்ணமிருந்தார்.

அறுவடை

அந்த நாள் வந்தது. அறுவடையும் சிறப்பாக நடைபெற்றது. ஓர் ஏக்கர் நிலத்தில் இவருக்குக் கிடைத்த மொத்த விளைச்சல் 3500 கிலோ வாகும். இவற்றை விற்றதனால் ரூ. 2,700 கிடைத்தது. இவ்விளைச்சலைப் பெற்றதற்கு இவர் செலவிட்ட ரூ. 730ஐக் கழித்து, இவருக்குக் கிடைத்த இறுதி ஆதாயம் ரூ. 1970.

வெற்றியின் அடித்தளம்

''சிரணியைப் படிக்கும் அன்பர்களுக்கு நீங்கள் ஏதும் கூற விரும்புகளா?''



''எனக்கு வருவாயைத்தந்ததுடன் புகழையும் தேடித்தந்தது என்னுடைய வயல். இவற்றிற்கெல்லாம் உறுதுணையாக இருந்தவர்கள் என்னுடைய ஒன்றியத்தைச் சார்ந்த வேளாண்மை வளர்ச்சி அலுவலர், ஊர்ப்பணியாளர் ஆகியோர். ஸ்டேன்ஸ் உர நிறுவனத்தாரின் கலப்பு உரமும், யூரியாவும் என்னுடைய மிகு விளைச்சலுக்கு மற்றொரு காரணம்'' என்கிறார் அவர்.

''தாங்கள் வேளாண்மைச் செய்திகள், இதழ்கள் படிப்பதுண்டா?''

''அதை மறந்தே போனேன்... 'சீரணி', 'இன்டன்சிவ் அக்ரிகல்சர்' ஆகிய இதழ்களைத் தவறாது படிக்கிறேன். இவற்றில் பயனுள்ள நல்ல தகவல்கள் வெளியாகின்றன. அவற்றால் பெரும் பயன்பெற்றேன்'' என்று கூறினார் திரு. குருதாசன்.

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க :


பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற :

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்லிங் ஒர்க்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071
75, கலாசிபாளையம்
தபால் பெட்டி எண் 539
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ், பெங்களூர்-2

கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 81227
38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 677
இராயப்பேட்டை, சென்னை-14

கர்ப்பம் ஏற்பட்டுவிடுமே என்று அச்சமின்றி இல்லற வாழ்க்கையை இன்பமாக அனுபவியுங்கள்.

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பத்திரமான முறை ஆண்களுக்கு இப்பொழுது உண்டு. அதுதான் **நிரோத்**

ஆடவர்களின் உபயோகத்திற்கு உகந்த உயர்தரமான குடும்பக் கட்டுப்பாடு சாதனம்.

நிரோத்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

மூன்றின் விலை 15 பைசா அரசாங்க ஆதரவு விலையில் கிடைக்கிறது.





மூன்று முடிச்சு போதுமே!



டி. தமனபாய், காஞ்சீபுரம்

[இசைப் பாடல்]

விடியுமுன்னே எழுந்திருச்சி
வேலைசெய்து காசு சேர்த்தும்
வேதனையில் சாகிறேனே கடவுளே! கொஞ்சம்
விழியைத் திறந்துபாரும் கடவுளே!

நெருக்கமான இடத்தினிலே
சுருண்டு நானும் படுத்திருந்தேன்!
பொறுத்துப்பார்த்தா புள்ளூத்தாச்சி கடவுளே! - இந்தப்
பொல்லாப்புக்கு வழிசொல்லுடா கடவுளே!

கொஞ்சநஞ்சம் இல்லாமே
அஞ்சு ஆறை பெத்துப்புட்டுப்
பஞ்சத்திலே சாகிறேனே கடவுளே! - என்னே
வஞ்சம்ஏதும் செய்திடாதே கடவுளே!

மழையைநம்பி விதைவிதைத்து
வரவைநம்பி பெத்து வைச்சா
மக்கள்எப்படி வாழறது கடவுளே! - நீயும்
தக்கவழி சொல்லிப்போடு கடவுளே!

கவருமெண்டு வேலைசெய்தும்
கணக்கு ஒண்ணும் பாக்காமே
கண்டபடி புள்ளகுட்டி கடவுளே! இப்போ
கட்டுப்பாடு செய்துபுட்டேன் கடவுளே!

உற்பத்தியைப் பெருக்கச்சொன்னு
வூட்டிலேயே இருந்து புட்டேன்!
உபத்திரவம் தாங்கலியே கடவுளே! - இப்போ
ஊட்டுதற்கும் சோறில்லேயே கடவுளே!

ஆப்பரேஷன் முறையுமின்னு
அடிவயித்தை அரை அங்குலம்
அறுத்துதச்சி வைக்கிறுங்கோ கடவுளே! - அப்போ
'அய்யோ!குய்யோ' வலியுமில்லே கடவுளே!

கொஞ்சிப்பேசி கூடினாலும்
அஞ்சு பைசா 'நிரோத்' உறை
பஞ்சமின்றி விற்குதப்பா கடவுளே! - வெறி
தஞ்சமாகி ஒடுங்கிப்புடும் கடவுளே!

தொந்தரவா இருந்தாக்கூட
டூரா லூப்பு விற்குதப்பா!
மந்திரமோ! மாயமில்லே கடவுளே! - மனுஷன்
பொறக்கறதை தடுக்கிறது கடவுளே!

ஆண்டவனும் உந்தனுக்கு
அரும்புபோல ரெண்டு புள்ளே!
அவதி பட எங்களுக்கேன் ஆறு? - ஆசை
ஆருக்குத்தான் அதிகம் நீயேகூறு!

புத்தியோடு முறையைக்கொண்டு
புள்ளேகுட்டி அளவாப் பெத்து
பொழைக்கும்வழி தெரிஞ்சுகிட்டேன் கடவுளே! எங்க
பரம்பரைக்கும் சொல்லிடுவேன் கடவுளே!

பெற்றபிள்ளே மூன்றிலுலே
உற்றபேறு பெற்றி டலாம்
கற்றவராம் அறிஞர் வழிஒடு! - அவர்
பெற்றபெருஞ் சிரணியை நாடு.

அடுத்த இதழில் கலே
யுலக விண்மீனின்
காய்கறித் தோட்டம்
பற்றிய கட்டுரை இடம்
பெறும்.



இனடெனசிவ்

அக்ரகல்சர்

இதழிலிருந்து...



நாட்டின் சிறந்த உழவர் பெருமகன்

நம் நாட்டின் தலைசிறந்த உழவர் யார் என நீங்கள் அறியவேண்டாமா? அத்தோடு தமிழக உழவர்களுக்கு அடைந்திந்திய நிலையில் பரிசுகள் கிடைத்துள்ளனவா என்பதும் உங்களுக்குத் தெரியவேண்டாமா? படியுங்கள்.

ஆந்திர மாநிலத்தைச் சார்ந்த திரு. கங்கண்ணு அவர்கள்தாம், இந்திய நாட்டின் தலைசிறந்த உழவராவார். 1967-68 ஆம் ஆண்டிற்குரிய முதற்பரிசு இவருக்குக் கிடைத்துள்ளது.

தவிர, 'வேளாண்மை வல்லுநர்' (திருஷி பண்டிட்) என்ற அரிய விருதையும் இவருக்கு அளித்துப் பாராட்டியுள்ளனர்.

ஒரு ஹெக்டேர் நிலத்தில் 10,517 கிலோ எடையுள்ள நெல்லை உற்பத்தி செய்து, கோடானு கோடி உழவர் பெருமக்களுக்குச் சான்றாக விளங்கு கிறார் திரு. கங்கண்ணு அவர்கள்.

இவரையடுத்துக் கேரளத்தைச் சார்ந்த திரு. கே.ஜி. சுகுமாரன் அவர்கள் 8279 கிலோ நெல் அறுவடை செய்துள்ளார். குஜராத் உழவர் திரு. டி.பி. படேல் 6,612 கிலோ விளைச்சல் காட்டியுள்ளார்.

மற்றொரு சிறந்த உழவர்

1968-69 ஆம் ஆண்டு குறுகிய காலப் பயிரில், முதற்பரிசு பெற்ற வர் திரு. என்.ஏ. படேல் என்பவர். மகாராட்டிரத்திலுள்ள இவர் ஒரு ஹெக்டேரில் 9905 கிலோ நெல் அறுவடை செய்தார். இவருக்கும் திரு. கங்கண்ணுவிற்கு அளிக்கப்பட்ட வேளாண்மை வல்லுநர் என்ற விருது அளிக்கப்பட்டுள்ளது.


8210 கிலோ எடை விளைச்சலைக் காட்டிய திரு. ஆர்.டி. பாடீல் அவர்களுக்கு இரண்டாவது பரிசும், குஜராத் உழவர் திரு. எம்.எஸ். படேலுக்கு மூன்றாவது பரிசும் கிடைத்துள்ளது. முதல், இரண்டாவது பரிசுகளைப் பெற்றவர்கள் மகாராட்டிர மாநிலத்தவர்கள்.

தமிழக உழவர்களுக்குப் பரிசுகள்

1967-68 ஆம் ஆண்டிற்கான நீண்ட காலச் சோளப் பயிர்ப் போட்டியில் முதற்பரிசு பெற்றவரும் மகாராட்டிர மாநிலத்தவர்தாம். திரு. எஸ் கே. நூமல் என்ற இவ்வுழவர் ஹெக்டேர் ஒன்றிற்கு 7600 கிலோ சோளம் விளைச்சல் கண்டவர்.

இப்பயிரில் இரண்டாவது, மூன்றாவது பரிசுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தமிழக உழவர்கள். இரண்டாவது பரிசு திரு. கே.ஆர். கவுண்டர் அவர்களுக்கும், மூன்றாவது பரிசு, திரு. ஏ.பி.எஸ். கவுண்டர் அவர்களுக்கும் கிடைத்தன. இவர்கள் முறையே 6541 கிலோ, 5125 கிலோ விளைச்சல் காட்டினர்.

பரிசுத் தொகைகள் எவ்வளவு? முதற்பரிசு ரூ. 3,000, இரண்டாம், மூன்றும் பரிசுகள் முறையே ரூ. 1200, ரூ. 800 ஆவன.



பசுமைப் புரட்சியைக் கண்டோம். அரிசிப் புரட்சியைக் காண்போம். பழையன கழிந்தன; புதியன புகுந்தன.

சில சமயங்களில் இரண்டு, மூன்றினங்கள் சேர்ந்தே வந்து ஆட்சி செலுத்தியுள்ளன; அவற்றைச் சிறிது காண்போம்.

1965ஆம் ஆண்டில் டாய்ச்சுங் நேடிவ்-1 இந்நாட்டினுள் புகுந்தது. அதற்கு அடுத்த ஆண்டே ஐ. ஆர்-8 வந்து சேர்ந்தது. பல மாநிலங்களில் பழைய இனங்கள் பின்னடைந்தன. இந்தப் புதிய ஈரினங்களும், ஒரு ஹெக்டேரில் 13 டன்கள்வரை விளைச்சலைத் தந்தன. ஒரே விளைச்சல்! இம் மாபெரும் உற்பத்தியை, நாம் கனவில்கூட எண்ணிப் பார்க்கவில்லை.

பத்மா, ஜெயா!

1968 மலர்ந்தது. தோழியர்கள் ஜெயா, பத்மா வந்தனர். மிகு விளைச்சல், சிறந்த அரிசிக்குப் பெயர் பெற்றவர்கள் இவ்விருவரும். இந்தியாவிலேயே வளர்க்கப்பெற்ற ஜெயா, பத்மா ஆகியோர் குறுகிய காலப் பயிரில் பெரும் பரப்பளவில் பயிரிடப்பட விருக்கின்றனர்.

மேலும் சில புதிய இனங்கள் விரைவில் உதயமாகி, உழவர்களின் வாழ்வில் ஒளிவீச இருக்கின்றன. இவற்றில் சிறப்பாக பி.எஸ்.எஸ்.873 ஐ.ஆர்-5-114 ஆகியவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம். பி.எஸ்.எஸ்.873 வகை, ஓரிசாவில் பயிராகும் டி-41உடன் ஒட்டுமுறையில் உண்டாக்கப்பட்டது. ஐ.ஆர்-5-114 இனமானது, பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள, அனைத்துலக அரிசி ஆராய்ச்சிக் கழகத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். டாய்ச்சுங் நேடிவ்-1 மற்றும் ஐ.ஆர்-8 போன்றல்லாமல், இவை நீருக்கடியில் வெகுகாலம் கெடாதிருக்கக் கூடியவை. எனவே, குறுகிய காலப் பயிர் முறைக்கு இவை இரண்டும் சாலச் சிறந்தவை. 1970ஆம் ஆண்டில் இவை உழவர்களுக்குக் கிடைக்கும்.

புத்தாண்டில் புதிய இனங்கள்

கட்டக் நகரில் 1946ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மைய அரிசி ஆராய்ச்சிக் கழகம், புதிய வித்துக்களை உருவாக்குவதில் சிறந்த சேவையாற்றுகிறது. இங்கு பற்பல வித்துக்கள் இன்னும் சோதனையிலுள்ளன. அவற்றில் சில இனங்கள், வரும் ஆண்டுகளில் வெளிவரவிருக்கின்றன.

ஒவ்வொரு விதையையும் பயிரிடு தற்குரிய பயிர் முறைகளையும் இக் கழகம் தொகுத்துள்ளது. அவை உழவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

நிலச் சீர்திருத்தம் – மகத்தான சாதனை

* பாடுபடும் ஏழை விவசாயிகளைச் சுரண்டி, இடையே நின்று உரிமை கொண்டாடிக்கொண்டு, இடைத் தரகர்களாக இருந்த ஜமீன்தாரி, ஜாகீர், இனம் முறை ஒழித்துக்கட்டப் பட்டுவிட்டது. நம் நாட்டின் நிலப்பரப்பில் 40 சதவிகித அளவுக்குமேல் இவர்கள் பிடியிலே இருந்த இந்த முறைக்கு ஒரு முடிவு கட்டியாகிவிட்டது. இதனால், இவர்களின்கீழ் நசுங்கிக்கொண்டிருந்த 20 கோடி விவசாயிகள் தங்கள் நிலங்களின் முழுச் சொந்தக்காரர்களாகிவிட்டனர்.

** நில உரிமைப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டதன் காரணமாக சுமார் 3 கோடி விவசாயிகளும் 7 மில்லியன் ஏக்கருக்குமேல் உள்ள நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகியிருக்கின்றனர்.

தகவல்: 'யோஜனா'

Articles reproduced from 'Panchayat Raj', 'Intensive Agriculture' etc. pages 71 to 77.

"பஞ்சாயதது ராஜ்" இதழிலிருந்து

கழிவு நீரில் கம்பு பயிரிட்டவர்

கழிவு நீரை வயலிற் செலுத்தி, நிலவளத்தைப் பெருக்கி, பின் கம்பு பயிரிட்டு மிகுவிளைச்சல் கண்டுள்ளார், திரு. சௌத்ரி பூத்சிங் என்னும் டில்லி உழவர்.

ஐம்பது ஏக்கர் பண்ணைக்குச் சொந்தக்காரரான திரு. சிங், கழிவு நீரைக்கொண்டே வழக்கமாகப் பாசனம் செய்வார். கழிவுநீரில் தாமிர, கந்தக, தாது, அமிலச் சத்துக்கள் அனைத்தும் மிகுந்திருப்பதாக அவர் கூறுகிறார். கழிவு நீர்வடி முனையில் ஒரு பாரசீகச்சக்கரத்தை நிறுவியுள்ளார். இச்சக்கரங்களே இடையருது இயக்கி, கழிவுநீரை வயல்களுக்குச் செலுத்துகிறார்.

கழிவுநீர்க் கதை

இவர் கழிவுநீரைப் பயன்படுத்தத் தொடங்கியதே ஒரு விந்தையான சூழ்நிலையில்தான். செங்கற்களை உற்பத்தி செய்யும் ஒருவருடைய பரந்த வெளியிலுள்ள சில பள்ளங்களில் கழிவுநீர் புகுந்துவிட்டது. இதைக் கண்ணுற்ற செங்கல் உற்பத்தியாளர் மிகவும் அஞ்சி திரு. சிங்கின் உதவியை நாடினார். திரு. சிங் முன்சொன்ன பாரசீகச் சக்கரத்தைப் பொருத்தி, கழிவு நீரை அகற்றி, தம் வயல்களுக்குப் பாசனம் செய்துகொண்டார். அப்போது அவருடைய வயல்களில் கோதுமை, கடுகு மற்றும் இதர பயிர்கள் வளர்ந்திருந்தன.

''நீங்கள் தாம் கழிவுநீரைக் கொண்டு வேளாண்மை செய்கிறீர்களே, தொழு உரமும், இரசாயன உரமும் வயலுக்கு இடுகிறீர்களா?'' என்ற கேள்விக்குத் திரு. சிங் கூறுகிறார்.

''என்னுடைய வயல்களில் பல உரக்குழிகள் உள்ளன. அவற்றில் பண்ணையுரமும், சாணமும் நிரப்பப் படுகின்றன. சோதனை முயற்சிக்காக, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இரசாயன உரங்கள் தருகிறார்கள்.''

நீண்ட காலப் பயிர்ப் பருவத்தில் மெக்கென் கோதுமையையும், குறுகிய பருவத்தில் ஒட்டுரகக் கம்பையும் திரு. சிங் பயிரிடுகிறார்.

''இப்பகுதியிலேயே கம்பு பயிரிட முடியாது என்று சக உழவர்கள் கூறினர்; இருப்பினும் நான் மனந் தளராது, கழிவு நீரைப் பாய்ச்சியே கம்பு பயிரிட்டு, அமோக விளைச்சலைப் பெற்றுள்ளேன்'' என்று தம் சாதனை களை மகிழ்வுடன் கூறுகிறார்.

பொதுத் தொண்டர்

பற்பல பயிர் விளைச்சல் போட்டிகளில் பங்குபெற்று, பரிசுகளைப் பெற்றுள்ள திரு. சிங், ஒய்வு வேளைகளில் சக உழவர்களுக்குப் பெரிதும் உதவுகிறார். கூட்டுறவுச் சங்கங்களின் சேவைகளைப் பெரிதும் ஊக்குவிக்கும் இவர், நவீன வேளாண்மை முறைகள் பற்றியும் பிறருக்கு விளக்கிக் கூறத் தவறுவதில்லை.

திரு. பூத்சிங் அவர்களிடம் இரண்டு பசுக்கள், இரு எருமைகள், நான்கு எருதுகள் உள்ளன. கால்நடைகளுக்கெனப் புற்களைப் பயிரிடுகிறார். குறுகிய காலப் பயிர்ப் பருவத்தில் சோளம், கம்பு ஆகியவற்றைப் பயிரிடுகிறார். இவ்விரண்டையும் பயிரிடுவதனால் மக்களுக்கு உணவும், கால்நடைகளுக்குச் சிறந்த தீவனங்களும் கிடைக்கின்றன என்பது அவர் கருத்து.

ஆண்டு முழுவதும் வேளாண்மை

மற்றக் காலங்களில் காய்கறிகளே யும் பயிரிடுகிறார். ஆண்டு முழுவதி லும் இவர் ஏதாவதொன்றைப் பயி ரிட்டுப் பயனடைந்து கொண்டே இருக்கிறார். காய்கறிகளே விற்பதற்கு டில்லி ஒரு சிறந்த சந்தை என்கிறார் திரு. சிங்.

ஆண்டொன்றிற்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை இவருக்கு வருவாய் கிடைக்கிறது. போர் வீரராகப் பணியாற்றி ஓய்வு பெற் றுள்ள திரு. சிங் வேளாண்மையைத் தழுவிச் சீரும் சிறப்புமாக வாழ்கிறார். அவர் வாழ்க!

வருவாய் உண்டு வனப்பும் உண்டு

ஊர் மக்களின் ஒன்றுபட்ட ஒத் துழைப்பால் சீர்கெட்டுக் கிடந்த ஓர் ஏரி,சீராக்கப்பட்டுச் செப்பனிடப் பட்டு, இன்றளவில் 50 ஏக்கர் நிலங் களுக்குப் போதிய பாசன வசதி அளிக்கிறது. இது நடந்தது கல்லூர் என்னும் ஊரில்; இது கொடகாரா வட்டாரத்தில் (கேரளம்) அமைந் துள்ளது.

'பாப்னேர் சீரா'என்றழைக்கப்படும் இவ்வேரி பல்லாண்டு காலமாகக் கவனிப்பாரற்றுப் போயிற்று. ஏரியும் மேடாகி விடவே, சில உழவர்கள் அதன் ஒரு பகுதியில் வாழைகளைப் பயிரிடலாயினர்.

அலுவலரை அணுகினர்

ஊர் மக்களே வரும் ஒன்று சேர்ந்து ஒரு விண்ணப்பத்தை எழுதிக் கையெழுத்திட்டுக் கொண்ட னர். வட்டார வளர்ச்சி அலுவலர் அவ்வூருக்கு வந்தபோது விண்ணப் பத்தை அவரிடம் அளித்து, குறை களை விளக்கி முறையிட்டனர். மக்க ளுடைய நிதி, பொருட்களையெல் லாம் ஒரு சேரத் திரட்டி ஊராட்சி யின் நல்லுதவியைக் கொண்டு ஏரி யைச் சீர்படுத்தக்கூடும் என்று வட்டார வளர்ச்சி அலுவலர் யோசனை கூறினர். இது மக்களுக்கு மிகவும் ஏற்றதாயிருந்தது.

கல்லூர்ப் பெருமக்கள் ஊராட்சித் தலைவரை அணுகினர். இப்பணி சிறப்பாக முடிவுற்றால், ஊராட்சி யின் நிதியிலிருந்து ரூ. 500 நன் கொடையளிப்பதாகத் தலைவர் கூறினார். இது மக்களை ஊக்குவித் தது.

பணி தொடங்கிற்று

இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 11ஆம் நாள் காலை 9 மணியளவில் ஏரியைச் சீர்படுத்தும் மகத்தான பணி தொடங்கிற்று. ஊர் மக்களில் பெரும்பாலோர் உழைப்பைத் தந்த னர். அவர்களெல்லோரும் அறுபது பேர்கள் அடங்கிய குழுக்களாகப் பிரிந்துகொண்டு, தங்களுக்குள் முறை வைத்துக்கொண்டு தொடர்ந் தாற்போல் பதினேந்து நாட்கள் திற முடன் பணியாற்றினர்.

இரண்டாவது கிழமையின் இறுதி யில் ஓர் அழகிய ஏரி அவர்கள் கண் முன்னே காட்சியளித்தது. 141 அடி நீளமும், 90 அடி அகலமும் கொண்ட அவ்வேரியின் ஆழம் 10½ அடி.

உழைப்பின் சின்னம்

தங்களுடைய உழைப்பின் வெற் றிச் சின்னமாக விளங்கும் ஏரியின் வனப்பைக் கண்டு, கல்லூர் மக்கள் களி பேருவகை அடைந்தனர். இச் சாதனைக்காக அவர்கள் ரூ. 3500 நன்கொடையளித்தனர்.

கல்லூர் மக்களின் தொண்டுள்ளம், சலியா உழைப்பு, தளரா ஆர்வம் ஆகியன ஒன்றுகக் கலந்து ஏரியை உரு வாக்கியுள்ளன. இதனால் நெல் வயல் களுக்கு இடையூறத பாசன வசதி கிடைத்துள்ளது; உற்பத்தி கூடி யுள்ளது.

வருவாய் உண்டு வனப்பும் உண்டு

ஏரியின் கரைகளில் தரமான தென்னங்கன்றுகளே ஊராட்சி நட் டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் அவை பலன் தரக்கூடும். அதனால் ஊராட்சிக்கும் வருவாய் உண்டு; மக்களுக்கும் ஒரு குளிர்ந்த அழகிய ஏரிக்கரை உண்டு. மற்றொன்றும் உண்டு—பாசன வசதி.

சீரிய தலைமை சிறப்பான பணிகள்

தென் கன்னட மாவட்டத்திலுள்ள (மைசூர் மாநிலம்) புத்தூர் வட்டத்தில் 51 ஊராட்சிகள் உள்ளன. இவற்றிலொன்று சவானூர்ஊராட்சியாகும். வரி நிலுவை ஏதுமின்றி, வரிகளனைத்தையும் திரட்டியுள்ள 24 ஊராட்சிகளில், சவானூர் ஊராட்சியும் ஒன்றெனத் திகழ்கிறது. இவ்வரிய பணிக்காக, இவ்வூராட்சி ஒரு சான்றிதழையும் பெற்றுள்ளது.

ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கென, சவானூர் மக்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்றதேயில்லை. எல்லா உறுப்பினர்களும் போட்டியின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவ்வாறே ஊராட்சி மன்றத் தலைவரும் போட்டியின்றியே பதவியேற்றுள்ளார்.

வேளாண்மை ஊர்

ஊராட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் அனைவரும் வேளாண்மையையே தமுவி வாழ்பவராவர். எனவே, அவர்கள் ஊரிலுள்ள எல்லா உழவர்களையும் நவீன முறையில் வேளாண்மை செய்யப் பெரிதும் ஊக்குவிக்கின்றனர். இங்குள்ள 221 உழவர் குடும்பங்களில், சுமார் 110 குடும்பங்கள், தீவிர வேளாண்மைத் திட்டத்தைக் கையாண்டு வேளாண்மை செய்கின்றனர். அவ்வாறு அவர்கள் திறம்பட வேளாண்மை செய்ததனால், ஓர் ஏக்கருக்கு 10 முதல் 12 குவிண்டல் வரை கூடுதல் விளைச்சல் கிடைத்துள்ளது. சுமார் 44 குடும்பங்கள் மிகு விளைச்சல் தரும் வித்துக்களை, சிறப்பாக ஐ.ஆர். 8 கொண்டு நெல் உற்பத்தி செய்துள்ளனர். ஒட்டுச் சோள இனத்தையும் இவர்கள் முறையாகப் பயிரிடுகின்றனர். இவ் விரண்டிலும் அவர்களுக்கு ஏக்கர் ஒன்றில் 20 முதல் 22 குவிண்டல் வரை அதிக உற்பத்தி கிடைத்துள்ளது.

இளைஞர் வேளாண்மைக் கழகம் இத்துறையில் பெரும் பங்கேற்று சிறந்த பணியாற்றுகிறது. தவிர, கூட்டுறவுச் சங்கங்களும் உரிய காலத்தில் விதைகள், உரங்கள், கடன் கூளைத் தந்து உழவர்களுக்குப் பெரிதும் உதவுகிறது.

முன்கூறியவாறு இங்குள்ள 221 குடும்பங்களில், 185 குடும்பங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இரண்டு நீரேற்று இயந்திரங்கள், 75 ஏக்கர் வயல்களுக்குப் பாசன வசதியளிக்கிறது. மேலும், இங்கு 25 எண்ணெய்ப் பொறிகளும், பாசன வசதியைத் தந்த வண்ணமுள்ளன. ஆண்டிற்கு இரண்டு முறை வேளாண்மை செய்யப்படுகிறது.

கல்வியில் நாட்டம்

கல்வி வளர்ச்சியில் சவானூர் ஊராட்சி மிகுந்த நாட்டம் செலுத்துகிறது. அரிசனக் குழந்தைகளுக்கு சீருடைகள் அளிக்கப்படுகின்றன. கல்வி கற்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. இதனால் பள்ளியில் கற்கும் குழந்தைகளின் வருகை பெருகியுள்ளது. சமணக் கோயிலின் உட்புறத்தில், ஓர் உயர்தொடக்கப் பள்ளியை, சவானூர் ஊராட்சி நிறுவியுள்ளது. இன்னும் இரண்டு திங்களில் ரூ. 18,000 செலவில் நான்கு அறைகள் கொண்ட ஒரு பள்ளிக் கட்டடம் உருவாகிவிடும். ஊர் மக்களின் நன்கொடையாலும், வட்ட வாரியத்தின் உதவியினலும், இப்பள்ளிக் கட்டடம் அமைக்கப்படுகிறது.

நீண்ட காலப் பேரவா

சவானூரிலேயே ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவி, இங்குள்ள 221 உழவர் குடும்பத்தினரின் குழந்தைகளும் தங்களுடைய ஊரிலேயே கல்வி கற்க வேண்டும் என்பதே, சவானூர் ஊராட்சியின் நீண்டகாலப் பேரவாவாகும். இதனைச் செயற்படுத்துதற்காக, ஊராட்சி அரிய பெரிய முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டுள்ளது பாராட்டத்தக்கது.

இதுவரை சுமார் ரூ. 50,000 வரை நன்கொடைகள் திரட்டப்பட்டுள்ளன. இத் தொகையைக் கொண்டு பள்ளிக் கட்டடம் நிறுவிய பின்னர், உயர்நிலைப் பள்ளி செயற்படத் தொடங்கும். அப்பள்ளியை ஐந்தாண்டுக் காலத்திற்கு, சவானூர் ஊராட்சியே நிர்வகிக்கும்.

அவர் காட்டிய வழி

''இக்கோயில் அர்ச்சகர் தற்போது குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார்; எனவே, அவர் தொடர்ந்து அர்ச்சகராகப் பணியாற்றக்கூடாது'' என்ற கோரிக்கையுடன் இஸ்லாம்பூர் (மேற்கு வங்கம்) மக்கள் கோயில் முன் கூடினர்.

நடந்தது இதுவே: 35 வயது நிரம்பிய திரு. இராம்பால் மாஜி அவர்கள் 4 குழந்தைகளுக்குத் தந்தை. மனைவி சில காலம் கருத்தடை வசியம் அணிந்து, மக்கட் பேற்றைத் தடுத்து வந்தார். இருப்பினும் ஒருநாள் திரு. மாஜி, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டு விட்டார். தம் முடைய முன்னோர்களின் தொழிலான அர்ச்சகப் பணியை, அவர் அறுவை சிகிச்சைக்குப் பின்னரும் தொடர்ந்தார். ஆனால் அது விவாதத்துக்குரிய தொன்றுகிவிட்டது.

அர்ச்சகர் வழியைப் பின்பற்றி...

மக்களின் கோரிக்கையைச் செவிமடுத்தவர் திரு. துர்காபத மண்டல் அவர்கள். இஸ்லாம்பூர் மக்களால் பெரிதும் மதிக்கப்படுபவரான திரு. மண்டல், தம் மக்களின் அறியாமையை விளக்கினர்.

''அர்ச்சகர் செய்துகொண்டுள்ள குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சையானது, மற்ற எந்த ஒரு அறுவை சிகிச்சையையும் போன்றதான். இதில் சிறப்பாக அல்லது கண்டனத்திற்குரியது ஒன்றுமில்லை. இன்னும் கூறவேண்டுமானால், நம் அர்ச்சகரின் செயலை நீங்கள் எல்லோரும் பின்பற்றவேண்டும்'' என்று திரு. மண்டல் கூறி, கூட்டத்தினரை மனநிறைவுடன் திரும்பச் செய்தார். திரு. மாஜி தம் பணியைத் தொடர்ந்தார்.

முதற் பெருமை

குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்தை இஸ்லாம்பூரில் தொடங்கிவைத்த நற்பெருமை, திரு. மண்டல் அவர்களையே பெரிதும் சாரும். குடும்பக் கட்டுப்பாடுபற்றி மக்கள் தீவிரமாக எண்ணுது, செயல்படாது, உறக்க நிலையிலிருந்த அக்காலத்தில், முதன் முதலாகத் தம் கைப்பணத்தைச் செலவிட்டு, பல கிலோ மீட்டர் பயணம் செய்து, அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் திரு. மண்டல்.

திரு. மண்டல், 27 வயது நிறைவெய்திய காலை, அவர் 2 குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டார். அவருடைய உறவினர் திரு. அனில் குமார், 3 குழந்தைகளுக்குத் தந்தை. திரு. மண்டல், உறவினரை அணுகி, குடும்பநலத் திட்டம்பற்றி விரிவாகக் கூறி, அவரைத் தம் எண்ணத்திற்கு இசைய வைத்துவிட்டார். முடிவில் இவ்விருவரும், ரூ. 80 வரை கைப் பணத்தைச் செலவிட்டு, 33 கிலோ மீட்டர்வரை பயணஞ் செய்து, அறுவை சிகிச்சை செய்துகொண்டு, மகிழ்ச்சியுடன் ஊர் மீண்டனர்.

சிறந்த மக்கள் சிறந்த வாழ்வு

ஒரு சுகாதார நிலையத்தில் மருந்து கலக்கித்தரும் பணியிலுள்ள திரு. மண்டல் அவர்களுக்குச் சிறிது நிலமும் இருக்கிறது. சிறிய குடும்பத்தைக்கொண்டுள்ள இவர், தற்போது சீரும், சிறப்புமாக, வளத்தோடு வாழ்கிறார். குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி அளிக்கிறார்; சத்துள்ள உணவுண்டு, தரமான உடைகளணிந்து பள்ளிக்குச் செல்கின்றனர் அவருடைய இரண்டே மக்களும். திரு. அனில் அவர்கள் வேளாண்மையில் மிகுந்த நாட்டஞ் செலுத்தி மிகு விளைச்சலைப் பெற்று, குடும்பத்தை நன்முறையில் நடாத்திச் செல்கிறார்.

இவ்விருவரின் குடும்பங்களையும், வாழ்க்கையையும் கண்ணுற்ற இஸ்லாம்பூர் மக்கள், திரு. மண்டல் அவர்களை அவ்வப்போது அணுகி, அறுவை சிகிச்சைகளைப்பற்றி வினவுகின்றனர். திரு. அனில் அவர்களையும் பேட்டி காண்கின்றனர். வருவோரின் விஞ்சக்கள், ஐயப்பாடுகளுக்கெல்லாம் திரு. மண்டல் அயராது பதிலளித்து, விளக்கிக் கூறி, பெரிதும் உதவுகிறார். தம்முடைய ஓய்வு நேரங்களில், தகுதி வாய்ந்த தந்தையர்களை மருத்துவ முகாமுக்கு அழைத்துச் செல்கிறார். அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னர், தந்தையர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவர்களை மீண்டும் அவரவர் இல்லங்களுக்கு இட்டுச் செல்கிறார்.

இன்றைய நிலையில், அவடைய வீடு, ஒரு சுறு சுறுப்பான குடும்பக் கட்டுப்பாடு ஆலோசனை நிலையம் போன்றுகிவிட்டது.

திரு. மண்டல் அவர்களின் சேவை இஸ்லாம்பூரைச் சார்ந்துள்ள நான்கைந்து ஊர்களுக்குப் பரவியுள்ளது. அவ்வூர் மக்களும் இவரை அணுகத் தொடங்கியுள்ளனர்.

திரு. மண்டல் அவர்களின் தளராத சிறந்த பணி மேலும் சிறப்படைய வாழ்த்துவோம்.




UCOBANK

ASSISTS AGRICULTURE

ASP/UCO-17/69

UCOBANK takes pride in having assisted thousands of farmers in various parts of the country by offering credit for purchase of farm implements, fertilisers, seeds, pesticides etc., and for land development, energising wells, lift irrigation schemes, construction of tubewells, digging of wells, construction of storage facilities, establishment of poultry, dairy units.
Take advantage of UCOBANK's assistance for all-round improvement.

UCOBANK PAVES PATH TO PROSPERITY



UNITED COMMERCIAL BANK


HEAD OFFICE: CALCUTTA

நீர் உயர
நெல் உயரும்


எம்.எஸ்எஸ்.ஐ.லியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகு கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.லியின் பம்ப் செட்டுகள். ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக கொண்ட பம்ப் செட்டுகள மட்டுமின்றி, தனி இணைப்புகான சக்கரங்களுக்கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. லி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC

PUMPSET



பழுதடைந்த விவசாயகருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.லி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.லி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழிக்க வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன கொள் அளவு 300 கன அங்குலம். எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.லி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் விகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS SMALL INDUSTRIES CORPORATION LTD

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்
35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

ஊராட்சித் தேர்தல்கள் - பர்மா, இலங்கையிலிருந்து நாடு பெயர்ந்தோர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல்.



[Electarol Rolls—Panchayats—Enumeration of Voters—Enumeration of Repatriates from Burma and Ceylon in the Rolls—Instructions issued]

[Memo No : 126014/A/Pt. Election/69-1, R.D.L.A., dt. 29-10-69]

ஊராட்சி வாக்காளர் பட்டியலில் வாக்காளர் ஒருவரைச் சேர்க்கும் தகுதி, ஒரு சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர் பட்டியலில் ஒருவரைச் சேர்க்க என்ன தகுதி வேண்டுமோ, அது போன்றதே யாகும். சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் சேர முதலும் முக்கிய மானதுமான தகுதி, வாக்காளர் ஓர் இந்தியக் குடிமகனாக இருக்கவேண்டு மென்பதேயாகும். பர்மா இலங்கை மற்ற இடங்களிலிருந்து நாடு பெயர்ந்துள்ளவர்கள் (Repatriates) இந்தியக் குடிமக்கள் தானா என்பதை ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆய்வு செய்து நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளதால், அப்படிப்பட்ட வர்களின் பட்டியலைத் தனியாக, வாக்காளர் பட்டியல் எடுப்போர் (Enumeraters) தயாரித்து, அப் பட்டியலைத் தகுந்த ஆய்வு செய்து, வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காகத் தாசில்தாருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென 'வாக்காளர் பட்டியல் எடுப்போருக்கான விளக்கக் குறிப்புகள்' என்ற ஏட்டில் 28ஆவது அறிவிப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு தேர்தல் கையேடு (Tamil Nadu Election Manual) நான்காவது பகுதியில் உள்ள வாக்காளர் பட்டியல் எடுப்போருக்கான விளக்கக் குறிப்புகளில் 7 (2)ஆவது குறிப்பில் கண்டுள்ள பொருளின்கீழ் பர்மாவிலிருந்து நாடு பெயர்ந்தோர்களை அயல்நாட்டுக் குடிகள் என்று கொள்ளமுடியாது; ஏனெனில் அவர்கள் இந்தியக் குடிமக்களாக உள்ள காரணத்தினால்தான் அவர்களைப் பர்மாவிலிருந்து வெளியேற்றினர்கள். அவர்கள் நம் கிராமங்களில் குடியேறிவிட்டார்கள்; ஆகவே அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிப்பு அனுப்பியுள்ளதாக அரசின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அரசு இதை மிகவும் கவனத்துடன் ஆய்வு செய்ததன் விளைவாக, பர்மா மற்றும் அயல்நாடுகளிலிருந்து நாடு பெயர்ந்தோர்கள் தொடர்பாக அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது குறித்து என்ன நடைமுறை கையாளப்படவேண்டும் என்பது பற்றி விளக்கமாக 18-3-66தேதியிட்ட பொது (தேர்தல்) துறையின் அரசுக் குறிப்பாணை எண் 11384/65-7இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (அவ்வாணையின் தமிழாக்கம் அடுத்த தலைப்பில் தரப்பட்டுள்ளது.) அந்தக் குறிப்பாணை

யில் சொல்லியுள்ள நடைமுறையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பின் பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படு கிறார்கள். பர்மாவிலிருந்து நாடு பெயர்ந்தோர் குறித்து ஒவ்வொருவ ராகத் தனித்தனியே அவர் இந்தியக் குடிமகனு இல்லையா என ஆய்ந்து, அதன் பிறகுதான் அவரை வாக் காளர் பட்டியலில் சேர்க்க நட வடிக்கை எடுக்கவேண்டும்.

[29-10-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை யின் அரசுக் குறிப்பாணை எண் 126104/A/Pt Election 69-1]

பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து நாடு பெயர்ந்தோர்களைச் சட்ட மன்ற வாக்காளர் பட்டியலில் சேர்த்தல்.

[Electoral Rolls—Madras Legislative Assembly—Annual Revision 1966-Inclusion of names of Burma and Ceylon Repatriates—Instructions.]

[Memo No: 11384/65-7, Public (Elections) dt. 18-3-1966.]

சட்டமன்ற வாக்காளர் பட்டியலில் தம் பெயர் சேர்க்கப்பட வேண்டுமென்றால் நாடு பெயர்ந்தோர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 1950ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் ஆகியவற்றில் உள்ள எல்லா நிபந்தனைகளையும் நிறைவு செய்யவேண்டும். தீர்வு காண வேண்டிய முக்கியமான பிரச்னை அவர்கள் இந்தியக் குடிமக்களா இல்லையா என்பதுதான்.

இந்தியக் குடிமக்கள் என்ற உரிமை பற்றிய சட்டபூர்வமான விதிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 5இலிருந்து 11வரை உள்ள விதிகளிலும் 1955ஆம் ஆண்டு குடி உரிமைச் சட்டத்திலும் (1955ஆம் ஆண்டு மத்தியச் சட்டம் 57) சொல்லப்பட்டுள்ளன. 5ஆவது விதியின் கீழ், அவ்விதியில் சொல்லப்பட்டுள்ள துணை விதிகளில் (aஇலிருந்து cவரை) குறிப்பிடப்பட்டுள்ளபடி, எந்த ஒருவரும் அரசியலில் அமைப்புச் சட்டம் தொடங்கிச் செயல்பட்ட நாளிலிருந்து, இந்திய நாட்டில் குடி இருப்போராக இருந்திருந்தால் அவர் ஒரு இந்தியக் குடிமகனாக ஏற்றுக்கொள்ளப்படுவார். இதன்படி அரசியல் அமைப்புச் சட்டம் 5ஆவது விதியின் கீழ் இந்தியக் குடிமகனாக உள்ள எந்த ஒருவரும் இலங்கைக்கோ அல்லது பர்மாவுக்கோ வியாபாரம் ஒன்றினை முடிப்பதற்காகவோ, அல்லது அதில் ஓர் ஆதாயம் பெறும்வரை அங்கு தங்குவதற்காவோ சென்றால், அவர் இந்தியக் குடிமகன் என்ற உரிமையை இழப்பதில்லை. ஆகவே, இந்திய அரசியல் சட்டத்தின் 5ஆவது விதியின் கீழ், இந்தியக் குடிமகனாக இருக்கும் ஒருவர் பர்மா அல்லது இலங்கை சென்றிருந்து இலங்கை அல்லது பர்மாவில் குடியுரிமை பெறுதிருந்து இப்பொழுது இந்தியாவுக்கு நாடு பெயர்ந்திருந்தால் அவர் தொடர்ந்து இந்தியக் குடிமகனாகவே கருதப்படுவார். 1955ஆம் ஆண்டு குடி உரிமைச் சட்டம் 3, 4 விதிகளின்படி இந்தியக் குடிமகனாக இருக்கும் ஒருவருக்கும் இது பொருந்தும். குடி உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட குடியுரிமை 9ஆவது பிரிவின் கீழ் நிறுத்தப்படாமல் இருக்கும் வரையிலும், 10ஆவது பிரிவின்கீழ் அவருடைய குடியுரிமை மைய அரசினால் எடுபட்டுப் போகாமல் இருக்கும் வரையிலும் அவர் ஓர் இந்தியக் குடிமகனாகத் தொடர்ந்து கொள்ளப்படுவார். ஆகவே, இந்தியக் குடிமகனாகத் தொடர்ந்து இருந்து கொண்டே, இலங்கை அல்லது பர்மா அரசுகள் அளிக்கும் தங்கி வாழும் அனுமதி (Resident Permits) யின் பேரில் தங்கியிருந்து, இப்பொழுது இந்தியாவுக்கு நாடு பெயர்ந்து வருபவர்களை வாக்காளர்

பட்டியல்களில் வாக்காளர்களாகச் சேர்ப்பதில் அவர்கள் இந்தியக் குடிமக்களாகக் கருதப்பட மாட்டார்கள்.

4. இந்தியக் குடிமகனை ஒருவர், வேறு ஒரு நாட்டின் குடிமகன் என்ற உரிமையைத் தானே விரும்பிப் பெற்றுக்கொண்டால், அவர் இந்தியக் குடிமகன் என்ற உரிமையை இழந்து விடுவார். (குடி உரிமைச் சட்டம் 9-வது பிரிவு காண்க.) அதேபோல், 8-வது பிரிவின்கீழ் ஒரு மனுச் செய்து இந்தியக் குடிமகன் என்ற உரிமையை வேண்டாம் என்று சொல்லிவிட்டவர், இந்தியக் குடிமகனுக்குக் கருதப்படமாட்டார். அப்படிப்பட்டவர்கள் 1955ஆம் ஆண்டு குடி உரிமைச் சட்டம் 5ஆவது பிரிவில் உள்ள விதிகளின்கீழ், அவர்களே இந்தியக் குடிமக்கள் என்று தாங்களே பதிவு செய்துகொள்ள வேண்டும். இந்தியாவுக்கு நாடு பெயர்ந்து, அந்நிய நாட்டு நுழைவுஉரிமைச் சீட்டு (Foreign passport) வைத்திருப்போரை இந்தியக் குடிமக்களாகக் கருதப்பட முடியாது. ஏன் எனில் அந்நியநாட்டு நுழைவு உரிமைச் சீட்டு வைத்திருப்பது ஒன்றே அவர்கள் அந்த வெளி நாட்டுக் குடி உரிமையைத் தாமே கேட்டுப் பெற்றிருக்கிறார்கள் என்ற கருத்துக்கு இடமளிக்கிறது. (1956 ஆம் ஆண்டு குடி உரிமை விதிகள் 3 ஆவது பிரிவு விதி 3 காண்க.) இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களாகஇருந்து, இன்று எந்த நாட்டிலும் நாட்டு உரிமை கொண்டாடமுடியாத நிலையில் உள்ளவர்கள் (Stateless Nationals) பர்மா இலங்கையிலிருந்து இந்த நாட்டிற்குத் திரும்பி வந்தவர்களாக இருந்தால், 1955-ஆம் ஆண்டு மத்திய சட்டம் 57இல் 5ஆவது பிரிவின்கீழ் பதிவு செய்துகொள்வதின் மூலமாகவோ அல்லது அந்தச் சட்டத்தின் 6ஆவது பிரிவின்கீழ் அயல் நாட்டவருக்குக் குடிஉரிமை வழங்கும் முறையின் மூலமாகவோ இந்தியக் குடி உரிமையைப் பெறலாம். பதிவு செய்துகொள்வதின் மூலம் குடி உரிமையைப் பெறுவதற்கான நிபந்தனைகளும், அயல் நாட்டவருக்குக் குடி உரிமை வழங்கும் முறையின் மூலமாகக் குடி உரிமைப் பெறுவதற்கான நிபந்தனைகளும் வெவ்வேறானவையாகும். நாட்டுக் குடி உரிமை எதுவும் பெற்றிராதவர்களே இந்த நாட்டின் குடிமக்களாக ஏற்றுக் கொள்கின்ற முறையானது, ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக உள்ள நிலைகளைக்கேற்பவும், அதற்கான நிலைகளுக்கொப்பவும், நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

5. மேலே 2, 3 பத்திகளில் விளக்கியுள்ள சட்ட நுணுக்க விளக்கத்தை ஒட்டி, இலங்கை, பர்மாவிலிருந்து நாடு பெயர்ந்து வந்துள்ள ஒருவர் குடிமகனு இல்லையா என்பது, ஒவ்வொருநபருக்கும் அவரவர்களுக்கான நிலையினையும், அவர் சம்பந்தமான செய்திகளுக்கேற்பவும், அயல்நாட்டில் அவர் நிலை, மற்றும் பல்வேறு சூழ் நிலைகளையும் கவனத்தில் கொண்டு முடிவு செய்யப்படவேண்டும். பர்மா அல்லது இலங்கையிலிருந்து நாடு பெயர்ந்து வந்துள்ளோர், வாக்காளர் பட்டியலில் தம்மைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கோரும்பொழுது, அவர் உண்மையில் இந்தியக் குடிமகன்தானு என்பதைப் பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென வாக்காளர்ப் பதிவு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். நாடு பெயர்ந்து வந்துள்ள ஒருவரை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு முன்னுல், அவர் இந்தியக் குடிமகன்தானு அல்லது குடி உரிமைச் சட்டத்தின்கீழ் இந்தியக் குடி உரிமையைப் பெற்றிருக்கிறாரா என்பதுபற்றி வாக்காளர் பதிவு அதிகாரிகள் தெளிவாகத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

[18-3-1966ஆம் தேதியிட்ட பொதுத்துறை (தேர்தல்)யின் அரசுக் குறிப்பாணை எண் 11384/65-7]

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊராட்சிகள் திருத்தியமைக்கப்படுகின்றன.

[Panchayats—Kanyakumari District—Reorganisation and reconstitution of Panchayats—Proposals—Approved.]

1956இல் கன்னியாகுமரி மாவட்டமானது, தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட்டபொழுது, அந்த மாவட்டம் முழுதும் 46 ஊராட்சிகளை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த ஊராட்சிகள் திருவாங்கூர்-கொச்சின் ஊராட்சியின் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டன. இந்த மாவட்டத்திற்கு 1958ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டமானது, 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 27ன்கீழ், அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த ஊராட்சிகள் பேரூராட்சிகளாக வகைப்படுத்தப்பட்டன. வீட்டுவரி இணைமானியம் செலுத்தும் காரியங்களுக்கு, இவை கிராம ஊராட்சிகளாகவே கொள்ளப்பட்டன.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றுள்ள ஊராட்சி அமைப்பு முறையை மாநிலத்தின் மற்றப் பகுதிகளில் உள்ளதுபோலவே கொண்டு வருவதற்காக வேண்டி, இம்மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளைத் திருத்தியமைப்பதும், இப்பொழுதுள்ள பேரூராட்சிகளைப் பலவேறு சிறுசிறு பிரிவுகளாகப் பிரிப்பதும் அவசியமாகிறது. இப்பொழுதுள்ள ஊராட்சிகளைப் பிரித்துத் திருத்தி அமைப்பதற்கான கருத்துரைகளை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியுள்ளார். இப்பொழுதுள்ள ஊராட்சிகளை 64 பேரூராட்சிகளாகவும், 224 கிராம ஊராட்சிகளாகவும் கீழ்க்கண்ட முறையில் திருத்தியமைக்கும் முறையில் பரிந்துரை செய்துள்ளார்.

வரிசை எண்	ஊராட்சி ஒன்றியத்தின் பெயர்	இப்பொழுதுள்ள பேரூராட்சிகள்	திருத்தியமைக்கப்படும் ஊராட்சிகளின் எண்ணிக்கை	
			கிராம ஊராட்சிகள்	பேரூராட்சிகள்
1.	அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்	6	8 (எட்டு)	20 (இருபது)
2.	இராசக்காமங்கலம் ஊராட்சி ஒன்றியம்	5	6 (ஆறு)	27 (இருபத்து ஏழு)
3.	தோவாளை ஊராட்சி ஒன்றியம்	5	4 (நான்கு)	33 முப்பத்து மூன்று
4.	திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம்	5	8 (எட்டு)	18 (பதினெட்டு)
5.	துக்களை ஊராட்சி ஒன்றியம்	4	9 (ஒன்பது)	21 இருபத்து ஒன்று
6.	குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றியம்	5	9 (ஒன்பது)	23 இருபத்து மூன்று
7.	கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்	5	6 (ஆறு)	34 (மூப்பத்து நாலு)
8.	முன்சிறை ஊராட்சி ஒன்றியம்	6	7 (ஏழு)	28 (இருபத்து எட்டு)
9.	மேல்புரம் ஊராட்சி ஒன்றியம்	5	7 (ஏழு)	20 (இருபது)

3. இந்தக் கோரிக்கைகளை அரசு மிகவும் கவனத்துடன் ஆய்வு செய்து அதற்குப் பொதுவான ஒப்புதலை அளிக்கிறது.

4. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்டுள்ள நடைமுறையின்படி இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். பிரதேசங்களை விலக்குதல் இன்னும் இதுபோன்ற செய்திகளில் அறிவிப்பு வரைவுகளை மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்யுமாறு அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அந்த அறிவிப்புகளில் சர்வே எண்கள் தவறில்லாமல் தெளிவான முறையில் குறிப்பிடப்படும் வகையில் அவர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. சட்ட மன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளைப் பிரித்தல், வீட்டு எண்கள் குறித்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இந்தக் கோரிக்கைக்குப் பொது (தேர்தல்) துறையினரின் தடையேதுமில்லை. 5-6-69 தேதியிட்ட பொதுத்துறை (தேர்தல்)யின் அரசு ஆணை எண் 1059இல் சொல்லப்பட்டுள்ள நடைமுறைக் குறிப்புகள் மிகவும் கண்டிப்பாகப் பின்பற்றப் படவேண்டும்.

[11-11-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசுக் குறிப்பாணை எண் 81733/PE/69-4ன் தமிழாக்கம்]

கொடைக்கானல் நகரியக்குழு - உறுப்பினர்கள் நியமனம்.

[Township—Kodaikanal Township Committee—Nomination of members—Notification—Issued.]

[G.O. Ms. No: 1801, R.D.L.A, Dt. 23-9-69.]

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 4 ஆவது பிரிவு துணைப் பிரிவு (3) இன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொடைக்கானல் நகரியக் குழு உறுப்பினர்களாக 1-10-69 முதல் மூன்றாண்டுக் காலத்திற்கு அரசு நியமிக்கிறது.

அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள்

1. திரு. டபிள்யூ. பி.ஏ. ஆர். நாகராசன்

2. திரு. ஜே. சாமிதாஸ், 'ஹாலிடே ஹோம்' கொடைக்கானல்.

3. திரு. கே. எம். மேத்தா, சட்ட மன்ற உறுப்பினர்.

அரசு அலுவலர்கள்

1. மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை—தலைவர்.

2. உதவி மாவட்ட ஆட்சித் தலைவர், பெரியகுளம்.

3. மாவட்ட வனத்துறை அதிகாரி, மதுரை (வடக்குப் பகுதி)

4. மருத்துவ அதிகாரி (பொறுப்பு), அரசு மருத்துவமனை, கொடைக்கானல்.

5. தொகுட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), திண்டுக்கல்.

6. மாவட்டக் கல்வி அதிகாரி (கொடைக்கானல் நகரியப் பகுதியைத் தன் அதிகார எல்லைக்குள் கொண்டவர்.)

7. நிர்வாகப் பொறியாளர் (பொதுப்பணித்துறை), பெரியகுளம்

8. மீன் வளத்துறை உதவி இயக்குநர், மதுரை.

[23-9-69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி - உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண் 1801இன் தமிழாக்கம்]

வறட்சிப் பகுதிகளில் கிணறுகள் தோண்டுதல்.

[Panchayat Development—Wells in scarcity areas—Distribution of funds to Districts—clasitication issued.]

[Memo. No: 107599/P1/69-8, R.D.L.A., dt. 4-11-69.]

4-9-69 தேதியிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண் 1668-ல், அவ்வாணையின் 2-வது பத்தியில் சொல்லியுள்ள முறையில் துன்பமான வறட்சிப் பகுதிகளில் கிணறுகள் தோண்டுவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 16 இலட்சத்தை எப்படிப் பகிர்ந்து செலவு செய்யவேண்டும் என்பது குறித்து உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. இப்படி நிதி ஒதுக்கீடு செய்ததிலிருந்து 5,000 ரூபாய் ஒரு கிணற்றுக்குஎன்பது வரையறை செய் துள்ளது, தெளிவான முறையில் அவ் வுத்தரவில் காணப்படவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட தொகையானது, நெருக்கடியான வறட்சிப் பகுதிகளில், ரூ. 5,000 ஒரு கிணற்றுக்கு என்ற அளவில் கிணறு கள் தோண்டுவதற்காகப் பயன் படுத்துவதற்குத்தான், முழுமானிய அடிப்படையில் இவ்வேலையானது செய்யப்படவேண்டும்.

2. சில மாவட்டங்களில் 5,000 ரூபாய்க்குள் ஒரு கிணறு தோண்டு வது இயலாத ஒன்று; இந்த வரை யறை அளவினை உயர்த்தவேண்டும் என்றும் கோரிக்கை வந்துள்ளது. அந்தந்தப் பகுதிகளின் தேவைகளை ஒட்டி, ஒரு கிணறு தோண்டுவதை அதற்கென்று ஒதுக்கீடு செய்துள்ள 5,000 ரூபாய்க்கு மேலும் செய்ய லாம்; ஆனால் மேலே சொல்லப்பட்ட ஆணை எண் 1668-ல் 2-வது பத்தியில் காட்டியுள்ள, ஒவ்வொரு மாவட்டத் திற்கும் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை அளவானது எந்த வகையி லும் அதற்கு மேற்படாமல் பார்த் துக் கொள்ளவேண்டும்.

[4—11—69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை யின் அரசுக் குறிப்பாணை எண் 107599/p- 1/69-8.

மனித நானை இயங்கும் பம்பு செட்டுகளுக்கு கிராமப் பணிகள் கிட்டத்தில் சேர்த்தல்.

[RURAL WATER SUPPLY—Sinking of Tube—Wells and bore—Wells for drinking water—Supply—Inclusion in the Categories of works permitted under the village works Grant—Ordered.]

[Memo. No: 39691/P4/67/-47, R.D.L.A. dt. 20-8-69.]

அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பி னர்களின் நலனுக்காக வேண்டி, குழாய்க்கிணறுகள், நீரூற்றுக் கிணறு கூம்புப் பழுது பார்த்தல், மேலும் அவைகளைச் சீராக்கிச் செப்பனிடுதல் போன்ற வேலைகள் செய்வதை, முழுமானிய அடிப்படையில், கிராம வேலைகள் மானியத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று 5-5-64 தேதி யிட்ட ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் குறிப்பாணை எண் 169578 p5/63-5-ல் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன. ஆனால் அரசின் தெளிவான உத்தரவு இல்லாமல், புதிய குழாய்க் கிணறுகள் - நீரூற்றுக் கிணறுகள் வேலையை, கிராம வேலைகள் மானி யத்தின் கீழ் செய்ய அனுமதி அளிப் பதற்கு மாநிலத் தலைமைக் கணக் காயர் (Accountant General) எதிர்ப் புத் தெரிவிப்பதாக, கிராம வளர்ச்சி இயக்குநர், அரசுக்குத் தெரிவித்துள் ளார். கிராம வேலைகள் மானியத்

தின்கீழ் குழாய்க் கிணறுகள், நீரூற்றுக் கிணறுகள் பழுது பார்த்தல், செப்பனிட்டுச் சீராக்குதல் போன்ற வேலைகளைச் செய்ய அரசு முன்பே அனுமதி அளித்திருப்பதனால், புதிய வேலைகளுக்கும் அனுமதி அளிக்கப் பட்டுள்ளது என்றுதான் அதன்மூலம் கொள்ளவேண்டும். இவ் வேலைத் திட்டத்தின் கீழ் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல் என்பது மிகவும் அடிப்படைத் தேவைகளில் ஒன்று என்று கொள்ளப்பட்டுள்ளதால், குடிதண்ணீர் வழங்குவதற்காகக் குழாய்க் கிணறுகள்-நீரூற்றுக் கிணறுகள் அமைத்தலையும், இதனால் கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல் என்கின்ற அடிப்படை வசதியை அளிக்கிறபடியால், கிராம வேலைகள் மானியங்களின் கீழ் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலே கண்டுள்ள நிலையில், குழாய்க் கிணறுகள்-நீரூற்றுக் கிணறுகளை அமைத்தலையும் கிராம வேலைகள் மானியத்தின் கீழே செய்து கொள்ள, கிழ்க்கண்ட நிபந்தனைகளின்கீழ், அரசு அனுமதிக்கிறது :

(i) குழாய்க் கிணறு, நீரூற்றுக் கிணறுக்காகச் செலவு ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரயத்திற்கு) மேல் ஆகக் கூடாது.

இந்த வரையறை அளவீனை மீறிச் செலவு ஆகும் பொழுது, அரசின் முன் அனுமதியினைப் பெறவேண்டும்.

(ii) அப்படிப்பட்ட ஒவ்வொரு வேலையையும் செய்வதற்குக் கோட்டப் பொறியாளரின் (நெடுஞ்சாலை - கிராமவேலைகள்) தொழில் நுட்ப அனுமதி (Technical Sanction) இருக்க வேண்டும்.

(iii) அரிசன மக்களின் நலனுக்காக எடுக்கப்படும் குழாய்க் கிணறுகளுக்காகும் செலவில் 15 சத விகிதத்தை அரிசன நலத் துறை தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

[*20—8—69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் குறிப்பாணை எண் 39698/p4/67-47-ன் தமிழாக்கம்*]

குடிதண்ணீர் வசதிக்காகக் குழாய்க் கிணறுகள் நீரூற்றுக் கிணறுகள் தோண்டுதல்.

[Village works Programme—Construction of automatic pressure tanks under Village Works Programme—Orders issued.]

[G.O. Ms. No: 2121, R.D.L.A. dt. 4-11-69.]

தானே இயங்கும் பம்பு செட்டுகள் அமைப்பதைக் கிராம வேலைகள் திட்டத்தின்கீழ் நிறைவேற்ற உரிமை வழங்கப்படவில்லை என்று கிராம வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆனால், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, மற்றும் சில இடங்களில் ஊராட்சிகள் தானே இயங்கும் பம்பு செட்டுகளை அமைத்து வருகின்றனர். 500-க்கு மேற்படாத மக்களுக்கும், வீட்டுக் காரியங்களுக்கும் தானே இயங்கும் பம்பு செட்டு மிகவும் பொருத்தமான சாதனமாகும். எங்கே விரிவுபடுத்தப்பட்ட பெரிய அளவில் நடைபெறும் விதியோக முறை தேவையில்லையோ, அப்படிப்பட்ட கிராமங்களிலெல்லாம் தானே இயங்கும் அழுத்தும் சக்தி வாய்ந்த பம்பு செட்டுகளை (automatic pressure pumps) வைத்தலைக் கிராம வேலைகள் திட்டத்தின் கீழ்க் கொண்டு வரப்படலாம் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2. தானே இயங்கும் அழுத்தும் சக்தி வாய்ந்த பம்புத் தொட்டிகள் சிக்கனமானவை; வேகமாக இயங்க வைக்கக் கூடியவையாக இருப்பதினால், அவைகளைக் கையாளலாம் என்பதினால், கிராம வளர்ச்சி

இயக்குநர் தெரிவித்த கருத்துக்கு, தலைமைப் பொறியாளர் (நெடுஞ் சாலை - கிராமப்பணிகள்) ஒப்புதல் அளித்துள்ளார்.

3. அரசு இக்கருத்தினைக் கவனத்துடன் ஆராய்ந்து இந்த யோசனையை ஏற்றுக்கொள்கிறது. விரிவு படுத்தப்பட்ட விதியோக முறை தேவையில் லாத இடங்களில், தானே இயங்கும் அழுத்தும் சக்தி வாய்ந்த தொட்டிகள் அமைத்தல், கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் ஒப்புக்கொள்ளப் பட்ட வேலைகளில் ஒன்றாகக் கொள்வதற்கு அரசு அனுமதி அளிக்கிறது.

4. தானே இயங்கும் அழுத்தும் சக்தி வாய்ந்த தொட்டிகள் அமைப்பதற்கு ஒரு மாதிரி அமைப்பீன (Type design) முடிவு செய்து, அதைச் செயல் படுத்தவேண்டி, கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பிவைக்குமாறு, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

[4—11—69 தேதியிட்ட ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 2141.]

மேலும் இரண்டு தாய்சேய் நல நிலையங்கள்

[Women and Child Welfare—Child Welfare Centres—Selection of two Centres in Tamial Nadu—Orders—Issued.


[Memo. No: 86129/WW/69-2, dt. 10-11-69,]

25-9-69 தேதியிட்ட சமூக நலத் துறை அரசு ஆணை எண் 664-ல், தமிழ்நாட்டில் மேலும் இரண்டு குடும்ப - சேய் நல நிலையங்கள் தொடங்க அனுமதி அளித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்நிலையங்களை எந்த இடங்களில் வைக்கலாம் என்பது பற்றி மாதர் நலத் துறை இயக்குநர் கருத்துத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். அதன்படி, கோயமுத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையத்திலும், மதுரை மாவட்டம் ஆத்தூரிலும் இவ்விரு நிலையங்களையும் தொடங்கலாம் என்றும் 14—11—69 முதல் இவை செயல் படத்தொடங்கலாம் என்றும் மகளிர் நலத்துறை இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மகளிர் நலத்துறை இயக்குநரின் கருத்தினை அரசு ஒப்புக்கொண்டு, பத்தி 1-ல் குறிப்பிட்டுள்ள அரசு ஆணையில் அனுமதிக்கப் பட்டுள்ள குடும்ப-சேய் நல நிலையங்கள் இரண்டும் முறையே கோயமுத்தூர் மாவட்டம் பெரிய நாயக்கன் பாளையத்திலும், மதுரை மாவட்டம் ஆத்தூரிலும் 14—11—69 முதல் தொடங்கப் பெறலாம் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

[10—11—69 தேதியிட்ட சமூக நலத்துறையின் அரசு குறிப்பாணை எண். 86129/ww/69-2.]

———



''சீரணி'' குழந்தைகள் மலரில் மணிமொழி அவர்களின் குடும்பநலத் திட்டம் ஏன்?' என்ற கவிதை (நவம்பர் 1969) கண்டேன். களிப்புக் கொண்டேன். கவிதை கன்னற்சுவைபோல் இனித்தது. அவர் ஆடவரோ! பெண்டிரோ! தெரியவில்லை. அண்மையில் மணம் முடித்தவரோ, என்னவோ? ஆகா! அனுபவம் பேசுகிறது. மிகவும் பிரமாதமாக உள்ளது.

அடுத்தபடியாக ''உழவன் மகள்'' என்ற கதை ஒரு தேர்ந்த விவசாயி எழுதியதுபோல் உள்ளது. அதை எழுதியவரின் (சுப்பையா ஐ. ஏ. எஸ்) தொழில் அரசு அலுவலராக உள்ளது. போதிய வாய்ப்புக்கள் கொடுத்தால் அரசு அலுவலர்களுடன் அருமையான கதைகள் எழுதுவார்கள் என்பது இதிலிருந்து தெரிகின்றது. மொத்தத்தில் 'சீரணி' மணமான மலர்க்கதம்பமாக இருக்கிறது.

இங்ஙனம்

எ. வே. சுப்ரமணியம்,

தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி

அக்கமநாயக்கன் புதூர்

பழனி வட்டம்

''கிராம நலம்'' பொலிவுடன் புது எழிலுடன் ''சீரணி'' என்று மாறி இலக்கியப் பெட்டகமாய், அரசின் செயற் திட்டங்களை விளக்கும் ஏடாய், வருவது கண்டு, உளம் பூரித்தேன். ஏட்டிற்கு என் உதவியை அளிக்க எண்ணினேன். இதோ அந்த உதவியைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கிராமத்து மங்கை ஒருத்தி அம்பர் இராட்டை சுற்றுவதை வண்ணப்படமாக்கி அனுப்பியுள்ளேன். ''சீரணி'' இதழ் அட்டைப் படத்திற்கு ஏற்றதாயிருக்கும்; என் புகைப்படமெடுக்கும் ஆர்வத்திற்கு உங்கள் அன்பான ஆதரவு கிட்டுமென நம்புகிறேன்.

அன்புள்ள

வி. நாகசுந்தரம்

வட்டத் துணைச் செயலாளர்,

வேடசந்தூர் வட்ட தி. மு. கழகம்

மதுரை வட்டம்

தொடர்ந்து மூன்று 'சீரணி; இதழ் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. பெறும்பேறு பெற்றவனாய் உள்ளம் மகிழ்ந்தேன். கிராம உழவர்களுக்குப் பலவழிகளில் மிகவும் பயன் தரக்கூடிய பொன்னேடாக சீரணி, இத்தனை ஆண்டுகளாக வெளிவராமை தமிழக உழவர்களின் பேரிழப்பாகும். இவ்வாண்டு முதல் மலரும் ''சீரணி''க்கு, தமிழக உழவர் பெருமக்கள் சார்பாக, என் நன்றியையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலோநாட்டு விவசாய முறைபற்றிய கட்டுரைகள் இடம் பெறின், இன்னும் மணம்வீசும். ''சீரணி''க்கு என் உள்ளங்கனிந்த புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. வளர்ந்து ஓங்கட்டும் ''சீரணி''

ச. வீரப்பன்,

போதுபட்டி அஞ்சல்,

நாமக்கல் வட்டம்

சேலம் மாவட்டம்.

''சீரணி'' இதழ் நல்லமுறையில் இப்போது வெளியிடுவதுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். ஆங்கிலத்தில் உள்ள Readers Digest மாதிரியில் பல கட்டுரைகள், செய்திகள் வெளியிடுவது மிகவும் உபயோகமாக இருக்கிறது. முக்கியமாகப் புத்தகத்தின் அளவு கையில் வைத்துப் படிப்பதற்கு மிகவும் சௌகரியமாயிருப்பதால் ஒவ்வொரு மாதமும் என்னுல்அதைப் படிக்க முடிகிறது.

Intensive Agricultureலிருந்து சில பகுதிகள் வெளியிடுவது உபயோக மாக இருக்கிறது. அதேபோல் "Indian Farming" மாதாந்திர இதழிலிருந்து சில கட்டுரைகளைத் தமிழ்ப்படுத்தி வெளியிட்டால் எல் லோருக்கும் பயனுள்ளதாக இருக் கும். Indian Farming செப்டம்பர் மாத இதழில் 'கோவில்பட்டியில் புன்செய் நிலத்தில் கலப்பு விவசா யம்' பற்றி ஒரு நல்ல கட்டுரை வந் திருக்கிறது. அது மிகவும் பயனுள்ள தாக இருக்கிறது. அதை வெளியிட லாம்.

நவம்பர் மாத சிரணி மலரில் சத் தூட்டத் திட்டக் கருத்தரங்கில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சு முழு விவரங்களைப் படிக்க முடிந்தது. தங்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

எஸ். வி. இராமசுப்ரமணியம், பி.ஏ., முதல்வர், கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையம், தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்

பல ஆரம்பப் பள்ளிகளில் 'சிரணி' இதழ் தருவித்துப் படிக்கின் றோம்; பயனும் பெறுகின்றோம். சிரணியில் உள்ள செய்திகள், கதை கள், கட்டுரைகள் ஆகியவை நன்மை பயக்கும்படி உள்ளன. ஆனல் சிறுர்களுக்கோ உளம் குளிர வழி யில்லே.

சிரணியில் சிந்தை குளிரச் செய்தி கள் பலவுண்டு. இருப்பினும் சீர் தூக்கிப் பார்க்கின்ற சிறுவர் பகுதி யில்லே, சிறுவர்க்குக் கதையில்லே. அவர் மகிழ நகைச்சுவையில்லே. ஆகவே ஆக்கிடுவீர் சிறுவர் பகுதி! போக்கிடுவீர் அவர்தம் ஏக்கம்!

நா. ஆறுமுகம்
தலைமை ஆசிரியர், பழனி
ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, பெத்தனயக்கன்பட்டி, சின்னக்கலேயமுத்தூர், பழனி வட்டம்.

"சிரணி இதழ் சிறந்த இதழ்; சிறப்பான இதழ். அதைக் காணுந் தோறும் களிப்படைகிறேன், ஆத் மார்த்தமாக அமைதி அடைகிறேன். இதழின் விலே ரூ. 1 என்ருலும் குறை வாகவே இருக்கிறது என்று தோன் றும்போது முப்பத்தைந்து காசுகள் என்ற முத்திரையைப் பார்த்த வுடன் பரவசமடைந்தேன். கவிதை களும், கதைகளும், நிழற்படங்களும், சிறு சிறு துணுக்குக் கருத்துக்களும் வாசகர்களின் மனத்திரையில் நிழற் படமாகவே நின்றுவிடுகின்றன என் பதில் அணுவளவேனும் ஐயமில்லே.

நா. மலர்வனம்,
முதுகுளத்தூர்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

என வள்ளுவர் வாக்கிற்கிணங்க நீங்கள் நாட்டிற்கு விவசாயம் வளர அறிவு, பண்பு, கடமை, கட்டுப்பாடு இன்னும் எவ்வளவோ பல அரிய கருத்துக்களே சிரணி மூலம் வெளியிடு வது பாராட்டத் தக்கது. ஒவ்வோர் எழுத்தும் ஒரு பொன்மொழி எனத் தோன்றுகிறது.

ஜி. பராசக்தி
ஸ்ரீ முஷ்ணம்,
சிதம்பரம் வட்டம்

செந்தமிழ் அரசின் நவம்பர் 'சிரணி' எடுத்தேன். முல்லேச் சிரிப்பை முகப்பில் கண்டேன். குழந் தைகள் மலரைக் கொம்புத்தேனுக்கு குடித்து மகிழ்ந்தேன். அது மட்டுமா, கம்பின் தீஞ்சுவையும், உழவன் மகளின் ஒய்யார நடை (எழுத்து) யழகும், இனி எண்ணெய் இறக்கு மதியே இல்லே என்ற எழுச்சியான கட்டுரையும் இதில் உண்டு. நன்று நன்று!! வாழ்க நற்பணி, வளர்க சிரணி' இதழ்.

கோ. தனபால்

'அல்வி' 'அருணைமலர்' கலே,
இலக்கிய இதழ்களின் ஆசிரியக் குழுவினன்,
சிறுகதை எழுத்தாளன்,
திருவண்ணுமலே.

Sri B.L.S. Press, 'KAMALAM', Madras-24